Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 20.00
දිනමුරසු වාරමලර්
ஜூன். 01 - 07, 2006

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 664



## கடல் தாண்டும் தமிழர்களின் கண்ணீர்க் கதைகள்!

## ஐரோப்பியத் தடை புலிகளை முடக்குமா?



## கடத்தப்படும் பாலியல் அடிமைகள்

உள்ளே... 16




## பாடம் புகட்டிய வியட்நாம்!

அசத்தல் தொடர் ஆரம்பம்...

மசாலா மணி

ஸ் - ஷ்ரீ பிரின் அந்தரங்கம்!

பக்கம்- 17



## அலசல்: தமிழர் அரசியலில் மீண்டும் சம்பந்தன் எம். பி.

## முன்னறி தெய்வம்


**"அன்னையும்,** பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் ஆன்றோரின் அமுத மொழியைப் பற்றி ஆழமாகச் சிந்திப்பவர்கள் மிகக் குறைவாயிருந்த போதிலும், சிந்திப்பவர்கள் இல்லாமலில்லை. "முன் அறி தெய்வம்" என்பதன் கருப்பொருளை எடுத்துக் கொண்டால் ஒரு மனிதப் பிறவியின் பயனாகத் தோன்றிய "மகவு" என்னும் உருவமைப்பு மண்ணில் தோன்றுவதற்கு ஏதுவாயிருந்த இருபெரும் சக்திகளை முதன் முதலாக அறிந்து கொண்டதைக் குறிப்பிடலாம்.

அவ்வாறாயின் சக்தி - அன்னை, சிவம் - பிதா (தந்தை). சைவ சித்தாந்த கோட்பாட்டின்படி அது முற்றிலும் ஏற்புடையதொரு பொன் மொழி என்பதைச் சிந்தனையாளர்களும் ஏன் ஞானிகள், சித்தர்கள் கூட மெய்ப்பித்திருக்கின்றார்கள். இதற்குச் சான்றாக கொங்கணவரின் வரலாற்றையும் ஒப்பிடலாம். மேலும், இதற்கு லிங்க வழிபாடு தொன்றுதொட்டு வந்திருப்பது மற்றுமொரு சான்றாகிறது.

மொத்தத்தில் உலகில் தோன்றுகின்ற அனைத்துயிர்களும் அன்னையையும், தந்தையையும் முதலாகக் கொண்டவைதான் என்பதில் எவ்வித ஐயமும் தோன்றுவதற்கில்லை என்று துணியலாம்.

-என்.எஸ்.ராஜா, தம்பலகாமம்.

## ஆன்மீகம்



## நியாயத் தீர்ப்பு!

பாவத்தின் சம்பளம் மரணம் என்று வேதம் கூறுகிறது. ஆனால் மனிதனாகப் பிறந்தவன் ஒவ்வொருவனும் பாவியாகத்தான் வாழ்கிறான். தெரிந்தோ, தெரியாமலோ - அறிந்தோ, அறியாமலோ பாவம் அவனை ஆட்கொள்கிறது. தெரியாமல் செய்யும் தவறுகளுக்கு இறைவனின் சமூகத்தில் மன்னிப்பு உண்டு. தெரிந்து செய்யும் தவறுகளுக்கு தண்டனை தான் மிஞ்சும்.

இப்பிறவியில் நாம் செய்யும் தவறுகளுக்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது. ஆனால், இங்கு நிரபராதி குற்றவாளியாகிறான். குற்றவாளி (சில சமயங்களில்) நிரபராதியாகிறான். இதையெல்லாம் மீறிய தேவனின் தீர்ப்பு என்று ஒன்று உண்டு. அதில் யாரும் தப்ப முடியாது. அதுதான் தேவனின் - நியாயத் தீர்ப்பு.

எனவே, மனசாட்சிக்கு விரோதமாக நடவாமல் தேவனின் சித்தத்திற்கேற்ப நடக்க முயல்வோமாக.

-வீ.எஸ்.மதிவாணன், கெரவலபிட்டிய.

## அநீதி வட்டியும் அல்குர்ஆன் முழக்கமும்

ஒரு மனிதன் உழைத்து உழைத்து மடிகிறானா? - அது அவன் விதி. இன்னொருவன் அந்த உழைப்பிலேயே உல்லாசமாக வாழ்கிறானா? - அவன் கொடுத்து வைத்தவன். இதுதான் இன்றைய தனவந்தவர்களின் தான் தோன்றித் தனமான பேச்சு.

ஏதோ பணம் வந்துவிட்டது; தனவந்தவனாகிவிட்டான். அப்பணத்தை அவன் வட்டிக்குக் கொடுக்கிறான். தொழில் செய்யப் பணமில்லாமல் திண்டாடுபவன், இவன் பணத்தை கடன் வாங்குகின்றான். ஓடி ஓடி உழைக்கின்றான். வாங்கிய பணம் முழுவதையும் திருப்பிக் கொடுக்க முடியாத நிலை. வாங்கிய பணத்திற்கு வட்டிப் பணம் கட்டுகின்றான் இவன். அவனுக்கு இது அநீதியாகத் தெரியவில்லையா?

இதோ அல்குர்ஆன் முழங்குகிறது.


வட்டியைத் தின்பவர்கள் இறுதித் தீர்ப்பு நாளில் ஷைத்தானின் பிடியில்பட்டு பித்துக் கொண்டவர்கள் போலன்றி வேறு முறையில் எழமாட்டார்கள். ஏனெனில் நிச்சயமாக வர்த்தகம் வட்டியைப் போலவே இருக்கின்றது என்று அவர்கள் கூறியதனாலேயாம். ஆனால் அல்லாஹ் வர்த்தகத்தை ஆகுமான ஹலாலான தாக்கி வட்டியை விலக்கி ஹராமானதாக்கியிருக்கிறான்.

அல்லாஹ் வட்டியை அழித்து தர்மங்களைத் தழைக்க வைக்கிறான்.

அல்குர் ஆன் 2 : 275 - 6

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.661



### பரிசுக்குரிய கவிதை

### துப்பாக்கித் தேசம்

என்னை மிதித்து விட்டு
துப்பாக்கிதாரிகளிடம்
போய்ச் சொல்லுங்கள்
"உங்களுக்கு
ஒரு ரவை
மிச்சப்பட்டது" என்று.

-நூர்தீன் சஹீம்,
பள்ளிக்குடியிருப்பு.

## கவிதைப் போட்டி இல.664



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 06.06.2006.

கவிதைப் போட்டி இல.664
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### எதனால்?...

தளர்விலா,
தாக்குகின்ற
சமரிலா,
தன்னம்பிக்கை
இழப்பிலா,
தண்டவாளத்தில்
தலை வைக்கும்
தைரியம் வந்தது...?

-நா.ஜெயபாலன், பிபிலை.

### இன்றைய நிலை

ரயில் மிதிப்பதற்கு
முன்னால்
துப்பாக்கிச் சூடு
பட்டுக்கூட
நான் இறந்து விடலாம்...
இதுதான் இன்றைய
நிலை மக்காள்.

-அ.ந.அப்துல் றஹ்மான்,
பட்டியடிப்பிட்டி.

### வழியில்லை!!

ஆள் கடத்தலிலிருந்தும்
கட்டாய
ஆயுதப் பயிற்சியின்
பிடியிலிருந்தும்
தப்பிக்க இது தவிர
வேறு வழி தெரியவில்லை
எனக்கு!!

-க.கமால்தீன்,
ஏறாவூர் - 03.

### யுத்தம்

யுத்தத்தில் இழந்தது
உறவு மட்டுமல்ல,
உறைவிடமும் தான் - இதனால்
முதியோர் இல்லமும் உன்னை
கைவிட்டதோ?

-வி.வஷி, வவுனியா.

### தர்மத்தை நோகலாமா?

உயிர் கொடுக்க மனிதன் தயார்;
உயிர் எடுக்க ரெயிலும் தயார்!
தமிழர் நிலையும் இதுவானால்
தர்மத்தை நாம் நோகலாமா?

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### பாராமுகம்!

மகளோ கனடாவில்...
மகனோ ரஷ்யாவில்...
தந்தையோ இங்கு
அநாதரவான நிலையில்
தண்டவாளத்தில்...

-அல்.ஆஸாத், ஏறாவூர் - 06.

### கடைசி ஆசை!

எனது வாழ் நாளில்
சமாதானம் மலராதென்பது
வெள்ளிடை மலை.
நான் கிழவன் - உயிரை
மாய்க்கிறேன்.
எதிர்காலப் பிள்ளைகளாவது
சமாதானம் மலர்ந்து
நிம்மதியாக வாழட்டும்.
இதுவே எனது கடைசி ஆசை.

-ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு - 15.

### நான் ஏன்...?

ஆறில் என் பேரன்
நீரில்...
முப்பதில் என் மகன்
போரில்...
சாவின்றி நான் மட்டும்
ஏன் நூறில்...?

-எம்.எம்.மிஃப்ராஸ், தில்லையடி.

### காரணம்...!

உள்ளூராட்சித் தேர்தலுக்காய்
உள்ளதெல்லாம் செலவழித்தேன்!
கட்டுப்பணத்தையும் இழந்து
கடனாளியாகி விட்டேன்!

-ரேணுகா றிபாய்தீன், ஏறாவூர் - 02.

### புதைகுழி நோக்கி....!

தமிழீழ தாயகமோ? தலை
போகும் வையகமோ? புதைகுழி
நிரப்பும் வைபோகமோ?

-வெலிமடை எம்.ராமமூர்த்தி.





## உங்கள் பக்கம்

### வாசகர்களை வருத்துகின்ற வாசிகசாலை

**மன்னார்** மாவட்டத்திலேயுள்ள பல சிறிய கிராமங்களிலே தாராபுரமும் ஒன்று. இங்கு சுமாராக இருநூறு குடும்பங்கள் வரை வசித்து வருகின்றன.

க.பொ.த. உயர்தரம் வரையுள்ள பாடசாலையுட்பட இங்குள்ள சகலதும் மிகச் சரியாய் இயங்கி வருகின்றன. ஆனால் வாசிகசாலை மட்டும் விதிவிலக்காய் ஒழுங்காய் இயங்குவது கிடையாது.

பிரதேச சபைக் கட்டிடத்துடனேயே வாசிகசாலையும் ஒட்டியுள்ளதால் பிரதேச சபை திறக்கப்பட்டால்தான் வாசிகசாலையும் திறக்கப்படும் ஒரு அவலம் நிலவுகிறது. வேளைக்கு பிரதேச சபையும் திறக்கப்படுவதில்லை; அதனால் வாசிகசாலையும் திறக்கப்படுவதில்லை. அப்படியே திறக்கப்பட்டாலும் நூலக பொறுப்பாளர் வேளைக்கு வருவதில்லை. அவர் வருவது காலை 10.00 மணியளவில்தான். எங்கேயாவது காலை 10 மணிக்கு வாசிகசாலைக்கு வரும் 'நூ.பொ.' உண்டா? இங்குதான் இந்த விந்தை எல்லாம் நடந்தேறுகிறது நாள்தோறும்.

எங்கேயாவது ஞாயிற்றுக்கிழமையில் வாசிகசாலை பூட்டப்படுவதுண்டா? அந்த விந்தையும் இங்குதான் நடந்தேறுகிறது.

இலங்கையில் அதிகம் வெளிவருவது வாரப் பத்திரிகைகளே. உரியவர்கள் உணர்ந்து ஞாயிற்றுக் கிழமைகளில் வாசிகசாலையை திறக்க வழிவகுக்க வேண்டும்.

முதலாவதாக பி.தே.ச. கட்டிடத்தை விட்டும் வாசிகசாலையை வேறாக்கி, வாரத்தில் எல்லா நாளும் - குறிப்பாக ஞாயிறன்று - வாசிகசாலையைத் திறப்பதற்கு உரியவர்கள் உரிய நடவடிக்கையை எடுப்பரா? மக்களின் அறிவுக் கண்ணைத் திறப்பரா?

-கே.சந்திரன், தாராபுரம்.

## வாசகர் சாலை

### ப்ரியமுடன் முரசுக்கு....!

உன்னைப்
பார்த்தபோது
நிறைவேறியது -
கவிதை
எழுதும் என்
நீண்ட நாள் ஆசை.

என் வீட்டு வாசல்
படியில்
எந்தப் பத்திரிகையும்
வருவதில்லை -
வீட்டுக்குள்
நீ இருக்கும்
அச்சத்தில்.

எத்தனை
பத்திரிகைகள்
படித்துவிட்டேன்
படிக்க வேண்டிய
பத்திரிகை
நீ தான் என்பதை
அறியாமல்.

உன்னைப்
பெற்றவளிற்கு
பல கோடி நன்றிகள்
அவள் - கருவில்
சுமந்தது
உன்னையல்ல - என்
ஆக்கக் கனவுகளை.

-எஸ்.யசோ, கரவெட்டி.

அன்பின் முரசே!
சுடச்சுட செய்திகளை அள்ளி வழங்கி சுவை என்ற சுவாரஷ்யத்தை ஊட்டி விடுகின்றாய். அதில் என்னை பிரமிக்கவும் வைக்கின்றாய். அரசியல் முதல் பாப்பா பகுதி வரை அனைத்தும் அருமை. யாவற்றையும் தொகுத்துப் படைக்கும் முரசின் தூய பணி தொடர என் இனிய வாழ்த்துக்கள்.

-ப்ரியமுடன் பிரியா, பிரான்ஸ்.

தினமுரசு ஆசிரியர் அவர்கட்கு,
முரசின் ஒவ்வொரு பக்கங்களும் மிகவும் நன்றாக இருக்கின்றன. இது என் கருத்து மட்டுமல்ல, இங்கு பணி புரியும் அனைவரினதும் ஒட்டு மொத்த கருத்து. எம் அனைவரின் சார்பாகவும் தினமுரசு ஆசிரியர் குழுவினருக்கும், ஊழியர்களுக்கும் இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-எஸ்.சிவகுமார், டோகா - கட்டார்.

அன்பு முரசே!
கொட்டும் முரசு ஒலித்திடும் ஓசை சிறிது தூரம் மட்டுமே; ஆனால் தினமுரசு ஒலித்திடும் ஓசை உலகெங்குமே! இதைச் சொல்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

-வை.எச்.சம்சுடீன், கல்முனை.

### நன்றிடா முரசே!

வியாழன் தோறும் விழிக்க வைத்து
மகிழ்ச்சி தரும் வண்ணத் தமிழ்
முரசே! உன் சேவை என்றும்
தேவை - முரசே என் அபிமான
புகைப்
படங்களை அழகுடன் தந்து
மகிழ்வூட்டியதற்கு உனக்கு
எவ்வாறு நன்றி கூறுவதடா!
வாழ்த்தியும்
வாசகர்களின் மனமறிந்து
செயற்படும்
உன்னைப் போற்றியும்
உன்னை விழித்து
விடைபெறுகிறேன்.
நன்றிடா! நன்றியடா முரசே.

-எஸ்.ஐ.பர்வீன் பானு, ஏறாவூர் - 04.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## சொத்துக்கள் முடக்கம் நிதி சேகரிப்புக்கு ஆப்பு பிரசாரத்துக்கு வேட்டு

# 31 நாடுகளில் புலிகளுக்குத் தடை!

புலிகள் இயக்கத்தின் இருபது வருட காலத்திற்கு மேற்பட்ட யுத்த வரலாற்றிலேயே மிக மோசமான தாக்குதலொன்றினை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் இயக்கத்தின் மீது விதித்திருக்கும் தடையின் மூலம், 31 நாடுகளில் புலிகளின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா, மலேசியா ஆகிய நாடுகள் புலிகளுக்குத் தடை விதித்திருந்தன. கடந்த 29ஆம் திகதி பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸல்ஸில் கூடிய ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டமைச்சர்கள், புலிகள் மீது தடைகள் விதித்துள்ளனர். இதனால் இந்த ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளில் புலிகளின் சொத்துக்கள் முடக்கப்படுவதோடு, அவற்றின் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளும் முடக்கப்படும்.

கடந்த ஆகஸ்ட் மாதம் முன்னாள் வெளிவிகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை புலிகள் கொலை செய்ததையடுத்து செப்டெம்பர் மாதம் ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குப் பயணத் தடையை விதித்தது. சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், படையினர் மீது குறிப்பாக பொதுமக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துமாறும் ஐரோப்பிய ஒன்றியம் விடுத்திருந்த எச்சரிக்கையை புலிகள் இயக்கம் அசட்டை செய்ததாலேயே அந்த இயக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். கடந்த மாதம் 18ஆம் திகதி கூடிய ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது தடை விதிக்க கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருந்ததோடு பயங்கரவாதச் செயல்களைக் கைவிட வேண்டுமென்றும் கோரியிருந்தது. இந்த எச்சரிக்கையையும் மீறி, "புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டால் மீண்டும் யுத்தம் வெடிக்கும்" என்று புலிகளின் 'தத்துவ வித்தகர்' அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை செய்திருந் தமையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த முடிவுக்கு முக்கிய காரணமென்று அப்பேச்சாளர் மேலும் சொன்னார்.

2002ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கமும் - புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்த மொன்றினையும், புரிந்துணர்வு ஒப்பந்த மொன்றினையும் செய்துகொண்டிருந்தனர். 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற டோக்கியோ மாநாட்டில் இனப் பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வின் அடிப்படையிலான பொறிமுறையொன்றினைக் காண்பதிலும் இணக்கம் காணப்பட்டது. இவற்றையெல்லாம் மீறி வடக்கிலும், கிழக்கிலும் சுமார் நாலாயிரத்துக்கு மேற்பட்ட யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களில் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்பது பதிவாகியுள்ளது. இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சரத் பொன்சேகா மீதான தற்கொலைத் தாக்குதல், நிராயுதபாணிகளான சுமார் 700 சிப்பாய்களை ஏற்றிச் சென்ற பேர்ள் குரூஸ் கப்பல் மீதான தற்கொலைத் தாக்குதல் முயற்சி போன்றவற்றின் தாக்கங்கள் பற்றியும் ஒன்றியத்தின் வெளிநாட்டமைச்சர்கள் ஆழமாக ஆராய்ந்த பின்னரே இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் சொன்னார்.

இரண்டாவது சுற்று ஜெனீவா பேச்சுவார்த்தையைத் தவிர்ப்பதற்கு புலிகள் மேற்கொண்ட தந்திரோபாயம் பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. கண்காணிப்புக் குழு கடற்பயணங்களில் ஈடுபடக் கூடாதென்று புலிகள் விடுத்திருந்த எச்சரிக்கையும் வெளிநாட்டமைச்சர்களின் காரசாரமான கண்டனத்திற்கிலக்கானது. சிறுவர்களைப் புலிகள் தமது படையணிகளில் சேர்த்துக் கொள்ளும் விவகாரமும் உறுப்பினர்களின் காரசாரமான கண்டனத்திற்கு இலக்கானது.

அரசும், புலிகளும் யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபடக் கூடாதென்றும் ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுள்ளது.



வலது குறைந்தோருக்கான தேசியக் கவுன்ஸிலின் மாதாந்தக் கூட்டம் கடந்த 23ஆம் திகதி சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

## வலது குறைந்தோரின் வசதிகளை கவனிக்க 3 இணைக் குழுக்கள்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையின் கீழ் வலது குறைந்தோரின் நலன் சார்ந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கடந்த 23ஆம் திகதி கொழும்பிலுள்ள அமைச்சுக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. வலது குறைந்தோரின் தேசியக் கவுன்ஸிலின் இந்த மாதாந்தக் கூட்டத்தில் மூன்று முக்கிய இணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. வலது குறைந்த குடும்பத் தலைவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகளை கையாளுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. வலது குறைந்தோருக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கென ஆகக்கூடியளவு ஓர் இலட்சம் ரூபா உதவுதொகை வழங்கும் நடவடிக்கைகளைக் கையாள மற்றொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வலது குறைந்தோரின் மருத்துவ வசதியைக் கவனித்துக் கொள்வதற்கென மூன்றாவது குழு நியமிக்கப்பட்டது. உடனடியாகவே இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். வலதுகுறைந்தோரின் உரிமைகள் தொடர்பான சட்டளைச் சட்டத்தைத் திருத்துவது தொடர்பான பத்திரமொன்று விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இது தொடர்பான ஆலோசனைகளையும் மாற்றுத் திட்டங்களையும் அமைச்சர் சம்பந்தப்பட்டக் குழுவிடம் கோரினார். செவிப்புலனற்றவர்கள் சமிக்ஞை மொழியில் தொலைக்காட்சிச் செய்திகளைக் கேட்பதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். செவிப்புலனற்றவர்களுக்கு மூன்று மாத கால சாரதிப் பயிற்சியின் பின்னர், வைத்திய பரிசோதனை நடத்தி, விபத்து ஆபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் வாகனங்களைச் செலுத்தக் கூடியவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்குமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வலது குறைந்த பிள்ளைகளுக்கு தேசிய பாடசாலைகளில் கல்வி வசதிகள் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. மஹிந்த சிந்தனையின் பிரகாரம் இம்முயற்சிகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் எடுக்கப்படுகின்றன.

## சர்வகட்சி மாநாடு

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினை காணும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் முகமாக எதிர்வரும் இரண்டாம் திகதி சர்வகட்சி மாநாடு கூட்டப்படுகிறது. பொது இணக்கப்பாடொன்றைக் காண்பதற்காகவே ஜனாதிபதி மிக அவசரமாக இக் கூட்டத்தைக் கூட்டுகிறார். அதில் எட்டப்படும் இணக்கப்பாடு புலிகளிடமும் சர்வதேச சமூகத்திடமும் தெரிவிக்கப்படும்.

## சமாதானப் பணிப்பாளரின் யுத்த எதிர்வு கூறல்

"புலிகள் மீதான சர்வதேசத் தடை கள நிலைமைகளில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லையென்பதை புலிகளின் பாரிய தாக்குதல் ஒன்று உலகுக்கு எடுத்துக் காட்டலாம். சமாதான முன் முயற்சிகள் தொடர்பாகக் காத்திரமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளத் தவறினால் புலிகளின் பாரிய தாக்குதல் ஒன்றினை எதிர்நோக்க வேண்டி யேற்படலாம்" என்று தேசிய சமாதானக் கவுன்ஸிலின் பணிப்பாளர் ஜெகான் பெரேரா தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றியத் தடை பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்தச் சமாதான ஆர்வலர் இவ்வாறு கூறினார்.

## அன்ரன் பாலசிங்கத்துக்கு கல்தா?

புலிகள் இயக்கத்திற்கெதிராக சர்வதேசத் தடை அதிகரித்து வருவதையடுத்து பிரிட்டனில் வாழும் அன்ரன் பாலசிங்கத்தின் செயற்பாடுகளை முடக்குமாறு பலதரப்புகளிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புலிகளின் பிரதான பேச்சாளரென்று கூறிக் கொள்ளும் அவர், புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டால் யுத்தம் வெடிக்குமென்று எச்சரிக்கை செய்திருப்பது பிரிட்டனிலுள்ள பல ஜனநாயக வாதிகளை ஆத்திரப் படுத்தியுள்ளது. இவர் இலங்கையிலோ அல்லது பிரிட்டனிலோ உள்ள எந்த ஒரு பல்கலைக்கழகத்திலும் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவரல்லர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. ஆனால் இவர் தன்னைக் கலாநிதி என்றும் தத்துவாசிரியரென்றும் கூறிக் கொள்கிறார். எனவே இதுகுறித்து விசாரணை நடத்து மாறும் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் பிரிட்டிஷ் மண்ணில் செயற்பட அனுமதிக்கப்படக் கூடாதென்றும் அந்தப் புகார்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## "ஊடகங்களின் தவறான போக்கும் தடைக்கு ஒரு காரணம்"

இலங்கைத் தமிழ் ஊடகங்களின் 'மாபியா' பாணி செயற்பாடுகளும் ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது தடை விதித்தமைக்கான ஒரு காரணம் என்கிறார் அரசியல் ஆய்வாளரான பெ.மதிவண்ணன். துப்பாக்கிகளுக்கு அஞ்சியோ அல்லது வர்த்தக நோக்கங்களுக்காகவோ உண்மைகளை மூடி மறைத்து பொய்களைத் திரிபுபடுத்தி செய்திகளை வெளியிடுகிறார்கள். படைத் தரப்பினர்கள் மீதோ அப்பாவி பொதுமக்கள் மீதோ, தாக்குதல் நடத்துபவர்கள் யாரென ஆதார பூர்வமாகத் தெரிந்திருந்தாலும், அவர்களை இனம் தெரியாதவர்கள் என்ற போர்வைக்குள் மறைத்து விடுகிறார்கள். தமிழ் தேசியம் என்ற சாக்குப் போக்கில் அடாவடித்தனங்களுக்கும் அராஜகங்களுக்கும் துதிபாடுவதோடு உண்மைகளைப் பூசி மெழுகியும் விடுகிறார்கள். இதனால் அக்கிரமங்கள் பெருகவும் அப்பாவி மக்கள் துயரங்களை அனுபவிக்கவும் இந்த ஊடகங்கள் கால்கோலாக விளங்குகின்றன. நிதிக்காகவும் நேர்மைக்காகவும் வாதாடி மக்கள் சார்பாக செய்திகளையும் விடயதானங்களையும் வெளியிடும் போது அவை மக்களை மட்டுமல்ல, தவறான போக்குக் கொண்டவர்களையும் நல்வழிப் படுத்துமென்கிறார் மதிவண்ணன்.

## பேச்சு நடத்த இணைத் தலைமை நாடுகள் கோரிக்கை

இலங்கை அரசும், புலிகளும் யுத்த நிறுத்த மீறல்களைக் கைவிட்டு உடனடியாகப் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப வேண்டுமென்றும் இல்லையேல் சர்வதேச உதவிகள் கிட்டாதென்றும் டோக்கியோவில் கூடிய இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் முடிவெடுத்தது. புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்த மறுதினம், அதாவது கடந்த முப்பதாம் திகதி இக் கூட்டம் நடைபெற்றது. புலிகள் தமது வன்செயல் நடவடிக்கைகளையும் மனித உரிமை மீறல்களையும் நிறுத்த வேண்டுமென்றும் இலங்கை அரசு வடக்கு - கிழக்கின் எல்லைக் கிராமங்களில் வன்செயல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இணைத் தலைமை நாடுகள் வலியுறுத்தியுள்ளன. வன்செயல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தி, சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன்னிறுத்தி, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்றும் அதற்கான காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் இணைத் தலைமை நாடுகள் கோரியுள்ளன. இலங்கை சமாதான முயற்சிகள் முன்னேற்றமடையும் பட்சத்தில் 450 கோடி டாலர்களை இலங்கைக்கு உதவியாக வழங்க இணைத் தலைமை நாடுகள் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மாநகர சபை வேட்பாளர் சுட்டுக் கொலை!

யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் இந்நாள் வேட்பாளரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான மைக்கேல் யேசுதாசன் என்ற எழுபது வயது வயோதிபர் கடந்த 29ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணம், நாவாந்துறை, கடற்கரை வீதியிலுள்ள இவரது இல்லத்துக்குச் சென்ற இருவர், சமாதான நீதிவானை அவரிடம் கையெழுத்துப் பெறும் சாக்கில் வீட்டுக்குள் சென்று சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்று விட்டனர். புலிகளின் பிஸ்டல் குழுவினரே இவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். புலிகளின் இம்மிலேச்சத்தனமான படுகொலையை வன்மையாகக் கண்டிப்பதாக ஈ.பி.டி.பி. விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## படைத் தரப்பு அறிவுறுத்தல்

ஏ-9 பாதையூடாக யாழ்.குடா நாட்டுக்குள் நுழையும் வாகனங்களின் உரிமையாளர்களையும், சாரதிகளையும் மிகவும் அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்குமாறு படைத்தரப்பு கோரியுள்ளது. லொறி, வான் போன்ற வாகனங்களில் சி-04 ரக வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முகமாலைச் சோதனைச் சாவடியில் 24 வாகனங்களில் வெடிமருந்துகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை ஒரே நாளில் கண்டுபிடிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கதாகும். முகமாலைக்கும் ஓமந்தைக்குமிடையிலான பகுதியில் இரகசியமான முறையில் வெடிமருந்துகள் வாகனங்களுக்குள் பதுக்கி வைக்கப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

## கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டம் நயினாதீவில்

கடல் நீரை நன்னீராக்கி மக்களுக்கு விநியோகிக்கும் திட்டம் அடுத்த வருடம் நயினாதீவில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படவுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இதனை வெளிநாட்டு அமைப்பொன்றின் உதவியுடன் மேற்கொள்ளவுள்ளது. நயினாதீவில் இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் தீவுப் பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக இத்திட்டம் விஸ்தரிக்கப்படும். இலங்கையில் கடல் நீரைக் குடி நீராக்குவதற்காக மேற்கொள்ளப்படும் முதலாவது திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## துண்டுப் பிரசுர யுத்தம்!

வடக்குக் கிழக்கின் பதற்றம் நிலவும் சில பகுதி களில் துண்டுப் பிரசுர யுத்தமொன்று அக் கறை கொண்ட சக்திகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வின் பிந்திய கட்டமாக மூதூரிலுள்ள முஸ்லிம் மக்களை வெளியேறக் கோரும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. யுத்தம் விரைவில் ஆரம்பிக்கப்பட விருப்பதாகவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக மக்களை வெளியேறுமாறு கோரியும் இத்துண்டு பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. இதே வேளை இது தீய சக்திகளின் செயலென்றும் மக்களை வெளியேற வேண்டாமென்று கோரியும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அல்லைப்பிட்டியில் கடந்த 13ஆம் திகதி ஒரே வீட்டில் ஒன்பது பேர் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னதாக "மக்கள் படை" என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து அல்லைப்பிட்டி தேவாலயத்தில் தஞ்சமடைந்த மக்களை அப் பிரதேசத்தை விட்டு வெளியேறக் கோரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. மக்களைப் பீதிக்குள்ளாக்கும் முயற்சிகளில் புலிகளே ஈடுபடுகிறார்களென்று சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் கூறுகின்றனர்.

## எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிப்பு

வாழைச்சேனை, ஓமடமடு என்ற பகுதியில் வாய்க்கால் வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த அப்பாவிச் சிங்களக் குடிமக்கள் கடந்த முப்பதாம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து கிழக்கு மாகாணத்தின் எல்லைக் கிராம மக்களின் பாதுகாப்பை அரசாங்கம் பலப்படுத்தியுள்ளது. ஓர் இனக் கலவரமொன்றினை ஏற்படுத்துவதங்காகவே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகச் சந்தேகிக்கும் அரசாங்கம், இவ்வாறான சம்பவங்கள் தொடராமல் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

## ஜாவா அகதிகளுக்கு இலங்கையிலிருந்து உதவி

இந்தோனேஷியாவில் ஜாவா தீவில் ஏற்பட்ட நில அதிர்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கையிலிருந்து நிவாரணப் பொருட்களை அனுப்பிவைப்பதற் கான பணிகளில் பல உள்ளூர் தொண்டர் அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. ஏற்கனவே நிவாரணப்பணியாளர் குழு ஒன்றும் அங்கு விரைந்துள்ளது. இந்துக் களின் மும்மூர்த்தித் தெய்வங் களுக்காக நிர்மாணிக்கப்பட்ட புராதன இந்துக் கோவில் ஒன்றும் சிதைவுற்றிருப்பதாகத் தகவல் வெளி வந்ததை யடுத்து தமிழகத்திலிருந்து தொல்பொருள் ஆய்வாளர் குழு வொன்றும் அங்கு விரைந்துள்ளது.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## தமிழர்களின் அரசியல் பலம் இன்னும் உறுதியாகவுள்ளது

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

**இலங்கைத்** தமிழர்களின் விடுதலைப் போராட்டம் 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் வரையான காலப்பகுதி வரை நியாயமானதாகவும், தேவையானதாகவும் இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. பின்னர் போராட்டம் இன்னொரு பரிணாம வளர்ச்சி கண்டதோடு அரசியல் போராட்டத்தின் தேவையையும், சமரச முயற்சிகள் தொடர்பான இணக்கங்களையும் காண வேண்டிய தளங்களை நோக்கி நகர்ந்தது. இந்த மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு தமிழ் மக்களின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் உயிர்த்தியாகம் செய்து போராடிய பல விடுதலை அமைப்புகளும் ஜனநாயக மாற்றங்களை மீள் பரிசீலனை செய்து மாற்றங்களுக்கு ஆட்பட்டன.

ஆனால் புலிகள் ஆயுத வழி மூலமான போராட்டத்தின் ஊடாகவே தனித் தமிழீழத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், ஜனநாயக வழிக்குத் திரும்பிய அமைப்புகள் துரோகிகள் என்றும் கூறினர். தொடர்ந்தும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதற்கான விலையாக சுமார் 18000. புலி உறுப்பினர்களையும், 45000 வரையிலான பொதுமக்களையும் அர்த்தமற்ற போரில் பலி கொடுத்தனர். தவிரவும், மாற்று ஜனநாயக போராளிகள் சுமார் 6000 பேரை புலிகளே கொன்றொழித்தனர். இவற்றை விட எமது தாயகமான வடக்கு - கிழக்கின் எல்லா வகையான சொத்துக்களும் உடைமைகளும் அழியக் காரணமாக இருந்தனர். ஆனாலும் இறுதியாக இன்றைக்கு வரைக்கும் தனி ஈழத்தை புலிகளால் பெற்றுக் கொள்ள முடியாமலே போய்விட்டுள்ளது.

போர்தான் ஒரே வழி என்ற புலிகள், யதார்த்தத்தின் அழுத்தம் காரணமாக போர் நிறுத்தம் செய்து கொண்டதும், சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொண்டதும், பேச்சு வார்த்தை மீது உளப்பூர்வமான நம்பிக்கையில் அல்ல என்பதை, பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுப் போயிருப்பதையும், போர் நிறுத்தம் அதன் வரம்புகளை மீறி நடந்து கொண்டிருப்பதையும் கொண்டு எவரும் இலகுவில் புரிந்துகொள்ள முடியும். இதுவும் புலிகளுக்கு ஒரு வகையில் பெருத்த தோல்வியாகக் கருதப்படுகிறது.

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலான இனப் பிரச்சினையானது 1987ஆம் ஆண்டு ஏற்படுத்திய திருப்பத்துக்குப் பிறகு புலிகள் தனித்து நடத்திய வன்முறைகள், தாக்குதல்கள், படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் காரணமாக சர்வதேச சமூகத்தின் முன்னால் பயங்கரவாதப் போராட்டமாக இனங்காணப்பட்டது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, மலேசியா, இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் புலிகளை பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்தன. அதன் பிறகும் அமெரிக்கா, புலிகளிடம் பயங்கரவாத செயற்பாடுகளைக் கைவிட வேண்டும் என்றும் அதை நடைமுறையில் நிரூபிக்க வேண்டும் என்றும் கூறி வந்தது. ஆனால் புலிகள் அமெரிக்காவின் வேண்டுகோளையோ, சர்வதேசத்தின் விருப்பங்களையோ புரிந்துகொண்டு நடக்காமல் தொடர்ச்சியாகப் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதன் விளைவாகவே 29.05.06 அன்று அமெரிக்காவின் நடவடிக்கையின் பயனாகவும் சர்வதே சமூகத்தின் அதிருப்தி காரணமாகவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் அங்கம் வகிக்கும் ஜெர்மன், பிரான்ஸ், லக்ஸம்பேர்க், பெல்ஜியம், நெதர்லாந்து, இத்தாலி, பிரிட்டன், பின்லாந்து, டென்மார்க், சுவீடன், ஸ்பெயின், போர்த்துக்கல், ஒஸ்ட்ரியா, அயர்லாந்து, கிறீஸ், போலந்து, செக்.குடியரசு, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி, எஸ்தோனியா, ஸ்லோவானியா, லக்பியா, மோல்ட்டா, லிதுவேனியா, சைப்பிரஸ் ஆகிய 25 நாடுகளும் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாகத் தடை செய்துள்ளன. இத்தடை வருவதற்கான காரணங்கள் ஒரு இரவிலோ, ஒரு சம்பவத்திலோ உருவானதில்லை என்பதையும், நீண்டகால கண்காணிப்புகளின் அடிப்படையிலே தோன்றியவை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

மறுபக்கத்தில் புலிகளின் ஆயுதமேந்திய போராட்டமானது திசைமாறிப் போய்விட்டதையும், அது பயங்கரவாதத்துக்குள் வீழ்ந்து விட்டதையும் தெளிவு படுத்துவதோடு, இலங்கை தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு காண்பதற்கான வழியில் பாரிய தடைகளையும் ஏற்படுத்தியுள்ளது. இதை மூன்று தசாப்த காலப் போராட்டத்தின் வெற்றியாகக் கருத முடியாது. பாரிய பின்னடைவாகவே கருத இடமுண்டு. எனினும் சர்வதேச சமூகம், புலிகள் வேறு; தமிழ் மக்கள் வேறு என்பதைப் புரிந்துகொண்டு அரசியல் தீர்வு காணப்படுவதற்கு இலங்கை அரசுக்கு தேவையான அழுத்தத்தை வழங்க வேண்டும். புலிகள் மீதான தடையென்பதை, தமிழ் மக்கள் மீதான தடையாக எவரும் கருத முடியாது. தமிழ் மக்கள் ஒருபோதும் பயங்கரவாதச் செயற்பாடுகளை ஆதரிக்கவுமில்லை; அதில் பங்குகொள்ளவுமில்லை என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டிருப்பதை செயல்வடிவத்தில் இனியேனும் வெளிப்படுத்த வேண்டும். புலிகள் மீதான தடையைக் கொண்டு தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியை இலங்கை அரசு அளவிட முடியாது. ஏனெனில் தமிழ் மக்களின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் போராடியதோடு, போராட்டத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கமைவாக ஜனநாயக வழியில் இன்றும் போராடிக் கொண்டிருக்கும் அரசியல் தலைமையை தமிழ் மக்கள் இன்னும் இழந்துவிடவில்லை.

புலிகளின் ஆயுத பலம் திசைமாறிப் போய்விட்டாலும், தமிழ் மக்களின் அரசியல் தலைமை இன்னும் போராட்டப் பாதையில் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தபடி தன் பேரம் பேசும் பலத்துடன் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை இலங்கை அரசும் - சர்வதேசமும் புரிந்துகொள்வது அவசியமாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# கடல் தாண்டும் தமிழர்களின் கண்ணீர்க் கதைகள்!

**நரன்**

**திருகோணமலை** மீண்டும் குருதி வெள்ளத்தில் குளித்துக் கொண்டிருக்கிறது. திருகோணமலைக் கடலோ, உப்புக் கரித்து, மீனவர் குடும்பங்களைக் கண்ணீரோடு கரை தாண்டிச் செல்லத் தூண்டுகிறது.

மற்றொரு யுத்தத்துக்கான முஸ்தீபு வேட்டுகள் திருமலையில் கேட்கத் தொடங்கி கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் கடந்து விட்டன. சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள், இழப்பதற்கு உயிர்களைத் தவிர, வேறு எதுவும் இல்லாத நிலையில் உயிரைக் கையில் பிடித்தபடி பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்திருக்கிறார்கள். முத்தரப்பு இனவெறியர்களின் தாக்குதல்களுக்கு இலக்காகியும், யுத்தம் ஏற்படலாமென்று அஞ்சியும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என்ற பேதமின்றி, அப்பாவிகள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள்.

இனரீதியாக இந்த மக்களை ஐக்கியப்படுத்த முனையாத அரசியல் கட்சிகளும் ஆயுததாரிகளும், இடம்பெயர வைப்பதற்கான அவலத்திலாவது அவர்களை ஐக்கியப்பட வைத்துள்ளனர். திருகோணமலையில்தான் மிகப் பயங்கரமாக பீதியும் பதற்றமும் பரவலாக நிலவுகிறது. என்ற போதிலும் மன்னார், உட்பட வேறுபல வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில் நூற்றுக்குத் 90 சதவீதமான மக்கள் தமிழ் மக்கள். திருமலை, கோமரங்கடவலயில் ஆறு சிங்கள விவசாயிகள் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து சிங்கள மக்களும் பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்திருக்கிறார்கள். மூதூர், மன்னார் போன்ற இடங்களிலிருந்து முஸ்லிம் மக்களும் இடம்பெயந்திருக்கிறார்கள். உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களைத் தவிர, பாதுகாப்புத் தேடிக் கடல் தாண்டி, தமிழகத்தில் தஞ்சம் தேடித் தப்பிச் செல்பவர்கள் நூற்றுக்கு நூறு சதவீதம் தமிழ் மக்கள்தான். இவர்களிலும் திருமலை, மன்னார் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களே அதிகமானவர்களாவர்.

சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் கடந்த இரு மாதங்களுக்குள் தஞ்சம் தேடித் தமிழகக் கரைகளை அடைந்துள்ளனரென்று தமிழ்நாட்டின் பிரதம செயலாளர் எல்.கே.திரிபாதி தெரிவித்துள்ளார். சுமார் இரண்டாயிரம் பேர் மண்டபம் முகாமில் தக்க வைக்கப்பட்டுள்ளனரென்றும் ஏனையவர்களை வேறு இடங்களில் தங்க வைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இலங்கையின் வடக்கு - கிழக்கில் நிலைமை கொந்தளிப்பாக இருப்பதால், கொந்தளிக்கும் கடல் தாண்டி மேலும் அகதிகள் தமிழகத்துக்கு வரலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் சொன்னார்.

சுமார் ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட இலங்கை அகதிகள் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்நாட்டு அகதி முகாம்களில் தங்கியிருந்தனர். 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர் கிட்டத்திட்ட நாற்பதாயிரம் மக்கள் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குத் திரும்பிவிட்டனர். இப்போதும் கிட்டத்தட்ட அறுபதாயிரம் அகதிகள் தமிழகத்திலுள்ள அகதி முகாம்களிலும் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளிலும் தங்கியியுள்ளனர். தலைமன்னார், பேசாலை ஆகிய பகுதிகளிலிருந்தே பெரும்பாலான அகதிகள் தமிழகம் நோக்கிச் செல்கின்றனர். பெரும்பாலும் பாதுகாப்பற்ற படகுகளிலேயே கொந்தளிக்கும் அலைகடலைத் தாண்டி வேதாரண்யம், தனுஷ்கோடி, இராமேஸ்வரம் போன்ற தமிழகக் கரையோரங்களைச் சென்றடைகின்றனர்.

தமிழகத்தைச் சேர்ந்த தரகர்களும் இலங்கையில் புலிகளும் அகதிகளை ஏற்றிச் செல்லும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆளொருவருக்கு ஐயாயிரம் ரூபாவிலிருந்து பத்தாயிரம் ரூபாவரை அறவிடப்படுவதாக மக்கள் கூறுகின்றனர். திருகோணமலையிலும் மன்னாரிலும் புலி முகவர்கள் பத்தாயிரம் ரூபாவரை அறவிடுகின்றனரென்றும் கூறப்படுகிறது.

திருகோணமலை, மன்னார் போன்ற பகுதி மக்கள் யுத்தமொன்று வெடிக்கும் பட்சத்தில் பெரிதும் மரண ஆபத்தைச் சந்திக்கக்கூடிய நெருப்பு வலயங்களில் வாழ்பவர்கள்.

இனப்பிரச்சினையின் பரிணாம வளர்ச்சியே யுத்தமென்ற கோர வடிவமாகும். அதன் மூல காரணங்கள் தான், 'இனக்கலவரங்கள்', இன ஒடுக்குமுறை ஆகியவையாகும்.

யுத்தத்தை நிறுத்தி, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான மாற்றுப் பாதைக்கு, இலங்கை ஆளுந்தரப்புகள் திரும்பி வருடங்கள் பலவாகிவிட்டன. பேச்சு வார்த்தை மேசையில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற சர்வதேச அழுத்தமும் தமிழ் மக்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. ஆனாலும் 'விடாக் கண்டன், கொடாக் கண்டன்' நிலையில் புலிகள் இருப்பதே இன்றைய நிலைக்குப் பிரதான காரணமாகும். புலிகள், யுத்தத்துக்குத் தேவையான முன்னோடித் தந்திரோபாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். யுத்தத்துக்கு முன்னோடியாக யுத்தப் பீதி மனோபாவத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அதற்காகவே தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் படையினர் மீதும் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. அத்துடன் 'யுத்தம் வெடிக்கப் போகிறது, மக்களே தப்பிச் செல்லுங்கள்' என்று கட்டுக்கதைகளைக் கட்டவிழ்த்து விடுவது, மக்களை வெளியேறக் கோரி ('மக்கள் படை', 'எல்லாளன் படை', 'யாப் படை' என்ற பெயர்களில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் சுவரொட்டிகளை ஒட்டி மக்களை மிரட்டுவது, துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். புங்குடுதீவில் தர்ஷினி என்ற இளம் பெண் கற்பழிக்கப்பட்டு, கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுக் கிணற்றுக்குள் வீசப்பட்டமை; ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி., திருமலை விக்னேஸ்வரன் போன்றோரின் படுகொலைகள் ஆகியவையும் இவற்றிற்கான ஒத்திகையே என்ற வலுவான குற்றச்சாட்டுகளையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களை பெருமளவில் வன்னிக்கு இடம் பெயரச் செய்வதன் மூலம் அவர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி, யுத்த முஸ்தீபுகளில் ஈடுபடுவது புலிகளின் ஓர் உத்தியாகும். மக்களுக்குள் பதுங்கி வாழ்வதன் மூலம், படையினரின் தாக்குதல்களிலிருந்து தப்பிக் கொள்வதே புலிகளின் கபட நோக்கமாகும். இதேவேளை தமிழ் மக்களைப் படகுகள் மூலம் தமிழகத்துக்குத் தப்பிச் செல்லத் தூண்டுவதன் மூலம் சர்வதேசப் பிரசாரமொன்றினைக் கட்டவிழ்த்து விடுவதே புலிகளின் மற்றொரு தந்திரோபாயமாகும். அதாவது, அரசாங்கப் படைகளின் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காகத் தமிழ் மக்கள் தஞ்சம் தேடி தமிழகத்துக்கு அகதிகளாக ஓடுகிறார்கள் என்று காட்டுவதே அவர்களின் பிரதான நோக்கம்.

ஓர் இனக் கலவரத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கான ஆரம்ப முயற்சிகளைப் புலிகள் திருகோணமலையில் மேற்கொண்டார்கள். ஓரளவு வெற்றியும் கண்டார்கள். திருமலை மரக்கறிச் சந்தையிலுள்ள நான்கு அப்பாவிச் சிங்கள வியாபாரிகளைப் புலிகள் கைக்குண்டு வீசிக் கொன்றார்கள். இதற்குப் பதிலடியாக சிங்களக் காடையர்கள் பதின்மூன்று அப்பாவித் தமிழர்களை கொன்றதோடு, தமிழ் மக்களின் கடைகளையும் உடைமைகளையும் தீக்கிரையாக்கினர்.

இலங்கையின் இராணுவத் தளபதி மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தியதன் மூலம் அவர்கள் எதிர்பார்த்திருந்த சமாதானம் தான் என்ன? விடுமுறையில் சென்று கொண்டிருந்த நிராயுதபாணிகளான 710 படைச் சிப்பாய்களை வெசாக் தினத்துக்கு முதல் நாள் குறிவைத்துத் தாக்க முனைந்ததன் நோக்கம் என்ன? எனவே யுத்தச் செயற்பாடுகளில் ஈடுபடும் புலிகள், மறுதரப்பு கைகட்டி, வாய்பொத்தி மௌனியாக அகிம்சாமூர்த்தி புத்தரைப் போன்று நிஷ்டையில் இருப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது. கரைதாண்டிச் செல்லும் தமிழ் அகதிகளின் கண்ணீர்த் துளிகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். யுத்தப் பீதி மனோபாவம் ஏற்படுத்தப்படக்கூடாது. பந்து புலிகளின் பக்கத்தில் உணர்ந்து கொள்வார்களாக திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், சேருநுவர, திருமலை ஆகிய மூன்று தொகுதிகள் உள்ளன. திருமலையில் தமிழ் மக்களும் மூதூரில் முஸ்லிம்களும் சேருநுவரவில் சிங்களவர்களும் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். திருகோணமலை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், கிட்டத்தட்ட 40 சதவீதம் தமிழ் மக்களும் முப்பது சதவீதம் முஸ்லிம்களும் முப்பது சதவீதம் சிங்களவர்களும் உள்ளனர். அதன் இனப்பரம்பலும் வடக்கு - கிழக்கின் தலைநகரம் சிங்களவர்களுக்கா? தமிழர்களுக்கா? என்ற போட்டா போட்டியும் பிரச்சினைகளின் ஊற்றுமூலமாக இருக்கின்றன என்பதும் மறுக்க முடியாதது. ■

## கேந்திரத் துறைமுகம், விளைவித்த அந்தரம்!

மூன்றாவது ஈழ யுத்தம் 1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை திருகோணமலையில்தான் ஆரம்பமானது. இலங்கையில் வடக்கும் - கிழக்கும் தமிழ்பேசும் மக்களின் தாயக பூமி. இந்தத் தாயக பூமியின் தலைநகரமெனத் திருகோணமலையையே சகல தமிழ் கட்சிகளும் அன்றிலிருந்து இன்றுவரை வலியுறுத்தி வருகின்றன. ஆசியாவிலேயே மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகம் திருமலையில் அமைந்திருப்பதால், அது காலங் காலமாகப் பல நாடுகளின் கண்களை உறுத்தி வருகிறது. வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கோணேஸ்வர ஆலயம் அங்கே அமைந்திருப்பதால், திருகோணமலை என்ற பெயர் வந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். இந்த ஆலயம், 1622ஆம் ஆண்டு போர்த்துக்கீசர்களால் இடித்துத் தகர்க்கப்பட்டது. இங்கு இடித்துத் தகர்க்கப்பட்ட பொருட்கள், திருகோணமலைக் கோட்டையைப் பலப்படுத்தப் போர்த்துக்கீசர்களால் பயன்படுத்தப்பட்டதாகவும், பின்னர் இக் கோட்டை மாறிமாறி டச்சுக்காரர்களின் வசமும் பிரெஞ்சுக்காரர்களின் வசமும் இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. 1795இல் பிரிட்டிஷ் துருப்புகளின் கைகளுக்குள் இது சிக்கிக் கொண்டது. திருமலையிலமைந்திருந்த இயற்கைத் துறைமுகம் காரணமாகவும் அதன் கேந்திர முக்கியத்துவம் காரணமாகவும் திருமலை துறைமுகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஐரோப்பிய நாடுகள் தமக்குள் போட்டியிட்டன. 1941 முதல் 1945 வரை மவுன்ற் பேட்டன் பிரபுவின் படைத் தலைமையமாக திருகோணமலை விளங்கியது. எப்படியாவது பிரிட்டிஷ் பிடியிலிருந்து திருகோணமலையை நழுவிப் போகாதவாறு பாதுகாத்துக் கொள்ளுமாறு பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், மவுன்ற் பேட்டன் பிரபுவுக்கு உத்தரவிட்டிருந்தார். 1977ஆம் ஆண்டு, ஐ.தே.க.வின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் திருமலைத் துறைமுகத்தைப் பயன்படுத்தி, சிங்கப்பூரின் ஜூரோங் கைத்தொழில் பேட்டையின் பாணியில் திருகோணமலை ஏற்றுமதிப் பேட்டையாக மாற்றப் போவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. இதற்கு முன்னர் 1947ஆம் ஆண்டு பிரிட்டிஷ் - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. பிரிட்டிஷ் கடற்படை, திருமலைத் துறைமுகத்தில் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரும் தங்கியிருந்தது. பிரிட்டிஷ் - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படவில்லையென்று 1985ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இரண்டாவது எலிசபெத் மகாராணியிடம் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கூறினாரென்று தகவல்கள் கசிந்தன. 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்போது ஜெயவர்த்தனாவும் ராஜிவ் காந்திக்குமிடையில் பரிமாறப்பட்ட கடிதங்களில் திருகோணமலைத் துறைமுகம் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. திருமலைத் துறைமுகமோ அல்லது வேறெந்தத் துறைமுகங்களோ அந்நிய இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படக் கூடாதென்று இந்தியா, இலங்கையிடம் கோரியிருந்தது. திருமலைத் துறைமுகத்தில் நூறு எண்ணெய்க் குதங்கள் இருப்பதும் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது. யுத்தமோ இனக்கலவரமோ எது வெடித்தாலும் திருமலையில் மையம் கொள்வதற்கு அதன் கேந்திர முக்கியத்துவமும் ஒரு காரணமாகும்.

---

## ஊரிலிருந்து....




விஞ்ஞானத்தில் 'இசைவாக்கம்' எனும் சொல்லை அநேகர் அறிந்திருப்பீர்கள். அண்மையில் நடந்த அசம்பாவிதங்களை அடுத்து யாழ்.அல்லைப்பிட்டியில் இருந்து ஒட்டுமொத்த இடம்பெயர்வு ஏற்பட்டது. இதனால் ஒரே நாளில் அநாதரவாக கைவிடப்பட்டவை கால்நடைகள் தான். ஆடுமாடுகள் எப்படியோ பிழைத்துக் கொள்ளும். நன்றியுள்ள ஜீவன்கள் என்ன தான் செய்யும்?

பசி பொறுக்க முடியாத ஆறு ஏழு நாய்கள் ஒன்றாகக் கூடி ஆடு ஒன்றினை அடித்து குதறி சாப்பிட்டதை, தான் நேரடியாக கண்டதாகக் கூறி, அனைவரையும் அதிர வைத்திருக்கிறார் அப்பகுதி பொதுமகன் ஒருவர்.

என்ன செய்வது? சில மனிதர்கள் மிருகமாக மாறும்போது, மிருகங்கள் தமது சொந்தக் குணத்தைக் காட்டுவதில் என்ன தவறு?

# தமிழர் அரசியலில் மீண்டும் சம்பந்தன் எம்.பி.

அலசுவது
- மதியூகி -


சம்பந்தன் எம்.பி.

**தமிழரசுக்** கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பழம் பெரும் தமிழ் மிதவாதக் கட்சிகளின் அரசியலை திரும்பிப் பார்க்கின்றபோது நிராகரிக்க முடியாத ஒருவராக இரா.சம்பந்தன் இருக்கின்றார். 1977இல் முதன் முதலாகப் பாராளுமன்றத்துக்கு திருகோணமலையிலிருந்து தெரிவானபோது, புதிய அத்தியாயத்தின் ஆரம்பமாகவே அப்போது கருதப்பட்டது. திருமலை மண்ணின் மைந்தன் என்ற அடைப் பெயரும் இரா.சம்பந்தருக்கு ஒரு காலத்தில் இருந்தது. அது அவருக்கு ஒரு கௌரவத்தையும் கொடுத்தது.

பின்னர் 1994இல் மூதூரிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட அமரர் தங்கத்துரையை வெல்ல முடியாமல் போக, தங்கத்துரை அமோக வாக்குகளையும் ஆதரவையும் பெற்று திருமலை மண்ணுக்கு ஒரு விருட்சமாக விளங்கினார். இந்தத் தேர்தலில் இரா.சம்பந்தன் தோல்வியடைந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் - தமிழர்களின் தேசியத் தளபதியுமான அண்ணன் அமிர்தலிங்கத்துக்குப் பிறகு தமிழர்களின் நலன் சார்ந்த எண்ணங்களோடும், தமிழர்களின் நியாயமான உரிமைக்காகவும் ஓங்கிக் குரல் கொடுத்தவர் அமரர் தங்கத்துரையாவார்.

அண்ணன் அமிர்தலிங்கத்தை சுட்டுக் கொன்ற புலிகள், அதே தலைமைப் பண்போடு திகழ்ந்த தங்கத்துரையை 1996ஆம் ஆண்டு சுட்டுக் கொன்றனர். இந்தப் பாரிய இடைவெளி தமிழ் மக்களின் அரசியலில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தப்போகிறது என்பதை யாரும் நினைத்துப் பார்க்காத போதும், சொல்லிவைத்தாற் போல் அமரர் தங்கத்துரையின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அவசர அவசரமாக இரா.சம்பந்தன் நியமிக்கப்பட்டார். ஆக மக்களால் தெரிவுசெய்யப்படாத இடைவெளியை ஒரு மரணம் நிரப்பிச் சென்றது. இரா.சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினரானார்.

இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களில் இரா.சம்பந்தன் சில முக்கிய காலகட்டத்தைக் கடந்த அனுபவத்தையும், முதிர்ச்சியையும் கொண்டவர். அந்த வகையில் 1985ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் - தமிழ்ப் பிரதிநிதிகளுக்குமிடையில் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர, 2000ஆம் ஆண்டு முன்னாள் சந்திரிக்கா பண்டாரநாயக்கா, பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த தீர்வுப் பொதியை உருவாக்கியவர்களில் பெரும் பங்கு வகித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தரும், சிறந்த தமிழ் புத்திஜீவியுமான அமரர் நீலன் திருச்செல்வம் அவர்களுடன் இணைந்து செயல்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக அமரர் நீலன் திருச்செல்வத்தை புலிகள் தற்கொலைக் குண்டுதாரியை அனுப்பி அவரைப் படுகொலை செய்தனர். அவரோடு இணைந்து பணியாற்றிய இரா.சம்பந்தன் மீனுக்கு வாலும் பாம்புக்கு தலையும் காட்டுவதுபோல் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கும், புலிகளுக்கும் தனது புத்திசாலித்தனத்தைக் காட்டித் தப்பித்தார். கூடவே சந்திரிகா அம்மையாரிடம் தனக்குப் புலிகளால் ஆபத்து இருப்பதாகவும், நீலன் திருச்செல்வத்தைப் போல தற்கொலைக் குண்டுதாரியை அனுப்பி கொலை செய்யக் கூடும் என்றெல்லாம் கூறி, குண்டு துளைக்காத சிகப்புக் கார் ஒன்றையும் பெற்றுக் கொண்டார். ஆனாலும் புலிகளின் அழுத்தத்தையும், எச்சரிக்கைகளையும் தொடர்ந்து பாராளுமன்றத்தில் சந்திரிகா அம்மையார் தீர்வுப் பொதியை சமர்ப்பித்த போது, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து தீர்வுப் பொதியை எதிர்த்தனர். ஐக்கிய தேசியக் கட்சி ஒரு படி மேலே போய் தீர்வுப் பொதியை பாராளுமன்றத்துக்குள்ளேயே கிழித்து தீ மூட்டியது. இது ஐக்கிய தேசிய கட்சியால் நடத்தப்பட்ட இன்னொரு "கறுப்பு நாளாக" அக்கால கட்டத்தில் வர்ணிக்கப்பட்டது.

இதே தீர்வுப் பொதியை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நிராகரிக்காத போதும் தேவையான சில முக்கிய திருத்தங்களையும், ஆலோசனைகளையும் தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களாகத் தீர்வுப் பொதியில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு, அது குறித்த 19 பக்க இணைப்பையும் முன்வைத்தது. இந்த இணைப்பை, சந்திரிகா அம்மையார் முன்வைத்த தீர்வுப் பொதியோடு இணைத்துக் கொண்டார் என்பது வரலாறு. இதன் பின்னர் ஈ.பி.டி.பி.யின் அரசியல் வளர்ச்சியையும், ஈ.பி.டி.பீ.யினரை நோக்கி மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளப் படையெடுத்ததும் புலிகளுக்கு ஏற்படுத்திய தலையிடி காரணமாகவும், ஈ.பி.டி.பி.யினர் அரசில் பங்கெடுத்து அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றுக்கொண்டு மக்களை அனுகிய விதமும், தமிழர்களின் அரசியல் குறித்த குழப்பத்தை புலிகளுக்கும், ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் ஏற்படுத்தியதன் காரணமாக 2002ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் புலிகள், தாம் நேரடியாகப் போட்டியிடாவிட்டாலும், தமது கைக்கூலிகளாக யாரையாவது ஈ.பி.டி.க்கு எதிராக நிறுத்த வேண்டிய தேவையை உணர்ந்தனர். அந்த வாய்ப்பை சரியாகப் புரிந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஷ் அணி, தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் புலிகளின் தயவில் எம்.பி. பதவியைப் பெற்றுக்கொள்ளத் திட்டங்களைத் தீட்டின. புலிகளின் எதிர்பார்ப்பும் - இக்கட்சிகளின் திட்டமும் இறுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாகக் காரணமாக அமைந்தது.

என்னதான் ஒவ்வொரு கட்சியும் தனித்துவமாக இயங்க முடியும் என்று புலிகளில் கூறப்பட்டபோதும், கூட்டமைப்பைத் தவிர எந்தவொரு கட்சியும் தனித்துவத்தோடு இன்று வரை இயங்க முடியவில்லை. அதற்குப் புலிகள் அனுமதிக்கவும் இல்லை. இந்த நிலையை முன்கூட்டியே புரிந்து கொண்ட தற்போதைய தமிழ் விடுதலைக் கூட்டணியின் தலைவர், இந்தக் கூட்டமைப்பில் இணைய மறுத்தார். இன்றுவரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாரம்பரியம், அர்ப்பணிப்பு என்பவை உயிர் வாழ்வதற்கு ஆனந்தசங்கரியின் தீர்க்கதரிசன முடிவுதான் கவனம் என்று கூறப்படுகின்றது. 2002ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வி கண்டாலும் ஆனந்தசங்கரி பதவிக்காகத் தன்மானத்தையும், கட்சியின் கொள்கையையும் புலிகளின் காலடியில் அடகு வைக்காதவர் என்று இன்றும் தமிழ் புத்தி ஜீவிகளால் மதிக்கப்படுகின்றார். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளராகவிருந்த இரா.சம்பந்தன், சிரேஷ்ட உப தலைவராகக் இருந்த அமரர் பாரராஜ சிங்கம், தற்போது தமிழரசுக் கட்சியின் தலைவராக கூறிக்கொள்ளும் சிவாஜிலிங்கம் பா.உ., ஆகியோர் உட்பட ஏனைய சில கூட்டணி உறுப்பினர்கள் பதவிக்காக சோரம் போன வரலாறை கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி இன்னும் கதை கதையாகச் சொல்லுகிறார்.

இந்தக் கட்சித் தாவலில் கூட மட்டக்களப்பு மாவட்ட மக்கள், ஜோசப் பராஜசிங்கத்தை அங்கீகரிக்க மறுத்தனர். அதன் விளைவு ஜோசப் தோல்வி கண்டார். பின்னர் நிமலன் சௌந்தரநாயகத்தை சுட்டுக்கொன்று புலிகள் ஜோசப் பரராஜசிங்கத்தைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பினர். பின்னர் 2004ஆம் ஆண்டு தேர்தலில் ஜோசப் எம்.பி.யின் செல்வாக்கு கேள்விக்கிடமாகிய நிலையில், கருணாவினுடைய பிளவும், கருணாவின் ஆதரவு பெற்ற ராஜன் சத்தியமூர்த்தியின் செல்வாக்கும் ஓங்கியது. அப்போது புலிகள் ராஜன் சத்தியமூர்த்தியை சுட்டுக் கொன்றனர். ஜோசப் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் கூட்டமைப்புக்குத் தலைவராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் போட்டி எழும்பியபோது, மூத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில், சம்பந்தனுக்கும், ஜோசப்புக்குமிடையில் கடும் போட்டி நிலவியது. இன்னொருபுறமாக மாவை சேனாதிராஜா வடக்கைச் சேர்ந்த ஒருவருக்கே தலைமைப் பதவி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டதோடு தமிழரசுக் கட்சியின் தலைவர் தானேயென்று கூறிக்கொண்டு போட்டியிட்டதாகவும் கூறப்பட்டது. இறுதியில் சம்பந்தன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தென் இலங்கை அரசுகளோடு அவர் நெளிவு சுழிவுகளோடு உறவு கொள்வதும், இந்தியாவோடு இருந்த உறவும் இதற்கு ஒரு காரணமாக அமைந்தது. தவிரவும் திருமலையில், எப்போதும் ஒரு பிரச்சினையை ஏற்படுத்த விரும்பினால், சம்பந்தர் முன் நிற்பார் என்ற புலிகளின் எதிர்பார்ப்பும்தான். ஆனால் சம்பந்தர் ஹர்த்தால்களையோ, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையோ முன் நின்று நடத்தக் கூடியவராக இருக்கவில்லை. அதற்கு அவரது உடல் நிலையும் ஒத்துழைக்கவில்லை. இது புலிகளுக்குப் பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

> இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களில் இரா.சம்பந்தன் சில முக்கிய காலகட்டத்தைக் கடந்த அனுபவத்தையும், முதிர்ச்சியையும் கொண்டவர். அந்த வகையில் 1985ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் - தமிழ்ப் பிரதிநிதிகளுக்குமிடையில் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி 22ஆம் பக்கம்...

# அதிரடி அய்யாத்துரை



**காடு** கிடக்கிற கிடையில கரடி காவடி ஆடின கதையாக் கிடக்குதெண்டு முன்னமும் பல சந்தர்ப்பங்களில சொல்லியிருப்பன். இருந்தாலும் நான் என்ன செய்யங்கோ. அடிக்கடி உதே மாதிரி யாரும் காவடி தூக்கேக்க உதைச் சொல்லியாக வேண்டியிருக்கு. என்ன விசயம் தெரியுமோ. ஜூன் மாசம் நாலாம் திகதி ரெண்டெழுத்தாரின்ர தலைவர் இருக்கிறார் எல்லோ அவரின்ர செல்ல மகள் துவாரகாவுக்கு இருபதாவது பேர்த்டேயாம். அதுவும் லண்டனில தடல் புடலா நடக்கப் போகுதாம். முக்கியமான வைக்கு அழைப்புகளும் அனுப்பப்பட்டுட்டுதாம். தலைவரின்ர மிஸிஸ்தான் ஓடியாடி எல்லா ஏற்பாட்டையும் செய்யிறாவாம். அவா ஒரு கண்டிசனையும் போட்டிருக்காவாம். அதாவது, ரெண்டெழுத்தாரில எந்தப் பொறுப்பானவையும் மகளின்ர பேர்த்டேயிக்கு வரக்கூடாதெண்டு. உந்தக் கண்டிசன் தனக்கும் பொருந்துமோ எண்டு தெரியாமல் யோசிச்சுக் கொண்டிருக்கிறாராம் ஆலோசகர் மதுபாலா. திரும்பிற பக்கமெல்லாம் தடை தடையெண்டினமே எண்டதுக்காக வில்லங்கம் தங்களுக்கும் வந்திடப்போகுது எண்டாலதான் தலைவரின்ர மிஸிஸ் தங்களை அவாய்ட் பண்ணுறாவோ எண்டும் சிலபேர் யோசிக்கினமாம். உதில நான் என்ன சொல்லுறன் எண்டால், போராளிகள் செத்த தினத்தில தலைவர் பேர்த்டே கொண்டாடுறார். அவரின்ர மகள் இங்க படுகொலைகளும், இடப்பெயர்வுகளும் நடந்து கொண்டிருக்கேக்க அழைப்பிதழ் அடிச்சு பேர்த்டே கொண்டாடுறா எண்டதுதான் உந்தக் காவடிக் கதையை ஞாபகப்படுத்துது. தன்ர பிள்ளையளைப் பாதுகாப்பா அனுப்பிப்போட்டு ஊரான்ர பிள்ளைகளை கொலைக்கு அனுப்புறார் எண்டு கொப்பர் மேல ஒரு கரும்புள்ளி இருக்கேக்க, மகள் ஆரவாரமில்லாம பேர்த்டே கொண்டாடியிருக்கலாம். என்ன செய்யிறது பிள்ள ஆசைப்பட்டிட்டாள். நாங்களும் சொல்லுவம் "ஹெப்பி பேர்த்டே..."

**தமிழ்** நாட்டு முதலமைச்சருக்கு வாழ்த்துச் செய்தி கொண்டு போய் பெரும் பரபரப்புக்குள்ள இருக்கிறவர் எங்கட ஏழுமுகத்தார். அதுவும் அதிகாரத்தில இருக்கிறவரின்ர வாழ்த்தையும், செய்தியையும் கொண்டு போனதாலதான் உந்தப் பரபரப்புக் கிளம்பியிருக்குது. உந்தச் செய்தி தெரியவந்ததில மிச்சமாயிருக்கிற கொஞ்ச முடியையும் பிச்சுக் கொண்டு திரியிறாராம் மலையகத்தில முன்னணி நடத்திற மண்வெட்டியார். ஏன் எண்டால் நாங்கள் எல்லாம் ஒரு குடைக்குள்ள வந்திட்டம்; இனி இணைஞ்சு பொலிடிக்ஸ் பண்ணப்போறம் எண்டெல்லாம் கதை விட்டுக் கொண்டிருந்தவர் அவர்தான். தன்ர ரெண்டெழுத்தார் சைட்டை அவரும் தொடருவார் எண்டு தப்புக்கணக்குப் போட்டவரும் இவர்தான். கடைசியில அதிகாரமானவரின்ர செய்தியோடை தமிழ்நாட்டுக்குத் தூது போயிட்டாரே எண்டதுதான் மண்வெட்டியாருக்கு மனம் தாங்குதில்லையாம். உது தான் செய்யிறதெண்டால் தான் போய் பொன்னாடை போத்திப்போட்டு வரேக்கேயே சொல்லியிருந்தால் தானே முன்னிண்டு இன்னும் விலாசமா செய்திருப்பேனே எண்டும் சொல்லுறாராம். என்ன இருந்தாலும் ஏழுமுகத்தார் அளவுக்கு அதிகாரமானவரோடை மண்வெட்டியாருக்கு நெருக்கம் இல்லை எண்டதை ஏழுமுகத்தார் நிரூபிச்சுப்போட்டார். உதை தமிழ் தேசியத் துரோகம் எண்டும் சில உள்ளூர்க்காரர் சொல்லினமாமுங்கோ.

**பெட்டி** மாறுது பெட்டி மாறுது எண்டேக்க நான் ரெயில் பெட்டிதான் மாறுதாக்கும் எண்டு நினைச்சனான். பிறகுதான் தெரிஞ்சுது பதவிகளுக்காகப் பெட்டி மாறுதெண்டு. தலை நகரில யார் பதவி வகிக்கிறது எண்டதில பச்சைக் கட்சிக்கும் கண்ணாடிக் கட்சிக்கும் இடையில டீலுக்கு மேல டீல் நடக்குதாம். கடைசியில பெட்டி மேல பெட்டி மாறினதில கண்ணாடிக் கட்சிக்காரர் கையில காசு வாயில தோசையெண்ட கதையா தலையாட்டிட்டினமாம். எண்டாலும், தங்கட ஆக்கள் முதலில பதவி ஏற்று பிறகு இராஜினாமாச் செய்து விடுவினம். பிறகு நீங்கள் வேக்கன்சிகளை பில் பண்ணுங்கோ எண்டது தான் டீலாம். அதுபோலை கண்ணாடிக் கட்சி சார்பில மோதரையில ஓட்டோ ஓட்டுற இருபத்திரெண்டு வயசு இம்தியாஸ் மேயராகிறார். அவரின்ர மிஸிஸ் சவூதியில கவுஸ் வைப்பா இருக்காவாம். ஒரு வகையில பாத்தால் தலை நகரத்தின்ர முதல் குடிமகனான தம்பி இம்தியாஸ் வரலாற்றில ஒரு தடம் பதிச்சுப் போட்டார். நகரத்தின்ர முதல் குடிமகன், ஓட்டோ ஓட்டுறார் எண்டது புதுமையான செய்திதான். அவருக்கு ஒரு சபாஷ் போடுங்கோ... என்ன செய்ய பெட்டி மாறின டீல், உண்மையான ஒரு தொழிலாளி மக்களின்ர சேவகனாக தொடர்ந்து சேவை செய்ய முடியல்லை. பணம் பத்தும் செய்யும் எண்டுவினம். இங்க என்னடாவெண்டால் பதினொன்றும் செய்யுது. உதுக்கு நாம என்ன செய்யிறது. உதுதான் பொலிரிக்ஸ் எண்டு போட்டுப் போக வேண்டியதுதான்.

**அந்தப்** படை இந்தப் படையெண்டு தலைக்கு ஒரு பேரில ஒரு படை உருவாக்கி சனத்துக்கு தலையிடியைக் கொடுத்தது ஒருபக்கமிருக்க, புதுசா ஒரு படை உருவாக்கப்பட்டிருக்குதாம். இப்போதைக்கு உந்தப் படை யாழிலதானுங்கோ இயங்குது. அதாவது 'யாப்படை' எண்டதுதான் அதின்ர பேருங்கோ. உந்தப் படையின்ர வேலை என்ன தெரியுமோ? யாழில இருக்கிற சனத்தை என்னத்தைச் சொல்லியெண்டாலும் வன்னிக்குள்ள அனுப்புறதுதான். அவை வீடு வீடா இரவில போய், போங்கோ, யுத்தம் வரப்போகுதெண்டினமாம். போதாக்குறைக்கு சில துண்டுப்பிரசுரங்களையும் குடுக்கினமாம். எங்க இருக்கிற சனத்தை எங்க போகச் சொல்லினம் எண்டதிலையே யார் உந்தப் படையெண்டதும், உந்தப் படைக்குப் பக்கபலமாக யார் இருக்கினம் எண்டதையும் நீங்களே புரிஞ்சு கொண்டிருப்பியள். உதே மாதிரித்தான் உங்க உருவாகின எல்லாப் படையின்ர வரலாறும் எண்டதை இப்பவாச்சும் புரிஞ்சுகொண்டியள் எண்டால் சரிதான். சும்மா இருக்கிற சனத்தை குழப்பி விடுற உந்த யாப்படை எண்டவை யாரும் பிடிபட்டிச்சினமெண்டால் அவையை நையப் புடைப்பம் எண்டினமாம் பாதுகாப்புத்தரப்பார். யாப்படை ஆக்கள் வந்திருக்கினம் எண்டதை அவைக்குத் தெரியப்படுத்தட்டுமாம். சனம் தேடிக் கொண்டிருக்காம் யாப்படையை. துண்டுப்பிரசுரத்துக்குப் பிறகு கொஞ்சநாளா யாப்படையின்ர தலைக்கருப்பைக் காணயில்லையாம், ம்.... இன்னும் என்னென்ன பேரில படைகள் வரப்போகுதோ...

**ஏ.ஒன்பது** வீதியாலை யாழ்ப்பாணத்துக்குப் போறவையும் சரி, அங்கையிருந்து வாறவையும் சரி, இனிமேல் கொஞ்சம் அவதானமாகவே இருங்கோ. ரெண்டெழுத்தார் தங்கட கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ள சனத்தின்ர வாகனம் சோதனையிடப்பட்டு வெளிக்கிடேக்க வாகன உரிமையாளர்களுக்கே தெரியாமல் வெடிப்பொருட்களை வச்சுப்போடினமாம். உப்பிடி வெடிப்பொருட்களோடை முகமாலையில வச்சு ஒரு இஞ்சினியரும் பிடிபட்டவர். பிறகு போனமாசம் 27ஆம் திகதி ஒரு வாகனமும் பிடிபட்டது. அதேபோலை ஓமந்தையாலை வெளிக்கிடேக்க ஜெலிக்னைட் குச்சுகள், வெடிப்பொருட்களோடை இதுவரை அஞ்சுக்கும் அதிகமான வாகனங்கள் பிடிபட்டிருக்குது. உதில என்ன அநியாயம் எண்டால் வாகனங்கள் பிடிபடேக்க அந்த சனத்துக்கு ஒண்டும் தெரியாமலே கைது செய்யப்படுகினம் எண்டதுதான். ரெண்டெழுத்தார் ஏன் உப்பிடி செய்யினம் தெரியுமோ. சாமான் பிடிபட்டுதெண்டால் அது சனத்தோடை போயிடும்; தப்பிச்சுதெண்டால் இடை மறிச்சு தாங்கள் எடுத்துக் கொள்ளலாம் எண்டதுதான் திட்டமாம். சனத்தை கொலைக்கு குடுக்கிற சூப்பர் திட்டத்தில உதுவும் ஒண்டாக்கும் எண்டு நான் சொல்லயில்லையுங்கோ சனம் சொல்லுது.

**அந்தா** தொடங்கப் போகுது, இந்தா தொடங்கப் போகுதெண்டு தங்களை அவசர அவசரமாக இடத்தை விட்டு அனுப்பினாங்கள். நாங்கள் நாட்டை விட்டுப் போட்டு, செத்துப் பிழைச்சு அண்டை நாட்டுக்கு வந்திட்டம் இன்னும் ஒண்டையும் காணயில்லையே எண்டு சனங்கள் யோசிக்கினமாம். உதே கேள்வியை நாட்டில மிச்சமா இருக்கிற சனம் கேட்டதுக்கு ரெண்டெழுத்து உறுப்பினர்கள் சொல்லினமாம், மே முப்பதாம் திகதிக்குப் பிறகு அடிக்கப் போறம் இல்லாட்டில் ஜூன் பத்தாம் திகதிக்குப் பிறகு அடிக்கப் போறம் எண்டு சொல்லிக் கொண்டு திரியினமாம். உதென்ன முப்பதும், பத்தும் எண்டு கேட்டதுக்கு முப்பது இணைத்தலைமை நாடுகளின்ர முடிவு; பத்து நோர்வேக்கு எங்கட ஆக்கள் போய் வரவேண்டியிருக்கு. உந்த ரெண்டும் முடிஞ்சாப் பிறகு தான் தொடங்குவோம் எண்டினமாம். சனங்களை ஒரு பதற்றத்தோடை ரன்னிங்கில வச்சுக் கொள்ளுங்கோ எண்டு வன்னித்தலைமை சகல உறுப்பினர்களுக்கும் உத்தரவு போட்டிருக்குதாம். அதாலதான் அவையும் அதை இதைச் சொல்லி சனத்தை ரன்னிங்கில வச்சுக் கொள்ளினமாம். என்ன கொஞ்சம் ஓவரா ரன்னிங்கில வச்சுக் கொள்ளுறதுக்கு எடுத்த முயற்சிதானாம் சனத்தை நாட்டை விட்டே ஓடிப்போற அளவுக்கு ரெண்டெழுத்தார் கொடுத்த நெருக்கடியாம். போராளிகளுக்கு போர்க்குணம் மாறாமல் இருக்கவேணுமெண்டால் தாக்குதல், கொலையெண்டு நடக்கவேணும். அதையே சனத்துக்கு ரன்னிங்கை கொடுக்க வேணுமெண்டால் யுத்தம் வரப் போகுதெண்டு சனத்தை அலக்கழிக்கிறதுதானாம் ஒரே வழி...எதுக்கும் நீங்களும் ரன்னிங்கில இருங்கோ...

# செருப்பு

**முகத்துக்குக்** கொடுக்கும் முக்கியத்துவத்தை எவரும் கால்களுக்குக் கொடுப்பதில்லை. கால்கள் அழுக்கு உறைந்தும் கரடிகள் போல் நகங்கள் வளர்ந்தும் இருக்கும். சிலசமயம் பித்த வெடிப்பு இருப்பவர்களில் அநேகமானவர்கள் கால்களில் பக்கங்களைத் தேய்த்துக் கழுவுவதேயில்லை. இதற்கு எதிர்மாறாக சிலரைக் கண்டிருக்கிறேன். கால்களை அழகாக வைத்துக் கொள்ளும் விருப்பத்தில் தும்பு கொண்டு தண்ணீரில் ஊறிக்கொண்டே தேய்ப்பார்கள். இதில் ஆண்களை விடப் பெண்களே தமது கால்களைப் பராமரிப்பதில் எப்போதுமே முன்னிலை வகிக்கிறார்கள். அதிலும் கால்களுக்கு மஞ்சள் பூசும் பெண்களின் கால்களுக்கு இயற்கையாகவே ஒரு கவர்ச்சியும் அழகும் வந்து விடுகிறது. ஆனால் இன்னாளில் அப்படி மஞ்சள் பூசி நீராடும் பெண்களைப் பார்ப்பதே அபூர்வமாகிவிட்டது. அத்தி பூத்தாற்போல் கிராமத்துப் பெண்களில் மட்டும் அந்த அழகு இன்னும் உயிரோடு இருக்கிறது.

இப்படி கால்களைப்பற்றி நினைத்தாலே கால்களின் காவலனாக - கால்களின் தோழனாக - காலணிகள் வகிக்கும் பங்கு நிராகரிக்க முடியாதது. காலணி என்பது இன்னொரு விளக்கம் தேடும் சொற்பதம் என்பதால் செருப்பு என்று விளிப்பதே இலகுவாகிறது. ஆகவே செருப்பு பற்றி எனக்கு எப்போதுமே ஆச்சரியங்கள் ஏற்படுவதுண்டு. எத்தனை வடிவங்களில், எத்தனை வண்ணங்களில், எத்தனை வகைகளில், எத்தனை விதமான விலைகளில் தயாராகிக் கொண்டிருக்கிறது. வெறும் காலோடு காடுமேடெல்லாம் திரிந்து வேட்டையாடிய மனிதனின் வளர்ச்சிப்போக்கில் அல்லது நாகரீகத்தின் பிடியில் வளர்ந்து விட்டதன் விளைவு, வீட்டுக்குள்ளேயே சமையலறைக்கும் படுக்கையறைக்கும் கூட செருப்புப் போட்டுக் கொள்வதைப் பழகிக் கொண்டுவிட்டான். பெண்களின் அழகோடு செருப்பும் ஒன்றிப்போய்விட்டது. குதி நீண்ட செருப்பு - பூக்களின் வடிவம் பொருத்தப்பட்ட செருப்பு - மெல்லிய கம்பிபோல் ஒற்றைப் பட்டிகொண்ட செருப்பு - முழுக்கால்களையும் மறைத்துக் கொள்ளும் செருப்பு என்று பலரகம். அதுபோல் ஆண்களுக்கும் ஒட்டிப் பிரிக்கக்கூடிய செருப்பு, பட்டி மட்டும் பொருத்திய செருப்பு, பாதியாக கால்களை மறைக்கும் செருப்பு, முழுமையாக கால்களை மறைக்கும் செருப்பு என்று ஆண்களின் தெரிவில் ஒருரகம் அதுபோல் குழந்தைகளுக்கு, சிறுவர்களுக்கு என்று பல வடிவங்களில் அதிலும் குழந்தைகளுக்குப் பிரத்தியேகமாகத் தயாராகும் ஒலி எழுப்பும் செருப்புகள் பிரசித்தமானவை.




இத்தனை வகை வகையான செருப்புகள் இருந்தாலும் குளியலறை செருப்புகளின் கதை சோகத்திலும் சோகமானவை.

செருப்புகளிலும் சாதிகள் இருப்பதாகத்தான் நினைக்கிறேன். விலையுயர்ந்த வடிவங்கள் பொருந்திய மற்றைய செருப்புகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் குளியலறைச் செருப்புகளுக்கு இல்லை. வாசலுக்கு வெளியிலேயே அவை கழற்றப்பட்டு விடும். அவைகளுக்கு ஊர் சுற்றும் பாக்கியமோ, நிகழ்ச்சிகளுக்குப் போகும் வாய்ப்போ கிடையாது. வசதியானவர்களின் வீடுகளில் செருப்பு சாதிவாரியாகப் பிரிக்கப்படுகிறது.

செருப்பு பார்த்து அதை அணிந்திருப்பவரின் அந்தஸ்தை மதிப்பிடும் கேவலமான மனிதர்களை செருப்பு மதிக்கிறதோ இல்லையோ நான் மதிப்பதில்லை. செருப்புகளைப் பற்றி மனிதர்கள் கூறும் கதைகள் விசித்திரமானவை. செருப்பு கடித்துவிட்டதாக ஒருவர் சொல்வார். இன்னொருவர் சொல்வார் செருப்பு அறுத்துவிட்டது என்று; பிறிதொருவர் சொல்வார் செருப்பு தொலைந்து விட்டதென்று இந்தக் குற்றச்சாட்டு எதையும் செருப்பு ஏற்றுக்கொண்டதில்லை. ஏனெனில் அளவில்லாத செருப்பை போட்டது மனிதன், தொலைக்கப்பட்டது செருப்பு, அறுக்கப்பட்டது செருப்பு என்பதுதான் செருப்பின் நியாயம். எனக்கும் அதுதான் சரியென்றும் படுகிறது.



**தருவது**
**- தேசன்**



புனிதஸ்தலங்களின் வாசலில் செருப்புகளின் திருவிழாவைக் காணலாம். மனிதன் பொருளாதார ஏற்ற இறக்கங்கள் காரணமாகவோ, நாகரீக வளர்ச்சி காரணமாகவோ அல்லது வேலைப்பளு காரணமாகவோ ஆலாய்ப்பறந்து திரிந்து வாழ்ந்தாலும் திருவிழா அல்லது பண்டிகைகளிலேயே ஒன்றுகூடி மகிழ்கிறான். அதற்காகத்தான் திருவிழாக்களும் பண்டிகைகளும் கொண்டாடும் வழக்கம் முற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டதாக எங்கோ படித்த ஞாபகம்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

**இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**




# 'ஐ'க்கு ஒரு மனு


தொலைக்காட்சிகள் தொல்லைக் காட்சிகளாக மாறிவருகின்ற இக் காலகட்டத்தில், இலங்கையின் தேசிய தொலைக்காட்சியின் 'ஐ' அலைவரிசை பொழுதுபோக்கு, சுகாதாரம், அரசியல், கல்வி எனப் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை மிகவும் சுவையான விதத்தில் தொகுத்து வழங்கி, தனியார் தொலைக்காட்சி களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்குகின்றது.

'ஐ' அலைவரிசையில் தினமும் காலை 8.00 மணி தொடக்கம் 8.30 மணிவரை ஒளிபரப்பப்படும் 'நாளேடுகளில் இன்று' என்ற நிகழ்ச்சி காலத்திற்கேற்ற மிகவும் பயனுள்ள ஒரு நிகழ்ச்சியாகும். அத்துடன் மிகவும் அனுபவமுள்ள ஊடகவியலாளர்களினாலேயே இந்நிகழ்ச்சி தொகுத்து வழங்கப்படுவது நிகழ்ச்சியின் தரத்தை மிகவும் உன்னதமாக உறுதிப்படுத்துகின்றது.

அதேபோன்று பத்திரிகைகளிலும், அரசாங்க வர்த்தமானியிலும் வெளியாகும் பதவி வெற்றிடங்கள் தொடர்பான தகவல்களைத் தொகுத்து வாரமொரு முறை வழங்குகின்ற சிறப்பானதொரு நிகழ்ச்சியை 'ஐ' அலைவரிசை ஒளிபரப்ப வேண்டுமென்பது தொழில் தேடும் அனைவரினதும் அங்கலாய்ப்பாக இருந்துவருகின்றது. இதனை 'ஐ' அலைவரிசை நிறைவேற்றுமா?

*—முர்சிதா றஊப், மருதமுனை – 06.*





# மலையாள மாந்திரீக சக்தியின் வெற்றிகள்

இலங்கையில் மாந்திரீகத் துறையில் சுடர்விட்டு நிருபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம் என்றால் அது எமது நிறுவனம் மட்டுமே! வாங்கும் பணத்திற்கு பற்றுச் சீட்டு வழங்குவது என்றால் அது நாம் மட்டுமே! காரணம் தெட்டத் தெளிவான திடமான மாந்திரீக சித்தமே!

இதையொட்டி தினமும் எல்லா தினசரி பத்திரிகைகளிலும் தொலை காட்சியிலும், வானொலியிலும் விளம்பரம் செய்வதென்றால் எமது சேவையே! என்பதற்கு எடுத்து காட்டாக எல்லா வெளிநாட்டவர்களுக்கும் அவர்கள் எத்திசையில் வசித்தாலும் கடல் கடந்து செயல்படும் வண்ணம் அவரவர் முகவரியில் நாம் நேரடியாக மூன்றே நாளில் மாந்திரீக பொதிகளைக் கையளிப்பது என்பது எமது நிர்வாகத்தின் சிறப்புத் தன்மையே!

நான் வெளிநாட்டுக்குச் செல்லாமலேயே அனைத்து உலக மக்களுக்கும் தொலை பேசியில் என்னுடன் தொடர்புகொள்பவர்களுடன் அவரவர்க் குறைகளைக் கேட்டறிந்து ஏனோ, தானோ என்று இல்லாது தெட்டத் தெளிவான சேவை செய்வதாலேயே எமது நிறுவனம் நம்பிக்கை வாய்ந்த ஒரு வரையறுக்கப்பட்ட (Liability) கம்பனி நிறுவனமாக திகழ்கிறது. எத்தனை பேரிடம் பரிகாரம் செய்தாலும் கடைசியில் என்னிடம் வருவது என்பது நான் கண்ட உண்மையே! என்னிடம் வருவதற்கு உங்களுக்கு ஸ்ரீ துர்க்கா தேவியின் தேவ சித்தமும் அவசியமே! நான் ஒரு வேலையைப் பாரம் எடுக்கும் போது, அவர்களின் ஜாதகத்தை அக்கு வேறு ஆணி வேறாகப் பரிசீலனை செய்த பின்பே வேலைகளை ஆரம்பிப்பேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கு ஒப்ப நீரிழிவு நோயில் இருந்து பூரணமாக விடுதலை பெற, ஆண்கள் - பெண்கள் இரு பாலாரும் ஆஸ்த்மா நோயிலிருந்து விடுபட, மூல ரோகம் தீர, இளம் நரை போக்க, கூந்தல் அடர்த்தியாக வளரச் செய்ய, விசேடமாக ஸ்திரி - புருஷ வசியம், மூன்றே நாளுக்குள், விட்டுப் பிரிந்த கணவன் - மனைவி ஒன்று சேர, ஓடிப்போனவர் தேடி வர, கணவன் மனைவி தாம்பத்திய உறவு குறைப்பாட்டை நிவர்த்தி செய்ய, ஆண்மை குறைபாட்டில் இருந்து சந்தோஷம் பெற, தாமதிக்கும் திருமணம் தங்கு தடையின்றி நடக்க, திருமண தோஷம் அகல, குழந்தை பாக்கியம் கிட்ட, பூதம் காத்த காணி பூமி தோஷம் அகன்று, காணிகளை விற்பனை செய்ய, கல்வியில் சித்தி பெற, வெளிநாட்டுப் பிரயாணத் தடை நீங்க, வெளிநாட்டில் நிரந்தர வதிவிட வசதி கிட்ட வேளாண்மை செழிக்க, குடும்பத்தில் ஒற்றுமை நிகழ, தன் பிள்ளைகள் தாய் தந்தை பேச்சைக் கேட்டு திருந்தி வாழ, குபேர வாழ்வு பெற, லட்சுமி கடாட்சியம் கிட்ட, ஞாபக சக்தி பெற, மனம் விரக்தியடைந்தவர்கள் மனப் படபடப்பு, பதற்ற நிலை, கை, கால் நடுக்கம், இரவில் பயந்து எழுதல், மனப் பேதம் தீர, சூனியம் அகற்ற, மருந்திட்டல் அகலப்பண்ண அத்துடன் அருள் வாக்கு பெற, அருள் ஞானத்தில் கூறும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. நடப்பது, நடக்கப்போவது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, எந்த மாதம் நீங்கள் எண்ணிய எண்ணங்கள், எண்ணியபடி சரிவரும் என்று தெரிந்து அறிந்து செயல்பட இந்த அருள் ஞான சித்த வாக்கு கை கொடுக்கும்.

எமது ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் மாதம் தோறும் மாதக் கடைசியில் நடைபெறும் அக்கினி குண்டல யாக பூசையில் கலந்து கொண்டால் சகல பாவ தோஷ விமோசனம் கிட்டும்.

"என்னிடம் தீய வேலைக்கு இடமில்லை"
நல்லதை நினைப்போம். நல்லதையே செய்வோம்;
ஓம் சக்தி - சக்தி - சக்தி

தேவையான நேரத்தில் தேவைப்படுபவர் -
உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி.
பேராசிரியர் டாக்டர் P.K.சாமி J.P.
(J.D.G.A.N)
Malaiyala Manthireeka Uchada Peedam.
162, Kotahena St, Colombo - 13.
T.P. 0112 342463 - 0112 3424464
0112 270615 - 0112 449110
0114 4613127
Fax - 0112 344831
E-mail - drpksamy@sltnet.lk

கிளை -
Sri Durkadevi Alayam,
No 33, Daily Fair, Nuwaraliya
T.P.052 2222508
052 2235097, 052 4490031, 052 4490035
052 2223093
Fax - 052 2223093
இன்னும் விபரங்களுக்கு எமது வெப் தளத்தை நாடுங்கள் :-
www.drpksamy .com

தெய்வீக மருத்துவம்
சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219
டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம், காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு, உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு

Tele/Fax : 065-2224825, +94777032844. Balu Sothidar @ hotmail.com.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"




# ஐரோப்பிய ஒன்றியத் தடை புலிகளை முடக்குமா?

**"ஐரோப்பிய ஒன்றியத் தடை, சமாதானத்துக்கா அல்லது யுத்தத்துக்கா வழிவகுக்கும்?" என்ற தலைப்பில் ஜெஹான் பெரேரா என்ற அரசியல் ஆய்வாளர் எழுதிய கட்டுரை, கடந்த 23ஆம் திகதி 'டெய்லிமிரர்' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றம் 29ஆம் திகதி கூடிப் புலிகள் மீது தடைவிதிப்பது குறித்து ஆராய்ந்து, இறுதி முடிவுகளை வெளியிடுவதற்கு முன்னதாகவே இக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது. இக் கட்டுரையின் சுருக்கத்தை இங்கே தமிழில் தருகிறோம்.**

**இலங்கை** தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம், புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக பட்டியல் இடுவதற்கான களநிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதனோடு புலிகள் தொடர்பாக பல்வேறு தடைகளும் விதிக்கப்படவுள்ளது. கடந்த வருடம் ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது பயணத்தடையை விதித்த பின்னர் இது தொடர்பாக என்ன நடக்கப் போகிறதென்று புலிகளுக்குப் போதியளவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், தமது நடவடிக்கைகளை மாற்றிக் கொள்வதற்குப் பதிலாக புலிகள் இயக்கம் சர்வதேச சமூகத்தின் மீது கண்டனம் செலுத்தியது. இலங்கை அரசின் பிரசாரங்களால் சர்வதேச சமூகம் தவறாக வழி நடத்தப்பட்டுள்ளதாகவும் புலிகள் இயக்கம் கண்டனம் தெரிவித்திருந்தது.

ஐரோப்பிய ஒன்றியம் பக்கச் சார்பாக நடப்பதாகவும் தவறான தருணத்தில் நீதியற்ற விதத்தில் தடையை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் முனைவதாகவும் புலிகள் இயக்கத்தின் பிரதான பேச்சுவார்த்தையாளர் அன்ரன் பாலசிங்கம் குற்றஞ்சாட்டியிருந்தார். இது புலிகள் இயக்கம் சுயவிமர்சனம் செய்ய தயாரில்லையென்பதை எடுத்துக் காட்டுகிறது. மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை அழித்தொழிக்கும் புலிகளின் நீண்ட கால நடைமுறை இப்போது அதிக அளவினரை அழித்தொழிக்கும் நிலைக்குக் கொண்டு போயுள்ளது. உண்மையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இத் தடையை விதிக்குமென்றால், சமாதான வழிமுறைகளிலிருந்து புலிகள் இயக்கம் வாபஸ் பெற்று தனித்துவமான பாதையொன்றினைத் தேட வேண்டியிருக்குமென்று அன்ரன் பாலசிங்கம் எச்சரித்துள்ளார். சர்வதேசத் தடை கள நிலையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லையென்பதை உலகுக்கெடுத்துக் காட்டும் விதத்தில் பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்று நடத்தப்படும் என்பதே இதன் உள் நோக்காகும்.

ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்ததும் இராணுவ நடவடிக்கைகளை அதிகரிப்பதன் மூலம் புலிகளை சர்வதேச ரீதியாகத் தனிமைப்படுத்த முடியுமென்று அரசாங்கம் நம்புகிறது.

தேசியவாத அரசியல் கட்சிகள் மட்டுமல்ல சிவில் சமூகத்தைச் சேர்ந்த சில தரப்பினரும் தீவிர யுத்தமொன்றின் மூலம் இன மோதலுக்கு விரைவான தீர்வுகாணமுடியுமென்று நம்புகின்றனர். யுத்தச் செலவுகள் மிக அதிகமாக இருக்கும். எவ்வளவு செலவாகுமென்று முன்கூட்டியே கணிக்கவும் முடியாது.

ஐரோப்பிய ஒன்றியம் உண்மையிலேயே புலிகள் இயக்கத்தின் மீது தடையை விதிக்குமானால் இலங்கையின் சமாதான முயற்சிகள் சம்பந்தப்பட்டிருக்கும் பெரும்பாலான நாடுகள் இனிமேலும் அம்முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவது மிகக் கஷ்டமான காரியமாக அமையும். தடை விதிக்கப்பட்டால், அரசாங்கத்திற்கு அது பெரும் திருப்தியை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்காகவே அரசாங்கம் பல வருடங்களாக பிரசாரம் செய்தும் வந்திருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியம் முற்றுமுழுதாக தடையை விதித்தால் அது புலிகள் இயக்கத்திற்கு அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். ஐரோப்பிய ஒன்றியம் 25 நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்டிருப்பதால் இதுவரை இல்லாத அளவுக்கு பாரிய பாதிப்புகளை புலிகள் இயக்கத்திற்கு ஏற்படுத்தும். அமெரிக்காவும் பிரிட்டனும் புலிகள் மீது ஏற்கனவே ஏற்படுத்தியிருக்கும் தடையைப் போலன்றி, ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கும் தடை புலிகளுக்குப் பாரிய பாதிப்புகளை அரசியல் ரீதியாக ஏற்படுத்தும்.

அமெரிக்கா புலிகள் மீது விதித்தத் தடையில், அரசியல் இலக்குகளை ஊக்குவிப்பதற்காக வன்செயல்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கமுடியாது என்று குறிப்பிட்டிருந்தது. எனினும் புலிகளின் அரசியல் இலக்குகள் குறித்து எவ்வித் தீர்ப்பையும் இத்தடை வழங்கவில்லை. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் விதிக்கப்போகும் தடை சிறிது முன்னேற்றகரமாக உள்ளது. புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் இல்லையென்றும் அவை ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென்றும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் பரிமாணம்

**அமெரிக்காவும் பிரிட்டனும் முன்னர் புலிகள் மீது விதித்த தடையைப் போலன்றி, புலிகள் மீது தடை விதிக்கக் கோரும் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தின் தீர்மானத்தில், ஓர் ஆழமான அரசியல் பரிமாணம் உள்ளது. அரசியல் நோக்குகளை முன்னேற்றுவதற்கென வன்செயல்கள் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்க முடியாதென, புலிகள் மீது அமெரிக்கா தடை விதித்தபோது கூறப்பட்டது. இதனை ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். புலிகள், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் இல்லையென்று கூறும் ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானம், புலிகளின் ஆயுதங்களைக் களைய வேண்டுமெனக் கோரியுள்ளது. புலிகள் இயக்கம், தனது இலக்குகளிலும் அந்த இலக்கை அடைவதற்கான வழிவகைகளிலும் பாரிய மாற்றமொன்றினை ஏற்படுத்தாத வரை, சட்டபூர்வ அந்தஸ்தைப் பெற முடியுமென்று அந்த இயக்கம் எதிர்பார்க்க முடியாதென்பதே, ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானத்தின் அரசியல் உள்ளடக்கமாகும்.**

புலிகள் இயக்கம் தனது இலக்குகளிலும் இலக்குகளை அடைவதற்கான வழி வகைகளிலும் பாரிய மாற்றமொன்றினைச் செய்வதற்கு முன்வராதவரை புலிகள் இயக்கத்திற்குச் சட்டபூர்வ அந்தஸ்து கிடைக்கப்போவதில்லையென்பதே ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானத்தின் அரசியல் உள்ளடக்கமாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈட்டப்பட்டவையை அடிப்படையாக வைத்தே ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் அமைந்துள்ளது. அதாவது சமஷ்டித் தீர்வொன்றைத் தேடுவது குறித்த 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் செய்து கொள்ளப்பட்ட ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலும் 2003ஆம் ஆண்டு ஜுன் மாதம் டோக்கியோ பிரகடனத்தின் அடிப்படையிலுமே ஐரோப்பியத் தீர்மானம் அமைந்துள்ளது. டோக்கியோ பிரகடனம் சமாதானத்துக்கான ஒரு வரைபினைக் கொடுத்திருந்தது.

மிக மோசமான மட்டத்தில் இடம் பெறும் மனித உரிமை மீறல்களுக்காகவும் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களுக்காகவும் அரசாங்கம் - புலிகள் ஆகிய இரு தரப்புகள் மீதும் பலத்த கண்டனத்தை ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. இரு தரப்புகளுமே மேற்கொண்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து காத்திரமானதும் சுயாதீனமானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தினதும் வடக்குக் கிழக்கு மக்களினதும் நம்பிக்கையை அரசாங்கம் பெற வேண்டுமென்றால், அப்பாவி மக்கள் மீதான வன்செயல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அரசாங்கம் சாதகமான முறையில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான வழிமுறையொன்றை ஏற்படுத்துவதன் மூலமும் முழு யுத்தமாக வெடிக்கக் கூடிய வன்செயல்களின் அபாயத்தை குறைத்துக் கொள்வதன் மூலமுமே மக்களின் நம்பிக்கையைத் தொடர்ந்தும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

பன்முகத்தன்மை, மனித உரிமைகள் ஆகியவற்றிற்கு மதிப்பளித்தல், இறுதியாக ஆயுதங்களைக் களைதல் ஆகியவற்றை நீண்ட காலத் தீர்வுக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றம் வரைபுகளை முன்வைத்துள்ளது.

நன்றி டெய்லி மிரர்

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**மேற்கண்ட** உரையாடல்கள் இன்னமும் உயிரோடிருக்கின்றன. இவ்வளவு உயிரோட்டமுள்ள ஓர் உரையாடலை அந்நாளில் வெள்ளித்திரையில் எழுதி என்னைப் போன்ற இளைய நெஞ்சங்களில் தமிழை விதைத்த புண்ணியவான், இன்று பொருளாதார நெருக்கடியில் விழி பிதுங்கிக் கொண்டிருப்பதை எண்ணும்பொழுது - என் இதயத்தில் அப்பிக் கிடந்த மிச்சம் மீதமுள்ள அகந்தையையும் நானே



அலம்பிவிட்டுக் கொண்டு அடக்கத்தைப் பாலபாடமாகப் பயிலத் தொடங்கினேன்.

ஒரு சிறுவன் மூலம் என்னிடம் ஐம்பது ரூபாய் கேட்டுக் கடிதம் கொடுத்து அனுப்பியவர், 'கதர்' என்னும் பத்திரிகையை ஆதிநாட்களில் நடத்திய திரு.தணிகாசலம் ஆவார்.

தணிகாசலம் என்று சொன்னால் புரியாது; 'இளங்கோவன்' என்று சொன்னால் உங்களுக்குச் 'சட்டெனப் புரியும்'.

எனக்கு வளமைதான் புதிதே தவிர, வறுமை புதிதல்ல - என்கிற வாக்கியத்தை நான் என் உள்ளச் சுவரில் எப்பவோ ஒட்டி வைத்துவிட்டேன். என்னுடைய முன்னேற்றத்திற்கு இறைவன் அருள்தான் காரணமே தவிர, ஏனைய மக்களைக் காட்டிலும் நான் மெத்தப் படித்தவன் என்பதல்ல. என்னிலும் தமிழ் கற்றோர் ஏராளம் என்பதில் எள்ளளவும் எனக்குச் சந்தேகமில்லை. புகழ் வெளிச்சம் என் மேல் பரவியிருப்பது பரம்பொருளின் கொடையேயல்லாது, என் செயல் ஏதுமில்லை. பெற்ற தாய்தான் எனக்குப் பரம்பொருள்.

காரைக்குடி கம்பர் விழாவில், கவியரங்கத் தலைமையை அடியேன் ஏற்க நேர்ந்தபொழுது, கம்பனடிப் பொடியவர்கள் என் இருகரம் பற்றி அழைத்துச் சென்று, என்னை மயிலாசனத்தில் இருத்தினார்கள்.

உடனே நான் பாடினேன்;

*'இம்மாசனம் அலங்கரிக்கும்*
*இப்பெரிய பாட்டரங்கின்*
*சிம்மாசனம் எனக்களித்தீர்;*
*சிறப்புற்றேன்; எல்லாமென்*
*அம்மா செய்த தவமல்லால்*
*அடியேனின் சிற்றறிவிற்கு(கு) -*
*அம்மாவோ! அம்மம்மாவோ!*
*அத்துணை ஏற்றமில்லை!'*

புகழ்வாய்ந்த கவிஞர் பெருமக்களாகிய ம.வே.பசுபதி; சொ.சொ.மீ. சுந்தரம்; குருவிக்கரம்பை சண்முகம்; அருநாகப்பன்; வா.மு. சேதுராமன்; வைரமுத்து, பொன்மணி வைரமுத்து; மு.மேத்தா; நா.காமராசன், அப்துல் ரகுமான்; மரியதாஸ்; தங்க அன்புவல்லி; தமிழ்வேள்; நாமக்கல் ராமராஜன்; இளந்தேவன்; பாவலர் மணிசித்தன் - என்று நிறையத் தமிழ் சுற்று நிறைகுடமாய் விளங்குகின்ற நல்லோரெல்லாம், கவியரங்கங்களில் என் தலைமையை ஏற்றுப் பாடியிருக்கிறார்கள். இது அவர்கள் பெருந்தன்மைக்குச் சான்றே தவிர, என் புலமைக்கல்ல.

பாட்டரங்கிலேயே, மேற்சொன்ன கவிஞர் பெருமக்களைச் சுட்டிக் காட்டி நான் பாடியிருக்கிறேன்.

*"நேரடையும் நிரையசையும்*
*நன்குணர்ந்து - பாட்டுத்*
*தேரசைய வடம்பிறக்கத்*
*தெறிந்தவர்ள நீங்கள்! - யானோ*
*நூலறிவும் நுண்ணறிவும் நீரந்த*
*அளவில்லர்*
*காலறிவும் வாய்க்காமல்*
*கவியரங்கத் தேறி நின்றேன்!"*

'நேரசையும் நிரையவையும் நன்குணர்ந்து - பாட்டுத் தேரசைய வடம்பிடிக்கத் தெரிந்தவர் நீங்கள்! - யானோ நூலறிவும் நுண்ணறிவும் நீரறிந்த அளவில் ஓர் காலறிவும் வாய்க்காமல் கவியரங்கத் தேறி நின்றேன்!'


- இது, அவையடக்கம் என்ற பெயரால், பொய்யாகப் புனைந்துரைத்த பனுவல் அல்ல; உள்ளத்தில் உள்ளதை உள்ளபடியே ஓதிய உண்மை.

(தொடரும்.......)




---

## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....




**திட்டத்தை** நிறைவேற்றிக் கொள்ளும் கருவியாகவும் பயன்படுகிறது. கவர் என்பது ஒற்றர்களைப் பொறுத்தவரையில் வாழ்வா அல்லது சாவா என்பதை நிர்ணயிக்கின்ற விஷயம். இவர்கள் மேற்கொள்ளும் கவருக்கு ஏற்ற முறையில் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், நடவடிக்கைகள் அனைத்தையும் கெட்டிக்காரத்தனமாக மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

ஒரு காரியத்தைச் செய்வதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஒற்றனை சம்பந்தப்பட்ட இடத்தில் குடியேற்றிவிடுவதும் உண்டு.

உளவாளி அங்குள்ளவர்களோடு பழகி தன்னை அந்தப் பகுதியில் ஸ்தாபித்துக் கொண்டு, காலப்போக்கில் அங்கு வாழுகின்ற மக்களின் நம்பிக்கையைப் பெற்று விடுவான். அதற்குப் பிறகு எந்த வேலைக்காக அவன் அனுப்பி வைக்கப்பட்டானோ அந்த வேலையை எவரும் சந்தேகிக்காதவாறு முடித்துவிடுவான்.

சில சமயங்களில் இந்த ஒற்றர்கள் வேண்டுமென்றே குடிப்பது, விபச்சார விடுதிகளுக்குச் செல்வது போன்ற தீய பழக்கங்களை ஏற்படுத்திக்கொண்டு எல்லா வகை மக்களோடும் நெருங்கிப் பழகுவது உண்டு. இதன் மூலம் எவருடைய கவனத்திற்கும் வராமல் மக்களோடு மக்களாக ஐக்கியமாவது சாத்தியமாகிவிடுகிறது மோசமான நடத்தை உள்ளவன் என்பதால் மற்றவர்கள் இவனை அலட்சியப்படுத்தி புறக்கணிப்பது உளவு வேலைக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்துவிடுகிறது.

இன்னனொரு வகை வகை 'கவா' இருக்கிறது. பெரிய வர்த்தகரைப் போலவோ தொழிலதிபரை போலவே தன்னைக் காட்டிக்கொண்டு உயர்மட்ட மக்களிடையே பழகி அவர்களுடைய விருந்துகளிலும் கேளிக்கைகளிலும் கலந்து கொண்டு பெரிய இடத்து தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு தகவல் சேகரிப்பதும் உண்டு. ஒரு ஒற்றன் உளவு பார்க்கும் வேலையில் ஈடுபட்டு சந்தேகத்தின் காரணமாக பிடிபடுகின்ற போதுகூட தன்னுடைய நடத்தைக்கு நம்பும்படியான விளக்கங்களை சொல்லும் சூழ்நிலையை உருவாக்கிக்கொள்ள முடியும்.

1960-ல் U-2 அமெரிக்க விமானங்கள் ரஷ்ய பிராந்தியத்தின் மீது பறந்து உளவு வேலை பார்த்தன. இது ரஷ்யாவின் கவனத்திற்கு வந்தபோது இந்த அத்துமீறலை ரஷ்யா பலமாக ஆட்சேபித்தது. அமெரிக்காவில் 'NASA' என்கிற ஸ்தாபனம் வேலை செய்கிறது.

இந்த ஸ்தாபனத்தின் வேலை விஞ்ஞான ஆராய்ச்சியின் அடிப்படையில் தேச பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். ரஷ்ய பிராந்தியத்தின் மீது அமெரிக்க விமானங்கள் அத்துமீறி பறப்பதற்கு இந்த ஸ்தாபனம் ஒரு விளக்கம் சொல்லிற்ரு. பருவநிலை பற்றி ஆராய்வதற்காக மிக உயரத்தில் பறந்தன என்றும், துருக்கியிலிருந்து விரைந்து திரும்பி பறக்கும் நிலை ஏற்பட்ட போது விமானிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு கட்டுப்பாடு இழந்து ரஷ்ய பிராந்தியத்திற்குள் நுழைய நேரிட்டு விட்டதாகவும் விளக்கம் சொன்னார்கள். அதாவது வானிலை ஆராய்ச்சிக்காக பறந்தோம் என்பது கவர். ஏவுகணைத் தளங்கள், விண்வெளிக் கலங்களை அனுப்பும் தளங்கள் ஆகியவற்றை பற்றிய தகவல்களை சேகரிப்பது நோக்கம்.

இன்னொரு சுவையான சம்பவம். ரஷ்யத் தலைவர்களான குருஷ்சேவ் புல்கானின் ஆகிய இருவரும் கப்பலில் பிரயாணம் செய்து பிரிட்டனுக்கு விஜயம் செய்தார்கள். அந்தக் கப்பலின் அமைப்பு பற்றியும் அதிலுள்ள நவீன சாதனங்கள் பற்றியும் அறிந்து கொள்ள மேற்கத்திய நாடுகளுக்கு, குறிப்பாக பிரிட்டனுக்கு மிகவும் ஆசை. போர்ட்மவுத் துறைமுகத்தை ரஷ்யக் கப்பல் அடைந்த போது வேவுகாரர் (Frogman) தங்களுடைய கப்பலை தாக்க முயன்றதாக குருஷ்சேவ் குற்றம் சாட்டினார். அந்தக் கப்பல் போர்ட்மத் துறைமுகத்தை அடைந்தபோது, நீருக்குள் மூழ்கி, நீர்மூழ்கி கப்பல்களின் அமைப்புகளை கண்டறியும் பிரிட்டிஷ் வல்லுனரான கமாண்டர்கிராப் தன்னுடைய அலுவலகமாகிய போர்ட்மவுத் துறைமுகத்தில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

# முழுக்கு

**பிரபல** பொப் பாடகி மெடோனா ஒரு நடிகையும் ஆவார் என்பது அறிந்ம விடயமாகும். எனினும் தற்போது இவருக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டுள்ளது!

அதாவது, பாடகியாக இவரை ஏற்றுக் கொள்கின்ற ரசிகர்கள், ஒரு நடிகையாக, முழுமையாக ஏற்றுக் கொள்வதில்லையாம்...

இந்த நிலையில், நடிப்புத் துறைக்கு ஒரு முழுக்குப் போட்டு விட வேண்டும் என மெடோனா முடிவு கட்டியுள்ளாராம்.






**கவர்ச்சி** நடிகை சீனா மிலர் தற்போது தனக்கென ஒரு தனித்துவத்தைக் கொண்டு வலம்வர ஆரம்பித்துள்ளார்.

அதாவது, பிரபல 'Pepe' ஜீன்ஸ் - காற்சட்டைகளின் உத்தியோகபூர்வ குறியீடு இவர் தான்.

சீனாவை பின்பற்றுகின்ற யுவதிகளும் கூட Pepe காற்சட்டைகளுடன் சீனாவைப் போலவே வலம்வர ஆரம்பித்தும் விட்டனர்.

---

**நடிகை** ஷெரோன் ஸ்டோன் தற்போது பிரான்ஸில் இருந்தவாறே Basic Instincet - 2 திரைப்படத்தின் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்.

இதனிடையே பிரான்ஸில் புதிய தொழில் கட்டளைச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஊர்வலமொன்றில் கலந்து கொண்ட மாணவர்கள் சிலர், இவர் சென்ற ஒரு வழியில் எதிரே வரவே, நடுநடுங்கிப் போனாராம் ஸ்டோன். பின்பு ஒருவாறு தன்னை சமாளித்தவாறு, 'குழந்தைகளே, வார்த்தைகளால் மட்டுமே பேசுங்கள்... கற்களைக் கொண்டு பேசாதீர்கள்' என உபதேசமும் செய்தாராம்!

கல்லே (ஸ்டோன்) கல்லுக்கு பயம் என்றால்...?






## மகிழ்வும் — அச்சமும்

**ஹொலிவுட்** நடிகை, ஜெயிக்க எல்பாவுக்கு ஓர் அதிர்ஷ்டம் வாய்த்துள்ளது. அதாவது 2006ஆம் வருட MTV திரைப்பட விருது வழங்கும் விழாவை இவர் தொகுத்து வழங்கவுள்ளார்.

இது தொடர்பில் அவரிடம் கேட்கப்பட்டபோது, தான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பதாகக் கூறி வருகிறார். அதே நேரம், தான் இதனை சரியாகச் செய்ய வேண்டும் என்பதில் அச்சமாகவும் உள்ளதாம்.

---




**பொலிவுட்** நடிகைகளிடையே கவர்ச்சியில் மிகச் சிறந்த நடிகை வங்காள நடிகையான பிபாஸா பாசு எனத் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் மிகப் பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சியான Zoom T.V. மூலம் ஒரு கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது.

இதன் போது கவர்ச்சியுடன் கூடிய 50 நடிகைகளை வெற்றி கொண்டு, பிபாஸா முதலிடத்தைப் பிடித்துக் கொணடுள்ளார்.

இந்த 50 பேரினுள் உலக அழகுராணிகளான ஐஸ்வர்யாராய், பிரியங்கா சொப்ரா மற்றும் சுஸ்மிதா சென்னும் அடங்குவர்.

ஆஹா... உலக அழகிகளையே மிஞ்சிய கவர்ச்சி அழகி!



## தேனிலவுச் சந்தை!

**திருமணம்** செய்து கொண்டவர்களது தேனிலவு என்பது அந்த இருவருக்கும் மட்டுமே சொந்தமானதாகும்.

என்றாலும், சில பிரபலங்களின் தேனிலவு விடியல்களை அறிந்து கொள்வதில் பலர் ஆர்வம் காட்டுகின்றனர்.

பிரபல பொப் பாடகியான பிரிட்னி ஸ்பெயர்ஸ், அவரது கணவரான கெவின் பெடர் லைன் ஆகியோரது தேனிலவு மிகவும் இரகசியமான முறையில் பிஜி தீவில் நடைபெற்றமை பலர் அறிந்த விடயமாகும்.

என்றாலும், தேனிலவில் இவர்களது நெருக்கமான 80 புகைப்படங்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன.


ஈ-பே எனும் இணைத்தளத்தின் ஊடாக விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஒரு நிறுவனம், இவர்களது புகைப்படங்களை விற்பனைக்காக பிரபலப் படுத்தியுள்ளது.

எவ்விதமான மாறுதல்களும் செய்யப்படாத இந்த 80 புகைப்படங்களையும் 8,000 அமெரிக்க டொலர்கள் கொடுத்து எவரும் வாங்கிக் கொள்ளலாம் என்றும் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

# திபெத்தை சீனா கைப்பற்றியது; தலாய் லாமா, இந்தியாவில் அடைக்கலம்

**திபெத்** நாட்டை சீனா கைப்பற்றிக் கொண்டதால், அந்த நாட்டின் அதிபராக இருந்த தலாய் லாமா இந்தியாவுக்கு ஓடிவந்தார். அவருக்கு இந்திய அரசாங்கம் அடைக்கலம் கொடுத்தது.

இந்தியாவின் வட எல்லையில் உள்ள திபெத், 1959ஆம் ஆண்டுவரை தனி சுதந்திர நாடாக இருந்து வந்தது. புத்த மதத் தலைவரான




தலாய் லாமா, நாட்டின் அதிபராகவும் இருந்து வந்தார்.

(ஒரு தலாய் லாமா இறந்ததும், திபெத்தில் அதே நிமிடம் பிறந்த குழந்தை அடுத்த தலாய் லாமாவாக தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம். அதாவது, இறந்த தலாய் லாமா மறு பிறப்பு எடுப்பதாக திபெத்தியர்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

தற்போதைய தலாய் லாமா, 1935ஆம் ஆண்டு பிறந்தவர். திபெத் நாட்டின் 14ஆவது தலா லாமா.)

சீனாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து திபெத் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். இந்த கிளர்ச்சி, பிறகு புரட்சியாக மாறியது.

புரட்சியை அடக்கும்படி இராணுவத்துக்கு சீன அரசாங்கம் உத்தரவிட்டது. இராணுவத்தின் அடக்குமுறையை தாங்க முடியாமல், திபெத்திய மக்கள் குடும்பம், குடும்பமாக வெளியேறத் தொடங்கினார்கள்.

திபெத் தனி நாடு என்றாலும், சீனாவின் அதிகாரத்துக்கு உட்பட்டு இயங்கி வந்தது.

## சீனா கைப்பற்றியது

இந்த நிலையில் 1959ஆம் ஆண்டில் திபெத்தை கைப்பற்றிக் கொள்ள சீன அரசாங்கம் முடிவு செய்தது. சீன இராணுவம் திபெத்துக்குள் நுழைந்தது.

திபெத்தின் தெற்கு எல்லையில் நேபாளம், பூடான் ஆகிய நாடுகள் இருக்கின்றன. இந்த நாடுகளுக்கு திபெத்தியர்கள் ஓடுவார்கள் என்று சீனா கருதியது. எனவே அவர்களுக்கு அடைக்கலம் தரக்கூடாது என்று நேபாளம், பூடான் நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்தது. மேலும் நாட்டை விட்டு ஓடும் திபெத்தியர்களை சுட்டுக் கொல்லும்படியும் உத்தரவிடப்பட்டது.

## தலாய் லாமா வெளியேறினார்

சீன ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து தலாய் லாமா நாட்டை விட்டு வெளியேறினார். அவர் எங்கு சென்றார் என்பது மர்மமாக இருந்தது. அவரைப் பற்றி பல்வேறு யூகங்களுடன் செய்திகள் வெளிவந்தன.

தலாய் லாமா ஒரு மலையில் இருந்து விழுந்து விட்டார் என்றும், இதனால் அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் படுத்த படுக்கையாக இருக்கிறார் என்றும் ஒரு தகவல் வெளியானது. அதே நேரத்தில் புரட்சிக்காரர்களுடன் தலாய் லாமா தப்பி ஓடிவிட்டார் என்றும், அவர் திபெத்தை விட்டு வெளிநாட்டுக்குப் போய் இருக்க முடியாது என்றும் மற்றொரு தகவல் கூறியது.

தலாய் லாமா திபெத்தில் உள்ள 'லோகா' என்ற பகுதிக்கு கடத்திச் செல்லப்பட்டு இருப்பதாக சீன செய்தி நிறுவனம் அறிவித்தது. தலாய் லாமா எங்கிருந்தாலும் பிடித்து விடும்படி படைகளுக்கு சீன அரசு உத்தரவு பிறப்பித்தது.

தலாய் லாமாவுக்குப் பதிலாக 'பஞ்சன் லாமா' என்பவரை திபெத்தின் புதிய நிர்வாகியாக சீன அரசாங்கம் நியமித்தது. இவர் தலாய் லாமாவுக்கு எதிரானவர். சீனாவின் கைப்பொம்மையாக செயல்பட்டு வந்தவர்.

திபெத்தில் ஏற்பட்டுள்ள இரத்தப் புரட்சியை அமெரிக்கா தடுத்து நிறுத்த வேண்டும் என்று அமெரிக்காவில் உள்ள 'லாமா'க்கள் கேட்டுக் கொண்டார்கள். அமெரிக்க தலைநகரில் ஊர்வலம் நடத்தி கோஷம் போட்டார்கள்.

சீன அரசாங்கம் ஒரு அறிவிப்பை வெளியிட்டது. திபெத்தில் நடந்த புரட்சி இப்போது முழுவதுமாக அடக்கப்பட்டு விட்டது. 4 ஆயிரம் பேர் கைதிகளாகப் பிடிபட்டுள்ளனர். ஏராளமான போர் ஆயுதங்கள், துப்பாக்கிகள், குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன" என்று அறிவித்தது.

## பாராளுமன்றத்தில் விவாதம்

திபெத் நிலைமை பற்றி இந்திய பாராளுமன்றத்தில் விவாதம் நடந்தது. இந்த விவாதத்தின் போது ஒரு எம்.பி. பேசுகையில் தலாய் லாமா இந்தியா வந்தால் அவருக்கு அடைக்கலம் கொடுப்பீர்களா? என்று கேட்டா.

அதற்கு பிரதமர் நேரு, "அப்பொழுது இருக்கும் சூழ்நிலைப்படி நடந்து கொள்வோம்" என்று பதில் அளித்தார்.

அவர் மேலும் கூறியதாவது :-

"சீனாவுடன் நட்புடன் இருக்க இந்தியா விரும்புகிறது. எனினும், திபெத் நாட்டில் நடைபெறும் சம்பவங்களை 'வெளிநாட்டு விவகாரம்' என்று தள்ளி விடுவதற்கு இல்லை.

திபெத் சுதந்திரம் அடைவதை இந்தியா ஆதரிக்கும்.

இந்திய எல்லையில் சீன இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தி தவறு"

இவ்வாறு நேரு கூறினார்.

## 200 பேர் சாவு

புரட்சியின் காரணமாக 200 திபெத்தியர்களை சீன இராணுவம் கொன்றதாகவும், அந்த நாட்டின் நிலப்பரப்பில் 10 இல் ஒரு பங்கு புரட்சிக்காரர்களின் வசம் இருப்பதாகவும் தகவல் வெளி வந்தது.



இந்தியப் பிரதமர் நேருவுடன் தலாய்லாமா

புரட்சிக்காரர்களை ஒடுக்க சீன ராணுவம் பீரங்கிகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியது.

## இந்தியாவில் அடைக்கலம்

இந்நிலையில் "தலாய் லாமா இந்தியாவில் இருக்கிறார்" என்று 2.04.1959 அன்று சீனா திடீரென்று அறிவித்தது. "திபெத்தில் இருந்து தப்பிய லாமா, இந்தியாவுக்குச் சென்றுவிட்டார்.

அவரை இந்திய அதிகாரிகளும்,பத்திரிகை நிருபர்களும் சந்தித்தார்கள்" என்று அந்த அறிவிப்பில் சீனா கூறியது. ஆனால் இதை டெல்லியில் உள்ள அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை.

மறுநாள் பாராளுமன்றத்தில் பிரதமர் நேரு பேசினார். அப்போது "தலாய் லாமா இந்தியாவுக்கு வந்து இருக்கிறார்" என்று அறிவித்தார்.

இதைக் கேட்டு "எம்.பி."க்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

"தலாய் லாமா காயம் அடைந்து இருக்கிறாரா?" என்று ஒரு உறுப்பினர் கேட்டார். அதற்கு "இப்போது சுகமாக இருக்கிறார்" என்று நேரு பதில் அளித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"தலாய் லாமா அவருடைய ஆதரவாளர்களுடன் இந்தியாவுக்குள் வந்துள்ளார். அடைக்கலம் தரவேண்டும் என்று கோரியுள்ளார். அவருக்கு அடைக்கம் கொடுத்துள்ளோம். மீண்டும் திபெத் தலைவராக தலாய் லாமா ஆவாரா என்பது குழப்பத்தில் உள்ளது. இப்போதைக்கு அவருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளோம்."

பின்னர் பிரதமர் நேரு நிருபர்களிடம் கூறியதாவது:-


"தலாய் லாமாவை விரைவில் சந்திப்பேன்.

விரும்பத் தகாத கட்டுப்பாடுகளை அவருக்கு விதிக்க மாட்டோம். அதேபோல், அவரும் இந்திய அரசுக்கு தர்ம சங்கடமான நிலைமையை ஏற்படுத்தும் நடவடிக்கை எடுக்கமாட்டார் என்று நம்புகிறோம்."

இவ்வாறு நேரு கூறினார்.

## 'குளு குளு' நகரில்

தலாய் லாமாவுக்கு நேரு ஒரு கடிதம் அனுப்பினார். அதில், "காடுகளில் நெடுந்தூரம் பிரயாணம் செய்து களைத்துப்போய் வந்து



தலாய் லாமா

இருக்கும் உங்களை 'குளு குளு' நகரத்துக்கு அழைத்துப் போய் அங்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க முடிவு செய்து இருக்கிறோம். அங்கேதான் நல்ல ஓய்வு எடுக்க முடியும்" என்று எழுதியிருந்தார்.

## சீனா ஆத்திரம்

"தலாய் லாமாவை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்" என்று இந்தியாவிடம் சீனா கோரியது. ஆனால், அதற்கு நேரு மறுத்துவிட்டார்.

இதனால், இந்தியா மீது சீனா ஆத்திரம் அடைந்தது. 1962 செப்டெம்பர் மாதத்தில் இந்தியா மீது படையெடுத்தது. லடாக் பகுதியிலும், வடகிழக்கு எல்லைப் பகுதியிலும் நடந்த போரில், இந்தியாவின் சில பகுதிகளை சீனா கைப்பற்றிக் கொண்டது.

சீனாவின் போக்கை உலக நாடுகள் கண்டித்தன. அதனால், சீனப் படைகள் வாபஸ் ஆயின.

திபெத் நாடு, சீனாவுடன் இணைக்கப்பட்டு விட்டது. தலாய் லாமா இந்தியாவில் வசித்து வருகிறார்.

---




**1950இன்** பிற்பகுதியிலிருந்து அடுத்த 25 வருட காலங்கள் அமெரிக்க வரலாற்றில் மிக மோசமான காலம் என்றே வரலாற்றாசிரியர்கள் கருதி வருகின்றனர். இக்கால கட்டத்தில் தான் அமெரிக்காவுக்கு பெருமளவிலான இராணுவ உயிரிழப்புகளும் பொருட்சேதங்களும்



ஜனாதிபதி கென்னடி

ஏற்பட்டனவாம்.

ஆம். இக்கால கட்டத்தில்தான் அமெரிக்கா, வியட்நாம் எனும் நாட்டினை தாக்கியழிக்க முற்பட்டு தன் கையைச் சுட்டுக்கொண்டது. கிட்டத்திட்ட 30 இலட்சம் இராணுவ வீர, வீராங்கனைகள் கொல்லப்பட்டும், 10 இலட்சத்துக்கும் அதிகமான விமானங்கள் தாக்கியழிக்கப்பட்டதும் சுமார் 25 மில்லியன் மக்கள் இரு பக்கங்களிலிருந்தும் அநியாயமாகக் கொல்லப்பட்டதும் இந்தப் போரின் போது தான். இப் போருக்கான காரணம் தான் என்ன? பல வகையான காரணங்கள் பக்கச்சார்பு அடிப்படையில் கூறப்பட்டாலும் சரியான காரணம் -

இரண்டாம் உலகப் போரின் போது வியட்நாம் நாடு, பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளின் ஆட்சியின் கீழ் இருந்தது. இதில் பிரான்ஸின் ஆதிக்கமே அதிகளவில் இருந்தது. இந்நிலையில் வியட்நாமை விடுவிக்க ஹூ சிங் - மீயின் தலைமையில் விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்று வந்தன. ஆயினும் வியட்நாமின் சுயாதிக்கத்தை பிரான்ஸ் விரும்பவில்லை. 1954ஆம் ஆண்டில் - இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த பின்னர் - ஒருவாறாக பிரான்ஸ் தனது ஆதிக்கத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது. அதற்கு ஜப்பானும் உடன்பட்டது.

பிரான்ஸ் - வியட்நாமுக்கு சுயாட்சியை யாரிடம் வழங்குவது என்று குழப்பத்தில் இருந்தது. இதற்காக சுவிற்சர்லாந்து தலைநகரான ஜெனீவாவில் ஒரு சர்வதேச மாநாட்டை பிரான்ஸ் நடத்தியது. இதில் வியட்நாமின் சுயாட்சியை தான் வழங்குவதாகவும் தெரிவித்தது.

இதையடுத்து வியட்நாமை 17 பிரிவுகளாகப் பிரித்தனர். இதில் வியட்நாமின் தலைநகரமும், மற்றும் சில முக்கியமான பகுதிகளும் வட வியட்நாம் என்றும், மற்றைய பகுதியினை தென் வியட்நாம் என்றும் பிரிவுபடுத்தினர். வட வியட்நாமானது கம்யூனிஸ ஆட்சியை தக்கவைத்துக் கொண்டது. (ஆரம்பத்திலேயே வியட்நாமில் கம்யூனிஸ ஆட்சிதான் இருந்தது). தென் வியட்நாம் ஜனநாயக ஆட்சிமுறையைக் கைக்கொண்டது. தென் வியட்நாமின் அரசாங்கத்திற்கு நுகோ - டி - டிம் தலைமை தாங்கினார். இவர் ஜெனீவா சாசனத்தில் குறிப்பிடப்பட்ட ஜனநாயக ஆட்சிக்குப் புறம்பாக சர்வாதிகார ஆட்சியையே நடத்தினார். அதாவது தேர்தல் ஒன்றை நடத்தாமல் தானே எப்பொழுதும் தலைவனாக இருக்க வேண்டும் என்று நினைத்து வந்தார். தேர்தலை நடத்தினால் சுதந்திரப் போராட்ட நாயகனான ஹூ - சிங் - மீ தலைவராகிவிடுவார் என்று நுகோ பயப்பட்டார். நுகோவின் சர்வாதிகார ஆட்சிக்கு அமெரிக்கா உதவி வழங்கியது. இதற்காக அமெரிக்கா தனது இராணுவ சிப்பாய்களை அனுப்பியிருந்தது.

நுகோவின் ஆட்சி வெகுசீக்கிரத்திலேயே மக்களால் வெறுக்கப்பட்டது. அவரின் ஆட்சியை இல்லாதொழிக்குமாறு ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர் இதனை எல்லாம் உற்று நோக்கிய வட வியட்நாம், தென் வியட்நாமின் விசேட படையினரை இரகசியமாக அழைத்து அவர்களுக்கு கெரில்லா யுத்த முறையிலான போர்ப் பயிற்சியினை வழங்கி, நுகோவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருமாறு அனுப்பி வைத்தனர். இக் கெரில்லா யுத்த யுக்தியினை வட வியட்நாமின் தேசிய விடுதலை முன்னணி (NLF) வழங்கியது. இப்பயிற்சி நடவடிக்கையின் பின் தென் வியட்நாமில் பல அசம்பாவிதங்கள் நடந்தேறின. இதற்கெல்லாம் காரணம் வட வியட்நாம்தான் என்று அமெரிக்கா கண்டறிந்தது.

உடனடியாக 1962ஆம் ஆண்டு மேலதிகமாக 11,000 படை வீரர்களை அமெரிக்கா தென் வியட்நாமுக்கு அனுப்பிவைத்தது. இந்த ராணுவம் தென் வியட்நாமின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே அனுப்பி வைக்கப்படுவதாக அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அறிவித்தார்.



ஜனாதிபதி ஜோன்சன்

இவ்வாறாக எண்ணிக்கையில் அதிகரித்த அமெரிக்க படையினரால் தென் வியட்நாம் பறிபோகும் அபாயம் இருந்தது. அது உண்மையுமானது. 1963 நவம்பர் 1ஆம் திகதி நுகோவின் அரசாங்கத்தினை இராணுவப் புரட்சி மூலம் அமெரிக்க அரசாங்கம் கைப்பற்றியது. தென் வியட்நாமின் ஜனாதிபதியாக ஜோன்சன் நியமிக்கப்பட்டார். இவர் தென் வியட்நாமை சரியாக நெறிப்படுத்துவதைவிட்டு வட வியட்நாமை கைப்பற்றுவதில் குறியாக இருந்தார். இதற்காகப் பல சூழ்ச்சித் திட்டங்களை இவர் தீட்டினார்.

இதன் விளைவாக 1964 ஆகஸ்ட் 2ஆம் திகதி ஜனாதிபதி ஜோன்சன் தங்களுடைய கடற்படைக் கலன்களை வட வியட்நாமிய போர்க் கப்பல்கள் தாக்கியழித்ததாக அதிர்ச்சி அறிவித்தலை விடுத்தார். அது உண்மையாகவும் ஆக்கப்பட்டது. இதன் பயனாக அமெரிக்காவிலிருந்து தென் வியட்நாமின் பாதுகாப்புக்காக அமெரிக்க இராணுவத்தினர் பல மடங்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் வட வியட்நாமை தாக்கியழிக்கும் நோக்குடனேயே அனுப்பப்பட்டனர். *(தொடரும்)*

### கெரில்லா யுத்தம்

**மரபுவழி யுத்தத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட கெரில்லா போர் முறையானது, முறையற்ற அல்லது சட்டவிரோதமான யுத்தமாக ஆளும் தரப்பினரால் கருதப்பட்டாலும், இத்தாக்குதல் முறையானது எதிரிக்கு சிம்ம சொப்பனமாக அமையக்கூடிய சாதகமான இயல்புகளைக் கொண்டது. இத்தாக்குதல் முறையில் வரையறுக்கப்பட்ட குழுவாகவோ அல்லது தனிநபர்களாகவோ தாக்குதலில் ஈடுபடுவர். கெரில்லா போராளிகளை எதிரிகள் இனங்காண்பது கடினமானதாக இருக்கும். மேலும் குறைந்த இழப்புகளுடன் எதிரிக்கு பாரிய இழப்புகளை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு தந்திரோபாயங்களை கையாள்வது இதன் முக்கிய அம்சமாகும். இத்தகைய தாக்குதலில் ஈடுபடுபவர்கள் தமக்கேற்ற சிறந்த தளங்களை பின்னணியாக வைத்துக்கொண்டு மறைந்திருந்து திடீரென தாக்கி எதிரியை திக்குமுக்காட வைத்து, அவர்கள் சுதாகரித்து தாக்க முன்பே தப்பிச் சென்றுவிடுவார்கள். அத்துடன் எதிரி முன்னேறும் போது தந்திரமாக பின்வாங்கி, பின்னர் சமயம் பார்த்து அவர்கள் மீது திடீரெனத் தாக்குவார்கள். இத்தகைய தாக்குதலில் ஈடுபடுவோர்க்கு ஒரு இலட்சிய வெறி காணப்படும். அதனால் அவர்கள் எதிரிகளின் சிறிய பலவீனங்களைக்கூட சரியான முறையில் பயன்படுத்தி பெரும் அழிவுகளை ஏற்படுத்திவிடுவர். கெரில்லா யுத்தம் என்பது மக்கள் போராட்டத்தின் ஒரு அங்கமாக முன்பு விளங்கினாலும் இன்று அதிகம் அதனை பயங்கரவாத அமைப்புக்கள் தமது சுயநலத்திற்காக பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.**



குலத்தி லெண்ணற்ற பூண்டு பயிரினம்
கூட்டி வைத்துப் பலநலந் துய்த்தனை;
புலத்தை யிட்டிங் குயிர்கள் செய்தாய், அன்னே!
போற்றி! போற்றி! நினதருள் போற்றியே!

- சுப்பிரமணிய பாரதியார்



# இதுதேவையா?

அன்று ஒரே பரபரப்பாக இருந்தது. எங்கும் ஒரே பேச்சு...ஆச்சர்யக் குரல்கள். ஆறு பேர் கொண்ட நீச்சல் குழு ஒன்று ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்தது. அதில் ஒரு பெண் இந்தியாவைச் சேர்ந்தவள். பெயர் சி.என்.ஜானகி. பெண்கள் சாதனை செய்வது இப்போதெல்லாம் பெரிய விஷயம் இல்லையே என்கிறீர்களா? அதுவும் சரிதான். அதில் ஒரு சின்ன திருத்தம்.

அந்தப் பெண்ணுக்கு கால்கள் இல்லை! ஆம்! தனது இரண்டாவது வயதிலேயே இளம்பிள்ளை வாத நோய்க்குத் தன் இரண்டு கால்களையும் பறிகொடுத்து விட்டவள் அவள்! நடக்கவே முடியாத அந்தப் பெண்தான் பிரசித்தி பெற்ற நீச்சல் வீரர்களின் லட்சியக் கனவாகிய ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்தவள். இது எத்தனை பெரிய சாதனை?

மிகச் சிறிய வயதிலேயே இப்படி ஒரு சோகத்திற்கு ஆட்பட்டு விட்டதால் சிறுமி ஜானகி பட்ட பாடு சொல்லிமாளாது. சக மாணவ, மாணவிகளெல்லாம் ஓடியாடி விளையாடும் போது சிறுமி ஜானகி மட்டும் தன் விதியை எண்ணி வருந்தி மரத்தடியில் சோகமாக உட்கார்ந்திருப்பாள்! மற்றவர்களைப் போல் நம்மாலும் இஷ்டப்படி ஓடி விளையாட முடியவில்லையே என்கிற வருத்தம் அவளுக்கு. அந்த வருத்தமே நாமும் ஏதாவது பெரிதாகச் சாதித்து நான்கு பேர் போற்றிப் புகழும்படி பெயர் பெற வேண்டும் என்கிற வெறியாக மாறியது.



படிப்பு முடிந்ததும் ஜானகிக்கு சிண்டிகேட் வங்கியில் வேலை கிடைத்தது. தன் பணியில் கண்ணும் கருத்துமாக இருந்த ஜானகிக்கு 1985ஆம் வருடம் ஓர் அற்புதமான வாய்ப்பு வந்து சேர்ந்தது. அமெரிக்காவிலுள்ள விஸ்கோனஸினில் ஊனமுற்றோருக்கான நீச்சல் பயிற்சி முகாம் நடப்பதாகக் கேள்விப்பட்டாள். நாமும் அதில் கலந்து கொண்டால் என்ன என்று எண்ணினாள். கேட்டவர்கள் எல்லாம் எள்ளி நகையாடி, 'இது நடக்கக் கூடிய காரியமா....இது உனக்குத் தேவையா?' என்று கிண்டலடித்தனர். ஆனால், ஜானகி மனம் தளரவில்லை. அவளுடைய கால்கள் தாம் ஊனமாக இருந்தனவே தவிர, உள்ளம் உறுதியாக இருந்தது. அவள் விஸ்கோன்ஸில் சென்றாள். பயிற்சி பெறவும் தேர்ந்தெடுக்கப்பட்டாள்!

எத்தனையோ ஊனமுற்ற இளைஞர்களும், யுவதிகளும் உற்சாகத்துடன் நீந்துவதைப் பார்த்தாள் ஜானகி. அவளுக்கு

**பாப்பா முரசு சிறுகதை**

புதிய உற்சாகம் பிறந்தது! தன் பயிற்சியை கவனமாகவும், தீவிரமாகவும் கற்றுத் தேர்ந்தாள்.

நீச்சலுக்கு கால்கள் தான் மிக அவசியம். ஆனால் ஜானகி என்ன பண்ணுவாள்? மன உறுதி மிக்க அவள் தன் இரு கைகளையே கால்களாகவும் எண்ணி, தசைகளுக்கு வலுவேற்றி மும்முரமாக நீச்சல் கற்றாள்.

விரைவிலேயே கால் உள்ளவர்களுக்கு இணையாக அவளால் நீந்த முடிந்தது. ஜானகி தொடர்ந்து, இடைவிடாமல், தன் பயிற்சியைத் தொடர்ந்தாள். 20.கி.மீ. வரை அவளால் தொடர்ந்து நீந்த முடிந்தது. மேலும், மேலும் முயன்றாள். சாதனை புரியும் மன உறுதி அவளுக்கு மிக அதிகமாக இருந்தது. அவளது பயிற்சியாளர் தினேஷ் ஸ்வர்ணா, ஜானகியின் பயிற்சிக்கும் வெற்றிக்கும் பக்கபலமாய் நின்று உதவினார்!

இங்கிலாந்தில் உள்ள இங்கிலீஷ் கால்வாய் நீச்சல் வீரர்களின் லட்சிய சொர்க்கம். வாழ்நாளில் ஒரு முறையாவது அதை நீந்திக் கடக்க வேண்டும் என்பது அவர்களுடைய லட்சியமாக இருக்கும். ஜானகியால் சும்மா இருக்க முடியுமா? இங்கிலாந்திலுள்ள கால்வாய் நீச்சல் அமைப்புக்கு தன் விண்ணப்பத்தையும், தகுதிச் சான்றுகளையும் அனுப்பி வைத்தாள்.

இங்கிலாந்து கால்வாயை நீந்திக் கடப்பது, உலக நீச்சல் வீரர்களுக்குப் பெருமையான சாதனை ஆயிற்றே! ஜானகியின் விருப்பத்தை அந்த அசோஸியேஷன் ஏற்றது...அவளது சாதனைக்கான நாள் குறிக்கப்பட்டது.

ஜானகி ஆயத்தமானாள். அவளது பயணத்திற்கான செலவுகளை கர்நாடக அரசும், சில தனியார் நிறுவனங்களும் ஏற்றன. இப்படிக் கால் ஊனமுள்ள ஒருவர் அதுவும் பெண் - எப்படி இங்கிலாந்து கால்வாயைக் கடக்க முடியும் என்று பலரும் சந்தேகம் எழுப்பினர். அவர்கள் எழுப்பிய மறுப்புகள் எதையுமே ஜானகி சட்டை செய்யவில்லை.

குறித்த நாள் வந்தது.

36 கி.மீ. தூரமுள்ள இங்கிலாந்து கால்வாயை ஜானகி 14 மணி, 5 நிமிடத்தில் கடந்து சாதனை புரிந்தாள்! உலகமே அவளைப் பாராட்டி பெருமிதம் கொண்டது. ஜானகியால் இத்தனை பெரிய சாதனையைச் செய்ய முடிந்தபோது, நீங்கள் எல்லாம் சும்மா இருந்தால் எப்படி குட்டீஸ்...

# ஆத்திசூடி


## பெரியாரைத் துணை கொள்.

நீ அறிவு சார்ந்த ஒழுக்க சீலர்களைத் துணையாகக் கொண்டுக் ஐயங்களை அவர்களின் அறிவுரைகளைக் கேட்டுத் தெளிந்து வாழ்க்கையில் கடை பிடி.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# கற்றுக்கொள்!



ஊர்தி ஓட்டக் கற்றுக் கொள்.
உண்டு நிறைய வடிவங்கள்
சேர்ந்து விரைந்து போகலாம்.
சின்ன வயசில் பயில்கநீ!
சைக்கிள் பெடலை மிதிக்கையில்
சக்க ரங்கள் சுழலுமே.
கைக்குள் அடங்கும் பிடியினால்
திசையை மாற்றித் திருப்பலாம்.
ஒருவர் ஓட்டும் சைக்கிளில்
இருவர் பள்ளி செல்லலாம்.
சிறுவர் அதிகம் ஏறியே
செல்லும் வண்டி ஆட்டோதான்.
உறுதி, முயற்சி, பயிற்சியால்
பருந்து போல வானிலே
பறந்து போகும் விமானங்கள்.
இரண்டு தண்டவாளத்தில்
ஏறிப் போகும் புகைவண்டி.
நீரில் நீந்தும் கப்பல்கள்.
நீயும் ஓட்டக் கற்றுக்கொள்.

# அதிசய உலகம்

## பாம்புக் கழுத்துப் பறவை



டார்டர் என்ற பறவை இந்தியாவிலுள்ள துணைக் கண்டங்களில் எல்லாம் வசிக்கிறது. இதன் கழுத்து பாம்பைப் போன்று இருக்கும். கூரிய அலகை உடையது. கருப்பு நிறத்தில் உள்ள இதன் உடல் முழுவதும் சில்வர் க்ரே கலர் கோடுகள் காணப்படும். இதன் தலையும், கழுத்தும் வெல்வெட் ப்ரவுண் கலரில் இருக்கும். தாடையும் தொண்டையும் வெள்ளை கலரில் இருக்கும். நீந்தும் பொழுது இதன் உடல் முழுவதும் தண்ணீரில் இருக்கும். கழுத்தும் மூக்கும் மட்டுமே பாம்பு போல் வெளியில் தெரியும். இதன் விருப்ப உணவு மீன். இப்பறவை குஞ்சு பொறிக்கும் காலங்கள் ஜுன் முதல் ஆகஸ்ட் வரை. தண்ணீர் ஓரம் உள்ள மரங்களில் கூடுகள் அமைத்து குஞ்சு பொறிக்கும். ஒரே சமயத்தில் முட்டைகளை இடும். முட்டைகள் கிரீனிஷ் புளூ கலரில் இருக்கும்.

## தேன் ஆகும் விதம்



உங்களுக்குத் தெரியுமா ஒரு பவுண்ட் தேன் எடுப்பதற்கு ஏறக்குறைய இரண்டு மில்லியன் பூக்களிலிருந்து மகரந்தத்தை தேனீக்கள் சேகரிக்க வேண்டும் என்பது இந்த வேலையை வேலைக்கார தேனீக்கள் தான் செய்யும். இவை மிகவும் கடினப்பட்டு உழைத்து பூவிலுள்ள மகரந்தத்தைக் கொண்டு வந்து தேன் கூட்டில் வைத்து பாதுகாத்து தேனை உருவாக்கும். பூவின் மகரந்தம் மற்றும் தேனீக்களின் எச்சில் ஆகியவற்றால் உருவாவதே தேனாகும்.


# சில விடுகதைகள்

1. ஆடுவான் ஓடுவான் கரைவரை சீறுவான் அவன் யார்?
2. தாய் தெருவோரத்தில். மகள் மன்னர் முடியில். அவர்கள் யார்?
3. உன்னில் என்னைப் பார்த்தேன். என்னில் உன்னைப் பதித்தாய். நாம் யார்?
4. கொம்புள்ளவனிடம் வம்பில்லை. ஆனாலும் உயிர் காக்க ஓடுவதே வேலை. அவன் யார்?
5. தடுக்குப்போட்டேன் எடுக்கமுடியவில்லை. அது என்ன?
6. அவனை அடைக்கலாம்; பிடிக்க முடியாது. அவன் யார்?
7. ஐந்து வீட்டுக்கு ஒரு அழகு முற்றம். அது என்ன?
8. வெளிச்சத்தில் பிடித்தவனை இருட்டில் அவிழ்த்து விட்டான். அவன் யார்?
9. மாமா தோட்டத்தில் நகராமல் படுத்திருக்கும் மத யானை. அவன் யார்?
10. காற்றுக்குப் பருப்பான்; காற்றிலே பறப்பான். அவன் யார்?

**விடைகள்**

1. கடல் அலை.
2. முத்துச் சிப்பி - முத்து
3. முகம் பார்க்கும் கண்ணாடி
4. மான்
5. கோலம்
6. காற்று
7. உள்ளங்கை
8. புகைப்படம்
9. வைக்கோல்
10. பலூன்

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 06.06.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 646**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 644


**பரிசுக்குரியவர்:**
**புஷ்ரா, தரம் - யுகேஜி,**
**கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, கொழும்பு - 15.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சாஜிதா நசார், 3 A, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 12. | த.திவ்யா, புதிய தெரு, உப்புக்குளம், மன்னார். |
| கி.சதர்சன், 'திருவேரகம்', தும்புறுகிரிய வீதி, ஹட்டன். | ஏ.ஜே.பாத்திமா பஸ்னா, மாபுத்கமுவ, முல்லேரியா. |
| டிவின்ஸ்டன் டேவிட் ரவிக்குமார், 82, புதுச் செட்டித் தெரு, கொழும்பு - 13. | வீ.மயூரன், வீடமைப்புத் திட்டம், ஹிம்புட்டான, முல்லேரியா. |
| யோகராசா சிவாஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | ஸ்ரீவர்மன், புதிய கட்டிடத் தொகுதி, கொச்சிக்கடை. |
| ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | ர.வினோ, பிள்ளையார் வீதி, கோப்பாய் தெற்கு. |




# நட்புக்கு ஏது எல்லை!



**நட்புக்கு**, உயரம், சாதி என்பன அவசியமில்லையென்று சொல்லக் கேட்டுள்ளோம். ஆனால், நேராக கண்டதில்லை தானே. இங்குள்ள இரண்டு நாய்களும் நட்பிற்கு சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றன. சாதாரண நாய் இனத்தைச் சேர்ந்த இச் சிறிய நாயானது புல் டோக் வகையைச் சேர்ந்த பெரிய நாய் ஒன்றுடன் கூடி குலாவி இருப்பது பார்ப்பவர்களை பெரிதும் கவர்ந்ததாம்.


## உயர்ந்த உணவு



**பிரசல்ஸ்** நகரத்தைச் சேர்ந்த பல ஹோட்டல்களின் உரிமையாளர் ஒருவருக்கு ஏற்பட்ட அபூர்வ சிந்தனையின் விளைவே இது. அதாவது, க்ரேன் ஒன்றின் உதவியுடன் சாப்பாட்டு தளமொன்றை பல அடி உயரத்தில் நிலைநிறுத்தி அதில் ஒரு வேளை சாப்பாட்டினை வழங்கினாராம். இதற்காக விசேடமாக சமையல்காரர், பரிமாறுபவர் எல்லாம் இருந்தனர்.


# கேபிள் டிரெய்னில் பரிதாபம்

**ஸ்பைடர்** மேன் படத்தில் வரும் கேபிள் டிரெய்ன் இது. ஸ்பைடர் மேன் படத்தின் பின் இக் கேபிள் டிரெய்னை பார்வையாளர்கள் பார்க்க அனுமதி வழங்கினர். அதில்தான் பரிதாபம், திடீரென்று இயந்திரக்கோளாறு காரணமாக நதி ஒன்றின் மேல் சென்றுகொண்டிருந்த இக் கேபிள் டிரெய்ன் திடீரென செயலிழந்து நின்றது. இதனால் அதில் இருந்த 11 பேர் 69 நாட்கள் வெளிவரமுடியாமல் தவித்தனராம்.




**பாரம்பரிய** மன்னர்கள் பாவித்த பொருட்களை வைத்து ஏதாவது வித்தியாசமாக செய்ய எண்ணிய லீமா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் இந்த அரிய கண்காட்சியினை நிகழ்த்தினர். இக் கண்காட்சிக்கு விஞ்ஞானமும், ஓவியமும் என தலைப்பிட்டு நடத்தினர். மண்டை ஓடுகளால் ஆன விளக்கு தொகுதி ஒன்றே அனைவரையும் வெகுவாகக் கவர்ந்ததாம்.

## மண்டை ஓடுகளால் ஒளி



மிக அதிகளவில் அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் அந் நேரத்திலேயே சிறிய குட்டித் தூக்கம் ஒன்று போட்டால், உடலுக்கு மிகவும் நல்லது என்று அண்மையில் கண்டுபிடித்துள்ளார்கள். இதனை செயல்படுத்துமுகமாக சிட்னி நகரில் உள்ள சில அலுவலகங்களில் இந்த வகையான நித்திரை செய்யக்கூடிய உபகரணங்கள் பயன்பாட்டில் விடப்பட்டுள்ளன. இசையை இரசித்துக்கொண்டு சிறிய தூக்கம் ஒன்றை சொகுசாகக் கொள்ளலாமாம்.

**சாதாரணமாக** போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கலவரங்களில் கல்லடி வாங்குவது முன்னால் வரும் விசேட பொலிஸ்தான். ஆனால் கொலம்பியாவிலோ கல்லடி கொடுக்காமல் மலர்ச் செண்டுகளைக் கொடுத்து அவர்களை வரவேற்கிறார்கள். கொலம்பிய நாட்டு பல்கலைக்கழக ஆர்ப்பாட்டமொன்றின் போது குவிந்திருந்த கலகம் அடக்கும் பொலிஸாருக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவிகள் அரை குறையாக அணிந்து உடல் முழுவதும் வர்ணங்களை பூசிக் கொண்டு கற்களை எறியாமல், பூச்செண்டுகளை கொடுத்து அவர்களை தடை செய்தனர்.

## வேலையிடையே தூக்கம்




## கல்லுக்குப் பதிலாக பூ!





விக்னேஷ் - திவ்யா
ஆச்சார்யா

## ‘இம்சைக்கு’ சிக்கல்!

**வடிவேல்** நடித்து திரைக்கு வரக் காத்திருக்கும் ‘இம்சை அரசன் 23ஆம் புலிகேசி’ படத்துக்கு புதிய சிக்கல் எழுந்துள்ளது.

வடிவேல், நந்திதா, லக்ஷா, நாசர் உள்ளிட்டோர் நடிக்க சிம்புத்தேவன் இயக்கத்தில் தயாரான முழு நீள நகைச்சுவைப் படம் இது.

இப்படத்தில் வடிவேல் குதிரைச் சவாரி செய்வது போன்ற காட்சி இடம் பெற்றுள்ளது. இந்தக் காட்சிக்குப் படத்தின் தயாரிப்பாளர் ஷங்கர் தரப்பு விலங்குகள் நல வாரியத்திடம் அனுமதி பெறாததால் திரைப்படத்தை திரையிட சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மத்திய அரசின் மிருக வதைத் தடுப்புச் சட்டப்படி திரைப்படங்களில் மிருகங்களைப் பயன்படுத்தினால், விலங்குகள் நல வாரியத்திடம் அனுமதி பெறவேண்டும். மேலும் திரைப்படங்களில் விலங்குகளைப் பயன்படுத்த சில விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

அதன்படி படத்தில் மிருகங்களைப் பயன்படுத்தும் போது, ஒரு கால் நடை மருத்துவர் கூடவே இருக்க வேண்டும். படம் முடிவடைந்த பிறகு கால்நடை மருத்துவர் விலங்குகளின் உடல் நலன் குறித்து சான்றிதழ் கொடுக்க வேண்டும். அப்படி சான்றிதழ் கொடுத்தால் தான் படம் திரைக்கு வர முடியும் என்று மத்திய அரசின் சட்டம் கூறுகிறது.

சமீபத்தில் இந்தியா முழுவதும் 64 படங்கள் விலங்குகள் நல வாரியத்தின் அனுமதிக்காகக் காத்திருக்கின்றன. அதில் ‘இம்சை அரசன் 23ஆம் புலிகேசி’ படமும் ஒன்று.


இந்தப் படம் கடந்த மாதம் 26ஆம் திகதி திரைக்கு வரும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் விலங்குகள் நல வாரியம் அனுமதி கொடுக்காததால், படம் ரிலீஸ் தள்ளிப் போகும் எனத் தெரிகிறது.

## அசத்துப்போகும் ஆச்சார்யா!

**சேது,** சித்திரம் பேசுதடி உள்ளிட்ட படங்கள் ஆரவாரம் இல்லாமல் வந்து பட்டையைக் கிளப்பிய பட்டியலில் அடுத்து ஆச்சார்யா இருக்கிறதாம். இப்படம் சூப்பர் ஹிட்டாகும் என்று அதன் முன்னோட்டம் பார்த்தவர்கள் புகழ்கிறார்கள்.

இதில் நாயகனாக நடித்துள்ள விக்னேஷ் பேசப்படுவாராம். இசையும் பிரமாதமாக வந்துள்ளதாம். இசையமைத்த ஸ்ரீகாந்த் தேவாவை, அவர் தந்தை இசையமைப்பாளர் தேவா பாராட்டிப் பத்துப் பவுண் தங்கச் சங்கிலி பரிசளித்துள்ளார். குத்துப்பாட்டு இல்லாமல் மென்மையான இசையாம். பாட்டு சீன்களை எடுத்த பிறகு பாடலுக்கு இசையமைத்திருப்பது இப்படத்தின் விசேஷம். பாடல்களை முழுக்க ஆண்களே பாடியுள்ளனர்.


நவ்தீப் - ஷீலா
இளவட்டம்



## டிவிடியில் மருதநாயகம்!

**இதுவரை** எடுக்கப்பட்டுள்ள மருதநாயகம் படத்தின் காட்சிகளை டிவிடி வடிவில் வெளிநாடுகளில் புழக்கத்தில் விட்டுள்ளாராம் கமல்.

அந்த டிவிடியில் மருதநாயகம் படத்திற்கு நிதி உதவி கோரி ஒரு கோரிக்கையையும் வைத்துள்ளாராம்.

ஒவ்வொரு நடிகருக்கும் ஒரு லட்சியம், கனவு இருக்கும். கமலின் லட்சியம் மருதநாயகம். தனது லட்சியப் படத்தை இங்கிலாந்து ராணியை வைத்துத் தொடங்கினார் கமல்ஹாசன்.

படத்துக்கு பிரிட்டிஷ் நிதியுதவி வரவிருந்த நிலையில், போக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்தியது இந்தியா. இதையடுத்து இந்தியா மீது அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்டவை பொருளாதாரத் தடைகளை விதித்தன. அதில் கலை சார்ந்த படைப்புகளுக்கான நிதியுதவிகளுக்கும் தடை விழுந்துவிட, மருதநாயகம் தயாரிப்பு தடைப்பட்டது.

கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் வரை ஓடக் கூடிய காட்சிகளைப் படம் பிடித்து வைத்துள்ளார் கமல். அதற்காகவே அவர் ரூபா 20 கோடி வரை செலவிட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. சாபு சிரிலை வைத்து படத்துக்கான செட் அமைக்கவே பல கோடிகளைக் கொட்டினார் கமல். பணமில்லாமல் போனதால் வெறுத்துப் போன கமல், மருதநாயகத்தை நிறுத்திவிட்டார்.

இப்போது மீண்டும் மருதநாயகத்தை தூசி தட்டத் தொடங்கியுள்ளார். முதல் கட்டமாக நிதியுதவிக்கான முயற்சிகளைத் தொடங்கியுள்ளார்.

இதற்காக இதுவரை எடுக்கப்பட்ட மருதநாயகம் காட்சிகளைத் தொகுத்து, இளையராஜாவின் இனிய இசையின் பின்னணியில் 15 நிமிடங்கள் வரும் வகையில் தொகுத்துள்ளார்.

இதை டிவிடியாக அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் புழக்கத்தில் விட்டுள்ளார்.

அதில் ஒரு செய்தியையயும் வைத்துள்ளார். “இப்போது பார்த்த 15 நிமிடக் காட்சிகளை 3 மணி நேரப் படமாகப் பார்க்க வேண்டுமா? அப்படியானால் அந்தக் கனவு நனவாக நிதியுதவி செய்யுங்கள்” என்று கோரிக்கை வைத்துள்ளாராம் கமல்.



ரமேஷ் ஜெர்ரி

## விஜய்க்கு பாவனா ஸாரி

**விஜய்யுடன்** நடிக்க வந்த வாய்ப்பை பாவனா நிராகரித்துள்ளாராம்.

சித்திரம் பேசுதடி நாயகியான பாவனா காட்டில் இப்போது கோடை மழை பெய்து வருகிறது. ஏகப்பட்ட படங்களை வாரிப்போட்டுக் கொண்டு கல்லாக் கட்டி வருகிறார் மலையாள பால்கோவா பாவனா.

அஜீத், மாதவன் உள்ளிட்ட முன்னணி ஹீரோக்களின் படங்களில் ப... மும்முரமாக நடித்து வரும் பாவனாவை தேடி விஜய் பட வாய்ப்பு வந்தது.


அப்பச்சன் தயாரிப்பில் விஜய் நடிக்கவுள்ள புதிய படத்தின் நாயகியாக த்ரிஷா அல்லது அசினைப் போடலாம் என்று தயாரிப்பாளர் கூறியுள்ளார்.

ஆனால் விஜய் செலக்ஷன் பாவனாதான். இதனால் பாவனாவை தயாரிப்பாளர் தரப்பு அணுகியுள்ளது. ஆனால், படு டைட்டாக கால்ஷீட்டை வைத்திருந்ததால் விஜய் படத்தை ஒத்துக் கொள்ள முடியவில்லையாம் பாவனாவுக்கு.

ஏதாவது செய்து விஜய் படத்தையும் தேத்தி விடலாம் என பாவனா கடுமையாக முயற்சித்துப் பார்த்தார். ஆனால் முடியவில்லையாம். இதனால் விஜய் படத்துக்கு ஸாரி சொல்லி விட்டாராம்.


பாவனாவின் முடிவால் அப்செட் ஆகிப் போன விஜய், வேறு ஹீரோயினைத் தேடுமாறு சொல்லி உள்ளாராம்.

இந்தக் கேரக்டருக்கு பாவனாதான் சரியான சாய்ஸாக இருப்பார். ஆனாலும் அவரால் நடிக்க முடியாமல் போச்சே என்று நெருங்கியவர்களிடம் புலம்பினாராம் விஜய்.


ரஞ்சித் - சுஜிபாலா
தொன் சீரா

## விலைமாது சீஸன்

**புதுப்பேட்டை** படத்தில் கிருஷ்ணவேணி என்ற விலைமாதுவாக நடித்து அசத்தியிருக்கிறாராம் சினேகா. இந்தப் படம் தனக்கு நிச்சயம் தேசிய விருது வாங்கித் தரும் என்ற நம்பிக்கையில், சொந்தக் குரலில் டப்பிங் பேசியிருக்கிறார். இதையடுத்து ரஞ்சித் ஹீரோவாக நடிக்கும் டான் சேரா படத்தில் சுஜபாலா விலைமாதுவாக தத்ரூபமாக நடித்து அசத்திக் கொண்டிருக்கிறாராம்.


சுனித்தா வர்மன்

## ஹரிணியின் 'சென்னைக் காதல்'

**பாய்ஸ்** படத்தில் நடித்து அத்தோடு ஓய்ந்து போன ஹரிணி தெலுங்கில் விஸ்வரூபம் எடுத்தார். அங்கு வயசு வித்தியாசம் பார்க்காமல் தனது தாத்தா வயதுள்ள நடிகர்களுடன் எல்லாம் முழு ஒத்துழைப்பு தந்து நடித்தார்.

தெலுங்கிலேயே தொடர்ந்து காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் ஹரிணியை விஜய்யின் சித்தி மகன் விக்ராந்துக்கு ஜோடியாக ஒரு படத்தில் புக் செய்தனர்.

லட்சுமி கிரியேசன்ஸ் தயாரிக்கும் 'முதல் கனவே' என்ற படத்தில் ஹரிணி நடிக்கப் போகிறார் என்றார்கள்.

மும்பையில் வைத்து ஸ்ரீகாந்த் தேவாவின் இசையில் பாடல்கள் கூட ரெடியாகிவிட்டன.

ரொம்ப நாளைக்குப் பின் ஜனகராஜ், அதே போல நீண்ட நாட்களுக்குப் பின் ராஜலட்சுமி ஆகியோர் நடிக்கப் போவதாகக் கூறினர். பாலமுருகன் என்ற டைரக்டர் இதை இயக்கப் போகிறார் என்றார்கள்.

விக்ரமன் இயக்கவுள்ள படத்தில் சான்ஸ் கிடைத்திருக்கிறது. படத்தின் பெயர் 'சென்னைக் காதல்'.

இந்தப் படத்தில் ஹீரோ யார் தெரியுமோ? ஹரிணியுடன் பாய்ஸ் படத்தில் அறிமுகமான பரத் தான்.

இப்போது சித்தார்த் தமிழ்ப் பட சீனிலேயே இல்லை. தெலுங்கில் செட்டில் ஆகிவிட்டார் (அங்கும் ஹரிணியோடு ஒரு படத்தில் நடித்து வருகிறார்.)




நவ்தீப் - ஷீலா
இளவட்டம்



விஷால் - ரீமாசென்
திமிர்

## ஆபாச சிம்பு - ஆவேச ரீமா!

**சிம்பு** கொடுத்த டிரஸ் படு ஆபாசமாக இருப்பதாகக் கூறி அக்காட்சியில் நடிக்க மறுத்து, சிம்புவுடன் காரசாரமாக சண்டை போட்டார் ரீமா சென். இதனால் வல்லவன் சூட்டிங் ஸ்பாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தேனப்பன் தயாரிப்பில், சிம்புவின் கதை, திரைக்கதை, வசனம், இயக்கத்தில் நீண்ட நாட்களாக உருவாகி வரும் வல்லவன் படப்பிடிப்பு ஆரம்பம் முதலே பல்வேறு சர்ச்சைகளை சந்தித்து வருகிறது.

சிம்பு போகும் வேகத்தைப் பார்த்து மிரண்டு போன தேனப்பன், படத்தை சிம்புவுக்கே விற்று விட்டதாகக் கூட செய்திகள் வந்தன.

இதைத் தொடர்ந்து ரீமா சென்னுக்கும், சிம்புவுக்கும் பிரச்சினை ஏற்பட்டது. சிம்பு ஒரு டைரக்டரே இல்லை என்று ஆவேசமாக ரீமா சென் கூறினார். பதிலுக்கு, ரீமா சென் ஒரு நடிகையே கிடையாது என்று சிம்புவும் அதிரடியாக பேட்டி கொடுத்தார்.

இந்நிலையில் புதிதாக ஒரு சர்ச்சை. சமீபத்தில் சிம்பு, ரீமா சென், நயன்தாரா ஆகியோர் சம்பந்தப்பட்ட ஒரு பாடல் காட்சி படமாக்கப்பட்டதாம்.

பாடல் காட்சியில் நடிப்பதற்காக சிம்புவும், நயன்தாராவும் தயாராக இருந்தனர். ரீமா சென்னும் செட்டுக்கு வந்துவிட்டார். அவரிடம் இந்த டிரஸ்ஸைப் போட்டுக் கொண்டு வாருங்கள் என்று சிம்பு ஒரு டிரஸ்ஸைக் கொடுத்துள்ளார்.

அந்த டிரஸ்ஸைப் பார்த்ததும் ரீமா சென் அதிர்ச்சி அடைந்துள்ளார். மொத்தமே 3 கர்சீப்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட டிரஸ்ஸாம் அது.

உடலை அப்பட்டமாக வெளிக்காட்டும் வகையில் அந்த டிரஸ் இருந்ததால் அதை என்னால் போட முடியாது. ரொம்ப ஆபாசமாக எல்லாம் நடிக்க முடியாது என்று கோபமாகக் கூறியுள்ளார் ரீமா.

இதையடுத்து அவருக்கும் சிம்புவுக்கும் இடையே காரசாரமான விவாதம் நடந்துள்ளது. அது பின்னர் சண்டையாக மாறி இருவரும் தெருச் சண்டையில் ஈடுபடுவது போல வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டார்களாம்.

குழாயடிச் சண்டையாக அது மாறுவதற்குள் அங்கிருந்த மற்றவர்கள் இருவரையும் விலக்கி விட்டுள்ளனர்.

ரீமாவை சமாதானப்படுத்தும் முயற்சியில் தயாரிப்பாளர் தேனப்பன் இறங்கியுள்ளார்.

படத்தை முடிப்பதற்குள் தேனப்பன் கோணப்பன் ஆகிவிடுவார் போலிருக்கிறதோ...?

## தளும்பும் நமீதா!

**மலையாளப்** பெண் வேடத்தில் தூக்கல் கிளாமரில் ஆங்கிலப் படம் ஒன்றில் நடிக்க நமீதாவுக்கு ஒரு வாய்ப்பு வந்துள்ளதாம். அம்மணியும் படு ஆர்வமாக ஓ.கே. சொல்லியுள்ளாராம்.

இந்தியாவைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு படம் தயாராகிறது. இதில் மலையாளப் பெண் கேரக்டர் ஒன்று உள்ளதாம். இந்தக் கேரக்டருக்கு யாரைப் போடலாம் என்று அப்படத்தின் தயாரிப்பாளரும், அவரது சென்னை ஏஜெண்டும் தீவிரமாக ஆலோசித்துள்ளனர்.

சென்னை ஏஜெண்டு, நம்ம நமீதாவைப் பற்றிக் கூறியுள்ளார். நமீதாவின் உடற் கட்டு, மதமதப்பு உள்ளிட்ட இத்யாதி அம்சங்களைக் கூறி இவரை விட எந்தப் பெண்ணும் கம்பீரமாகப் பொருந்தி வர மாட்டார் என்று கூறி, தயாரிப்பாளரையும், இயக்குநரையும் ஏத்தி விட்டுள்ளார்.

புளகாங்கிதமடைந்துபோன இயக்குநர், நமீதாவின் கட்டழகுப் படங்களை வர வழைத்துப் பார்த்துள்ளார்.

னி வி சி ட்



ஸ்ரீபாலாஜி - அனுசியா
காதல்கடிதம்



சொக்கிப்போன அந்த இயக்குநர், உடனே இந்தப் பொண்ணை புக் பண்ணு என்று ஏஜெண்ட்டை ஏவி விட்டுள்ளார். அவரும் நேராகப் போய் நமீதாவின் வீட்டைத் தட்டி கதையைக் கூறி, ஓ.கே.வா என்றும் கேட்டுள்ளார்.

ஏன் ஒரிஜினல் மலையாள நடிகையைத் தேர்ந்தெடுக்காமல் என்னை செலக்ட் செய்தீர்கள் என்று நமீதா ஆச்சரியத்துடன் கேட்க, ஒரிஜினலை மிஞ்சும் சூப்பர் ஒரிஜினலாச்சே நீங்கள் என்று ஏஜெண்டு ஏற இறங்கப் பார்த்து ஏக்கப் பெருமூச்சுடன் கூற, 'நெஞ்சு ததும்ப' ஓ.கே. சொல்லியுள்ளார் நமீதா.

மலையாளப் பெண் வேடம் என்பதால் முண்டு கட்டிக் கொள்வது எப்படி என்பது உள்ளிட்ட முக்கியமான விஷயங்கள் குறித்து மலையாளப் படங்கள் சிலவற்றைப் பார்த்து கற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளாராம் நமீதா.


நமீதாவின் 'தளும்பல்' இப்படிக் கொண்டு போய் விடும் என்று அவரே எதிர்பார்த்திருக்க மாட்டார்.

எல்லாம் ரசிகர்களின் நல்லனுக்காகத்தானே...

## அன்று கிரிக்கெட் ஸ்டார்! இன்று சினிமா ஸ்டார்!!

"**என்** தலைமையில் தினேஷ் கார்த்திக் கிரிக்கெட் ஆடியிருக்கிறார். இன்றைக்கு இவர் கிரிக்கெட் ஸ்டார். நான் சினிமா ஸ்டார்" என்ற - ஸ்ரீ பாலாஜி 'காதல் கடிதம்' படத்தின் ஹீரோவாக நடித்துள்ளார். ஸ்ரீபாலாஜியிடம் கிரிக்கெட்டை விட்டுவிட்டு சினிமாவுக்குள் வந்து விட்டோமே என்று வருத்தமில்லையா? என்று கேட்டால்...

"இல்லை, ஏனென்றால் நடிகர் திலகம் சிவாஜி கணேசனை நேரில் சந்திப்பதற்கு விரும்பினேன். அதை நிறைவேற்றி வைத்தார் என் அப்பா. உனக்கும் நடிக்க ஆசை இருக்கின்றதா என்று சிவாஜி கணேசன் சார் என்னிடம் கேட்டார். நான் ஆம் என்று சொல்ல, நிறைய ஹோம் வேர்க் பண்ணணும் என்று சொல்லி டிப்ஸ் கொடுத்தார். அவரை நேரில் சந்தித்த பாக்கியம் இப்ப இருக்கிற எத்தனை நடிகர்களுக்குக் கிடைத்திருக்கும்" என்று பெருமிதம் அடைகின்றார்.



ஸ்ரீபாலாஜி
காதல்கடிதம்



# தேன் கிண்ணம்

## பிடிக்கும்

ஸகியே,
உன்னைப் பிடிக்கும் - அதனால்
காதலைப் பிடிக்கும்!
உன் இருவிழி பிடிக்கும் - அதனால்
இடிமின்னலைப் பிடிக்கும்!
உன் புன்னகை பிடிக்கும் - அதனால்
பூக்களைப் பிடிக்கும்!
உன் நளினங்கள் பிடிக்கும் -
அதனால்
என் நயனங்கள் பிடிக்கும்!
உன் வெட்கத்தைப் பிடிக்கும் -
அதனால்
என் விரல்களைப் பிடிக்கும்!
உன் கூந்தலைப் பிடிக்கும் - அதனால்
தென்றலைப் பிடிக்கும்!
உன் கோபங்கள் பிடிக்கும் - அதனால்
என் ஜீவனைப் பிடிக்கும்!
உன் வார்த்தைகள் பிடிக்கும் -
அதனால்
கவிதைகள் பிடிக்கும்!
உன் கண்ணீரைப் பிடிக்கும் -
அதனால்
கடல் அலை பிடிக்கும்!

*—ஏ.வீ.முஹம்மட் இர்ஸாத், கல்முனை - 07.*

## காயங்கள்

காத்திருந்த பொழுதுகள்
வெகு தூரம் தூர
தர்சனமாய்
விரைந்தோடி விட்ட
போதும்
உனதான நினைவுகள்
என்னை தினந்தோறும்
வாட்டி வதைக்கின்றது...

நினைவுகளை சுமக்க
இயலாது...
என்னிதயம் கனத்துப்
போகிறது...

காதல் வலையில்
சிக்கித் தவிக்கும்
எனக்கு - உந்தன்
வார்த்தைகள்
மட்டுமே
போதுமென்று
நினைத்தேன்...

அவைகளும் - என்னை
நெருஞ்சி முற்களாய்
தினந்தினம் குத்தி
என்னிதயம் ரணப்பட்டு
ஆறாத காயமாய்
அடி பகிழ்கின்றது...

காத்திருப்புக்களும்
சுகம் என்று நினைத்தேன்
அவைகளோ - சுகமான
சுகங்களாய்
அலை மோதிச்
செல்கிறது...

*—ஹனீபா ஷாஜஹான், பிறைந்துறைச்சேனை.*

## தொலைந்த வாழ்வு

ஈரமற்ற
பாலைவனத்திலிருந்து
ஒரு மடல்...

சொந்த தாயகத்தைவிட்டு
உறவுகளைப் பிரிந்து
கடல் கடந்ததொரு
தேசத்தில்
எனது வாழ்வின்
எச்சங்களைத் தேடி!

பனி விழும் இரவுகளைத்
தாங்கும் மேனிகள்
விறைத்துப் போகும்
மரக்கட்டைகளாய்!

ஒரு பாலைவனப்
புழுதியில்
புதைந்து கொண்டது
எனதின்
எதிர்காலம்.

வெளிச்சத்தையே
விடியலாய் நினைத்து
மாண்டு போகும்
விட்டில்களாய்...
எனதான
எதிர்காலத்தின்
தேடல்களும்
சயனித்துக் கிடக்கின்றன
எதிரியப்பட்ட ஒரு
பச்சிளம் குழந்தையாய்!

*—மூதூர் இடி நஸீம், பஹ்ரேனிலிருந்து.*

## அவசர ஆனந்தம்...

யோசிக்கிறேன்......
இம்மாதமேனும் சேமிக்க வேண்டும்
என் முடிவிற்கு
மனைவியும் ஒத்துழைக்க
மாலை நேர பலகாரமும்
ஒரு நேர தேத்தண்ணியும்
இல்லாமல் போனது.
இருக்கட்டும் பீடியின் அளவு
இரண்டாகிப் போனது
பொங்கலுக்கு வாங்க நினைத்த
புத்தாடைகள் மறந்தே போனது
இன்னும்
பயணங்கள்......
திரைப்படங்கள்......
உறவினர் திருமணங்கள்.......
உற்சவங்கள்.......
இந்த
சிற்றின்பங்களெல்லாம் சிதறிப்போக
கடனின்றி வாழும் கனவு
கைக்கெட்டிய எண்ணத்துவளலில்
சம்பளத்தை எண்ணுகிறேன்.
வீட்டுச்செலவு
கடன்பாக்கி
பிள்ளையின் பள்ளிக்கணக்கு
பண்டாவின் மாத வட்டி
எல்லாம் போக......ஓ!
ஒரு இரண்டாயிரம் மிச்சமாய்
முகத்தில் சந்தோஷத்தின் கோடுகள்
வெற்றிக்களிப்பு...சாதனையின் மிதப்பு...
மனைவியும் தலைக்கால் புரியாத
ஆனந்த அவசரத்தில்
அருகில் வந்து மெதுவாகச்
சொல்கிறாள்
'முத்தவள் வயதுக்கு வந்துட்டாள்'
மீண்டும் யோசிக்கிறேன்......
யாரிடம் கடன் வாங்கலாம்?

*—பிரபிளா செல்வராஜா, ஹாலி - எல.*

## பாதை நொறுங்கிட...

ஆழ் கடலினிலே
ஒரு துண்டு(ப்)
பாலைவனமானேன்
பிருந்தா வனத்திலும்
தான்.

அழகிய இனிய
வரிகளுக்குள்ளே
பசுமை நிறைந்த
காட்சியிலே
புன்னகை
சுவர்க்கத்திலே
நான் ஒரு துண்டு(ப்)
பாலை வனமானேன்.

வெற்றிக் கிண்ணத்திலே
துடினமான
இளமைக்குள்ளே
பளிச்சிடும்
பௌர்ணமியிலே
நான் ஒரு துண்டு(ப்)
பாலை வனமானேன்.

களஞ்சியச் சாலையில்
கண்ணின் பார்வையில்
கல்லூரிப் பாடத்தில்
நான் ஒரு துண்டு(ப்)
பாலை வனமானேன்.

எனை மறந்து சிரிக்கும்
போதும்
உலகமும்....சுவர்க்கமும்
குளுமையான போதும்
பௌர்ணமியில் விழுந்த
கறுப்புப் புள்ளி
அழகான போதும்
என்னிதயம் அடை
மழையில்
நனைந்த போதும்
நான் ஒரு துண்டு(ப்)
பாலைவனமானேன்.

ஆனால் இன்று
சூரியச் சட்டியிலே
போட்டு
வறுத்தெடுத்த
பாலைவனமாகிறேன்.

*—அ.கா.மு.ரிஸ்லின், மூதூர் - 01.*

## காதல் ஹைக்கூ

பருவகால
பைத்தியம்
பிடித்து விட்டது...
காதல்!

எச்சில் பறக்க
இச்சை தீர
அவள் பெயரையே
உச்சரிக்கிறேன்!

அவளின்
'ஐ லவ் யூ' வுக்காக
ஒரு தெரு நாயாக
தினமும் அலைகிறேன்!

அதனால்
அவள் வீட்டுத்
தெருவை அளக்கின்ற
ஒரு நில
அளவையாளனாக
நானின்று!

'சாப்பிடவாமனே' என்று
செல்லமாக அம்மா
வந்து
சொல்லும் போதும்
சீறிப் பாய்கிறேன்!

சிவராத்திரிகளாய்
இரவுகளை ஆக்கிவிட்டு
அவளின்
நினைவலைகளில்
நீச்சலடிக்கிறேன்!

தலைமுடியும் தாடியும்
காடாகக் காட்சி தர
'பைத்தியமாகவே'
பாதையில்
அலைகிறேன்!

ஆம்...
பருவகால பைத்தியம்
பிடித்து விட்டது
காதல்.



*—கன்னிமுத்து வெல்லபதியான்.*

## நாயகிக்கு...!

ஆசைகள்
அடிமனதில்
அமாவாசையாய்
தேடல் இல்லாமல்
கசக்கும் வாழ்க்கை
கனக்கும்...!

புன்னகை சுடும்
பொறுமை காத்து
காதல் நகரும்...!

கொஞ்சம் சிரி
நிறைய அழு
மனசுக்குள் செத்து
வீரமரணத்திற்கு
வித்திடு...!

அமில
மழையின்
ஆசீர்வாதங்களுடன்
காதுக்குள்
கத்திக்குத்து
நெஞ்சுக்குள்
நெருப்புமூட்டி
இதயத்தைக்
கூறுபோடுவதாய்
அவள்
தேசிய கீதம்
சமைக்கிறாள்...!

மனம் இரங்கி
என்றேனும்
ஒருநாள்
பார்ப்பாய் என்ற
நம்பிக்கையில்
தினம் -
உன்
சாலைவழியே
என்
சவாரி
தொடர்கிறது.
உன்
மனம்
இரங்கும்
நாள்
என்
மரண
ஊர்வலமாகவே
இருக்கட்டும்...!

*—புத்தளம் நஸீம்நூமி.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும்—கவிஞரும்

*இந்திய தமிழ் திரையுலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு சிலர் தன்னுடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு அந்த வகையில் திரையுலகத்தில் காலடி வைத்து தன் புகழை உயர்த்திக் கொண்ட கவிஞர் ஜெயபாஸ்கரன் அவர்கள் எழுதிய சில கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவரின் கவிதையில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.*

முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.

### மனம்

நகரப் பேருந்துகளின்
நடத்துனர்கள் மீது
அதிருப்தியாய்
இருக்கிறேன் நான்.

தரவேண்டிய பத்துபைசாவை
தருவதேயில்லை.
தருவதற்கில்லை என்றும்
சொல்வதில்லை.

ஏறுவதற்குள் விசிலடித்து
எத்தனையோ பயணிகளை
குப்புறக் கவிழ்த்திருக்கிறார்கள்
அவர்கள்.

போட்டி போட்டுக் கொண்டு
போகிறார்கள் காலியாக
நிறுத்தங்களில் நிறுத்தாமல்
நிற்பவர்களின் வலியறியாமல்.
எல்லாவற்றுக்கும் மேலாக
எச்சிலைத் தொட்டுத் தொட்டு
பொட்டு வைத்து
பயணச் சீட்டுகளை
பரிமாறுகிறார்கள்
இப்படியாக
நடத்துனர்களுக்கெதிரான
கற்களைத் தேடித் தேடி
கண்டெடுத்து வந்து
மீண்டும் மீண்டும்
கல்லறை கட்டுகிறேன் நான்.

ஆயினும்
ஒவ்வொரு முறையும்
அதை உடைத்து
உயிர்த்தெழுந்து நிற்கிறது
மினி நடத்துனரிடம்
அதிகடிப்படியாக நான்
பெற்றுக் கொண்டு வந்துவிட்ட
ஐந்து ரூபாய்.

### மேடை

இதுவரை
இருபது முறைகளுக்கு மேல்
எதிரிகளை
"எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்"
என்றாய்
சலனமற்றுக் கிடந்த
உன் ஆதரவாளர்களின்
முன்னிலையில்

"நான் சொல்லிக் கொள்வது
என்னவென்றால்"
என்பதைத் தாண்டி
எதுவுமே விளங்கவில்லை
நீ சொல்லிக் கொண்டது
எதுவும்.
"இன்னொன்றையும்
குறிப்பிட்டாக வேண்டும்" என்று
பலமுறை அறிவித்தாய்!
ஆயினும்,
ஒருமுறைக்கூட
குறிப்பிடவில்லை
அந்த "இன்னொன்றை!"

இறுதியாக ஒன்றைச் சொல்லி
விடைபெறுவதாக முழங்கினாய்
அந்த ஒன்றையாவது
சொல்லிவிட்டுப் போயிருக்கலாமல்லவா
நீ?

### நானும் நீயும்

நாமிருவரும் சேர்ந்து எடுத்த
புகைப்படங்களில்
நாற்காலியில் அமர்ந்திருப்பேன் நான்
அடக்கமாக எனக்குப் பின்னால்
நின்று கொண்டிருப்பாய் நீ

உன் இனத்துக் கற்புக்கரசிகளைச்
சொல்லி
உன்னை மிரட்டுவேன் நான்
என் இனத்து அயோக்கியர்களின்
பட்டியல் தெரிந்தும்
அமைதியாக இருப்பாய் நீ

நீ எனக்கிருப்பதை பிறர் கேட்டாலொழிய
சொல்லிக் கொள்வதில்லை நான்

நான் உனக்கிருப்பதை ஆதாரங்கள்
அணிந்து
பறைசாற்றியாக வேண்டும் நீ

எனக்குப் பிறகு என் நினைவுகளோடு
வாழவைக்கிறார்கள் உன்னை
உனக்குப் பிறகு உன் தங்கையோடு
வாழவைக்கிறார்கள் என்னை.

### மயில்

மயில்களுக்கு
எதிராக
நிறையவே
சிந்திக்கிறார்கள்
மனிதர்கள்.


முதுகில் அமர்ந்து
உலகை
மூன்றுமுறை
சுற்றி வந்தானாம்,
தன் தோகையையே
தூக்கிக் கொண்டு
விரைந்தோட
முடியாத
மயில் மீது முருகன்

கான மயிலாடக்
கண்டிருந்த
வான்கோழி
என்று தொடங்கி
அடுக்கிக் கொண்டே
போகிறார்கள்
மனிதக் காழ்ப்பில்
பறவைகளை
மட்டந்தட்டிய
பழம் புலவர்கள்.

மயிலே மயிலே
என்றால்
இறகு போடாது"
என்கிறார்கள்
கத்திரிக்கோலுடன்
பிறந்து
எதையும்
அறுத்து இரசிக்கும்
மரபில் மலர்ந்த
அழகுணர்ச்சியாளர்கள்.


எல்லாருமே
ஒருவித
வீராவேசத்தோடு
அலைகிறார்கள்
மயில்களின்
மயிருக்காக.

மயில்களைப்
பார்க்கும்போது
மட்டுமின்றி
போயப் பார்த்தும்
சொல்லியாக
வேண்டியிருக்கிறது.
"மயிலே...மயிலே...நீ
எந்த மயிரானுக்கும்
இறகு போடாதே"
என்று.



உயரமான பிரமிட்

எகிப்து என்றாலே பிரமிட்கள் தான் ஞாபகம் வரும். பிரமிட்கள் ஏன் கட்டப்பட்டன. அதில் என்ன அம்சங்கள் பொதிந்திருக்கின்ற என்பது. இன்னும் ஆராய்ச்சிக்குரிய விடயம் தான். பிரமிட்கள் கட்டப்படும் வடிவமும் அதன் அமைப்புகளையும் வைத்து அதனைப் பல வகையில் பிரிக்கலாம். அந்த வகையில் உலகிலேயே பெரிய பிரமிட் எது தெரியுமா? கூஹ்வு பிரமிட் தான் உலகிலேயே பெரிய உயரமான பிரமிட் என்று பெயர் பெற்றுள்ளது. இதன் உயரம் 137.5 மீற்றராகும். இது கிட்டத்தட்ட 4,500 வருட பழமையானதாகும்.




சிறுபிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பயந்து பயந்து விளையாடும் புகையிரதம் போன்ற விநோதப் பொருளான கோஸ்டர் எனப்படும் இந்த விநோத பொருளில் பல ரகங்கள் உண்டு. மிகவும் வேகமாகச் செல்வதற்காக இது செல்லும் பாதையினை மேடு பள்ளமாக அமைப்பார்கள். அந்தவகையில் உலகிலேயே மிக அதிக உயரமாக அமைக்கப்பட்ட கோஸ்டர் எது தெரியுமா? அமெரிக்கவில் உள்ள 'சரத்தா' கோஸ்டர்தான். இது 128 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இறங்கும் போது கோஸ்டரின் வேகம் மணிக்கு 193 கி.மீ. ஆகும். இதனை அமைக்க கிட்டத்தட்ட 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியதாம்.



### உயரமான அலுவலகக் கட்டிடம்

அலுவலகங்கள் இலங்கைபோல் தனித்தனியே இருக்காமல் வெளிநாடுகளில் பெரிய தொடரமாடிகளில் சேர்ந்து தான் இருக்கும். அப்படி இருக்கும் இந்தக் கட்டிடங்களில் மிகவும் உயரமான கட்டிடம். மலேசியாவின் தலைநகரம் கோலாலம்பூரில் தான் இருக்கிறதாம். இதன் உயரம் 73.5 மீற்றராகும். இதில் 88 மாடிகள் இருக்கின்றனவாம். இந்த கட்டிடத்தை சுற்றி துருப்பிடிக்காத உருக்கினால் ஆன கவசமும் போடப்பட்டிருக்கின்றதாம்.

# லேடிஸ் ஸ்பெஷல்

# பிஞ்சு உலகின் அலங்கரிப்பு

**குழந்தைகள்** களி மண் போன்றவர்கள்! நாம் அவர்களுக்கு எந்த உருவைத் தருகின்றோமோ அவராகவே அவர்கள் உருவெடுப்பார்கள். குழந்தைகளைச் சுற்றி உள்ள சூழல், காட்சிகள், பொருட்கள் மற்றும் இதரப் பொருட்கள் அனைத்தும் அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதோடு அதிலிருந்து நிறைய விஷயங்களை குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர்.

எனவே, அவர்களின் பிஞ்சு உலகை நல்ல விதத்தில் உருவாக்க அவர்களின் அறையையும் ஆரோக்கிய சூழல் கொண்டதாக உருவாக்க வேண்டியது அவசியமாகிறது. அறையில் பொருட்கள் மட்டுமின்றி, சுவரின் நிறம், படுக்கை, படுக்கை விரிப்பு ஆகியவற்றையும் கவனத்தில் கொள்வது நல்லது. அதாவது அறையை எழில் மிக்கதாக உருவாக்குவதோடு அது அவர்களின் கற்பனைத் திறனை ஊக்குவிக்கக் கூடிய ஒன்றாகவும் உருவாக்க வேண்டும்.

### அறையின் பரப்பு

அறையின் பரப்பு குழந்தையின் அனைத்துப் பொருட்களையும் அழகாக, கலை நயத்துடன் அடுக்கி வைக்கத் தக்க இடவசதியுடன் விளங்க வேண்டும். உட்கார, எழுந்திருக்க, விளையாடப் போதுமான இடவசதி இருப்பது சிறந்தது.



### அறையின் பர்னிச்சர்

குழந்தைகளுக்கான பர்னிச்சர் அவர்களின் வயதைப் பொறுத்து வாங்க வேண்டும். படுக்கை நடுத்தர அளவுள்ளதுதான் சிறந்தது. தற்போது எங்கு பார்த்தாலும் 'சோ.'.பா கம் பெட்' என்பதே உபயோகத்தில் உள்ளது. இது உட்காரவும், தூங்கவும் பயன்படுகிறது.

குழந்தைகளின் அறையில் மேசை, நாற்காலி மிகவும் அவசியமானது. இவற்றை அறையில் வெளிச்சமுள்ள இடத்தில் போடுவதனால் அவர்களின் எண்ணங்கள் எப்பொழுதும் ஒளிமயமாகவே இருக்கும்.



குழந்தைகளின் ஆடைகள் மற்றும் பொருட்களை அலமாரியில் வைக்கவும். விளையாட்டுச் சாமான்களை மட்டும் ஒரு சின்னப் பெட்டியில் வைக்கவும்.

இதனால் அறை சுத்தமாகவும் சீரான தோற்றமுடையதாகவும் தோன்றும்.

### நிறங்களின் முக்கியத்துவம்

நிறங்கள் குழந்தைகளின் மனநிலைகளைத் தீர்மானிக்கின்றன. அறையின் நிறங்களைத் தேர்வுசெய்யும் முன் குழந்தைகளின் விருப்பம், கற்பனைத் திறன் மற்றும் எண்ணத்தை மனதில் கொள்வது அவசியம். பெண் குழந்தைகளுக்கு ரோஜா நிறத்தையும், ஆண் குழந்தைகளுக்கு நீல நிறத்தையும் தேர்வு செய்வது பழைய .'.பேஷன் ஆகிவிட்டது.

மஞ்சள் நிறம் அறிவுக் கூர்மையைத் தீட்டவல்லது. இதோடு மற்றவர்களை ஈர்க்கும், நிறமாகும்.

### அறையின் தரை பரப்பு

குழந்தைகள் அதிகப்படியான நேரத்தைச் செலவழிப்பது தரையில் தான். இது அதிகம் வளவளப்பாக இல்லாமல் இருப்பது அவசியமானது. அதே போல் அதிகம் சொரசொரப்பானதாகவும் இருக்கக் கூடாது. வண்ணமயமான தரை விரிப்புகளைப் போடுவதும் அறையை அழகாகத் தோன்றச் செய்யும்.

### அறையின் சுவர்

குழந்தைகள் அறையின் சுவற்றில் அவர்களே உருவாக்கிய கேலிச் சித்திரம், ஓவியம் மற்றும் வண்ண வேலைப்பாடுகள் ஆகியவற்றால் அலங்கரித்து மகிழவும். இதனால் இவர்களின் கற்பனைத் திறன், உருவாக்கத் திறன், படைப்புத் திறன் ஆகியவை கூடுவதோடு புதிதாக எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆவலையும் கலையுணர்வையும் தூண்டிக் கொண்டே இருப்பவையாக இவை விளங்கக் கூடும். தூண்டப்படக் கூடும். நீங்கள் குழந்தைகளின் அறையை அலங்கரிக்கும் விதத்தைப் பொறுத்து அவர்கள் தங்கள் அறைக்குள் நுழைந்தவுடன் ஏதாவது ஆக்கபூர்வமாகச் செய்ய வேண்டும் என்ற உணர்வைத் தூண்டும் விதத்தில் எழிலுடன் அலங்கரிக்கவும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

## உடனடி முட்டை ஸ்வீட்

***தேவையான பொருட்கள் :***

| | |
|---|---|
| முட்டை | - 04 |
| சீனி | - 3 மேசைக் கரண்டி |
| முந்திரி பருப்பு | - 08 |
| உலர்ந்த திராட்சை | - 08 |
| நெய் | - தேவையான அளவு |

***செய்முறை :***

நெய்யில் திராட்சையையும் முந்திரிப் பருப்பையும் வறுத்து வைத்துக் கொள்ளவும்.

முட்டையையும், சீனியையும் நன்கு அடித்துக் கொள்ளவும்.


மீதமுள்ள நெய்யில் அடித்த முட்டையைச் சேர்த்து அடுப்பில் வைத்து 5 நிமிடம் கிளறவும்.

நன்கு கிளறி, முட்டை உதிரி பதமாக வந்த பின், முந்திரி, திராட்சை சேர்த்துப் பரிமாறவும்.

# பப்பாளியால் பள பள அழகு!

**பப்பாளிப்** பழம் உடல் நலனுக்கு உகந்த சிறந்த பழம். இதில் ஏராளமான சத்துக்கள் உள்ளன. இப்பழத்தை சருமப் பராமரிப்புக்கும் பயன்படுத்தலாம்.

வறண்ட மேல் தோலை அகற்றி, புதிய தோலை உருவாக்குகிற அற்புத சக்தி பப்பாளிக்கு உண்டு.




### முகம் பளபளப்பாக மாறணுமா?

இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்!

பப்பாளிப் பழத்தை வெட்டி கூழாக்கிக் கொள்ளுங்கள். இந்தக் கூழில் ஒரு டேபிள் ஸ்பூன் முல்தானி மட்டி - அரை டீ ஸ்பூன் கலந்து கொள்ளுங்கள்.

இதனை முகத்தில் மெதுவாகபூசி, நன்றாக மசாஜ் செய்யுங்கள். பிறகு மிதமான சுடுநீரில் கழுவுங்கள். முகம் பளிச் என்று பிரகாசிக்கும்.



சில பெண்களின் முகம் கரடு முரடாகத் தெரியும். மென்மை கொஞ்சம் கூட இருக்காது. இதனால் சருமம் அழகற்றதாக மாறிவிடும்.

இந்த முரடான முகத்தை மென்மையாக்கும் சக்தி பப்பாளி தோலுக்கு உண்டு.

எப்படி என்கிறீர்களா?


பப்பாளித் தோலை ஒரு பாத்திரத்தில் போட்டு வேக வையுங்கள். அது நன்றாக வெந்ததும் அதை அரைத்துக்கொள்ளுங்கள்.

இந்தக் கூழை முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்துக் கழுவுங்கள். இந்தச் சிகிச்சையை தொடர்ந்து செய்து வந்தால், வெகு சீக்கிரமே முகம் மென்மையானதாக மாறிவிடும்.

### கருவளையமா?

ஒரு சில பெண்களின் கண்ணுக்குக் கீழ் கருவளையம் ஏற்படுவதுண்டு. இப்படிப்பட்ட கருவளையம், மற்றும் கன்னத்தில் கருமை படர்தல், கன்னத்தில் கருந்திட்டு என்று கருமை தோன்றிய பகுதிகளை 'டக்' கென மாற்றி இயற்கை அழகை மெருகூட்டி வருகிறது.

### *இதற்கு என்ன செய்ய வேண்டும்?*



சோற்றுக் கற்றாழை இலை ஒன்றின் ஜெல்லுடன் பப்பாளி கூழ் - ஒரு டீ ஸ்பூன் கலந்து கொள்ளுங்கள். இதை கழுத்தில் இருந்து மேல் நோக்கி முகம் முழுவதும் நன்றாகத் தேய்த்து, இது நன்றாகக் காய்ந்ததும் தண்ணீரில் கழுவுங்கள். வாரம் 2 தடவை இப்படிச் செய்து பாருங்கள். கருப்பு மாயமாகி இருப்பதைக் காண்பீர்கள்.

### சிகப்பழகு வேண்டுமா?

பெரும்பாலான பெண்கள் சிவப்பழகைத் தான் விரும்புகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இப்படி டிரை பண்ணிப் பாருங்க. ஓ.கே.யா?

கொட்டை நீக்கிய பேரீச்சம்பழம் -1, உலர்ந்த திராட்சைப் பழம் - 10, இவற்றை ஒரு நாள் முழுவதும் வெந்நீரில் ஊற வைக்க வேண்டும்.

அதை பிறகு அரைத்துக் கொள்ளுங்கள்!

இந்தக் கலவையுடன் - அரை டீ ஸ்பூன் பப்பாளி பழக் கூழை கலந்துகொள்ளுங்கள்.

பிறகு இதை முகத்திற்கு 'பேஸ் பேக்' போல போட்டுக் கொள்ளுங்கள்.

20 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவி விடுங்கள். வெயிலில் முகம் கறுத்துப் போயிருந்தால், பப்பாளியானது பளபளப்பாக மாற்றி விடும்.

### வெண்பிஞ்சு பாதங்கள்!



பப்பாளி கூழ் - 2 டீ ஸ்பூன், கஸ்தூரி மஞ்சள் தூள் - கால் டீ ஸ்பூன், விளக் கெண்ணெய் - கால் டீ ஸ்பூன் மூன்றையும் கலந்து கொள்ளுங்கள். இந்தக் கலவையைப் பாதங்களில் தடவுங்கள். சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும்.

உங்கள் பாதங்கள் சுருக்கம் இல்லாமல் மென்மையானதாக மாறிவிடும்.


# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

24

பெயர் : ..................................

முகவரி : ..................................

..................................

..................................

தே-அ- அட்டை இல : ..................................

கையொப்பம் : ..................................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 24**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:**

**06.06.2006**

**பரிசுப் போட்டி இல - 22**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**க. கஜேந்திரன்,**
**சென். செபஸ்தியார் வீதி, பெற்றா, மன்னார்.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.





"**ஃபாதர்** உங்களுக்கு ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். என்னை இங்கே அனுப்பி வைத்த நபர்களை எப்படி, எப்போது, எதைக் கொண்டு கொல்லப்போகிறேன் என்று நான் திட்டமிடாத நாளில்லை, இரவில்லை, மணியில்லை, நிமிடமில்லை!"

"மறுபடி வருவதா? என்ன காரணம் சொல்வது?"

"உங்களுடைய ஜபமாலையை வைத்துவிட்டதாகச் சொல்லுங்களேன். தேகாவின் பதிலைத் தெரிந்து கொள்வதற்காகக் காத்திருப்பேன்."

"கடல் கடந்த சிறை ரொம்பக் கொடூரமானதாயிற்றே? அங்கே போவதில் உனக்கேன் இவ்வளவு அவசரம்?" என்றார் பாதிரியார்.



"உனக்கு இளம் பிராயம். ரொம்ப இளம் பிராயம். வயது ஆக ஆக, வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தையும், தண்டிக்கும் எண்ணத்தையும் விட்டுவிடுவாய்" என்றார் பாதிரியார்.

"உனக்கு நான் என்ன செய்யட்டும்?" என்று மறுபடியும் அவர் கேட்டார்.

"ஒரு குற்றம் செய்யுங்கள், ஃபாதர்."

"என்ன குற்றம்?"

"37 - ஆம் எண்ணுள்ள அறைக்குச் செல்லுங்கள். அங்கே தேகா என்பவன் இருக்கிறான். அவனை மத்திய சிறைக்கு அனுப்பிவிடும்படி அவனுடைய வக்கீல் விண்ணப்பிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி தேகாவுக்குச் சொல்லுங்கள். என் வக்கீல் எனக்காக விண்ணப்பிக்கும்படி நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். அதையும் தேகாவிடம் தெரிவியுங்கள். நாங்கள் சீக்கிரமாக இந்தச் சிறையை விட்டு, மத்திய சிறைக்குப் போய்விட வேண்டும். அங்கிருந்துதான் ஃபிரெஞ்சு கயானாவுக்குக் கைதிகளை அழைத்துச் செல்கிறார்கள். முதல் கப்பலில் போகத் தவறினால், அடுத்த கப்பலுக்காக இந்தத் தனிமைச் சிறையில் இன்னோர் இரண்டு வருடம் காத்திருக்க நேரிட்டுவிடும். தேகாவைப் பார்த்துச் சொன்ன பிறகு இங்கே திரும்பி வருகிறீர்களா?"

உற்றுப் பார்த்தேன் அந்த மனிதரை

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

- விசால உள்ளம் படைத்த அந்த நல்ல மனிதர் அவர் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாரென்று நிச்சயமாய்த் தோன்றியது. "அவ்வளக்கவ்வளவு சீக்கிரமாய்த் தப்பலாம் என்றுதான்," என்றேன்.

"கடவுள் உனக்கு உதவுவார். நிச்சயம் நீ உன் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்வாய் என்று எனக்குத் தோன்றுகிறது. நீ கண்ணியமானவன்தான் என்றும், உன் இருதயம் சரியாகவே இருக்கிறதென்றும் உன் கண்ணிலிருந்து அறிகிறேன். 37 - ஆம் எண் அறைக்குள் உன் பொருட்டுப் போகிறேன்."

அவர் விரைவாகவே திரும்பி வந்தார். தேகா சரியென்று சொல்லிவிட்டான். பாதிரியார் தமது ஜபமாலையை எனக்காக ஒரு நாள் விட்டு வைத்துவிட்டுச் சென்றார்.

எப்படிப்பட்ட சூரிய வெளிச்சம்! அந்த நல்ல மனிதரால் என் அறையெங்கும் பிரகாசம் நிறைந்தது.

எங்கள் விண்ணப்பங்கள் கிடுகிடுவெனப் பைசலாயின. நாங்கள் மத்தியச் சிறைக்கு மாற்றப்பட்டோம்.

மத்தியச் சிறைக்குப் போய்ச் சேர்ந்த நிமிடமே தலைமை நிர்வாகியின் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார்கள். மூன்றடி உயரமிருந்த ஒரு மேடையில், ஒரு 'மகாராஜா' மேஜைக்குப் பின்னால் படாடோபமான நாற்காலியில் அமர்ந்திருந்தார் அவர்.

"தலைமை அதிகாரி உங்களிடம் பேசப்போகிறார்!" என்று அறிவித்தார் ஒருவர்.

"கைதிகளே! கடல் கடந்த சிறைக்கு அனுப்புவதற்காக வேண்டி இங்கே உங்களை வைத்திருக்கிறோம். இது ஒரு சாதாரண சிறையல்ல. எப்போதும் நிசப்தமாக இருக்க வேண்டும். யாரும் பார்க்க வரக்கூடாது. யாரிடமிருந்தும் கடிதம் வரக்கூடாது. கீழ்ப்படியாவிட்டால் உங்களுக்கு இரண்டு வாசல் உண்டு. ஒன்று, கடல் கடந்த சிறைக்கு - ஒழுங்காய் நீங்கள் நடந்து கொண்டால். மற்றது, கல்லறைக்கு. கருகத்தனை தப்புச் செய்தாலும் சரி - தண்டனை அறையில் அறுபது நாள் போட்டு விடுவோம். தண்ணீரும், ரொட்டியும்தான் உணவு. அந்த இருட்டுப் பொந்தில் இரண்டு தண்டனைக் காலம் சேர்ந்தாற்போலிருந்த எவரும் உயிர் பிழைத்தது கிடையாது. நான் சொல்வது புரிகிறதா?"

பத்து நிமிடங்கள் கழித்து, நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் அறையில் அடைக்கப்பட்டோம்.

ஒன், டு, த்ரீ, ஃபோர், ஃபைவ் - எபௌட்டர்ன்.. ஒன், டு, த்ரீ, ஃபோர், ஃவைவ் - எபௌட் டர்ன். சுவருக்கும் கதவுக்குமாக என் முடிவில்லாத நடை மறுபடி தொடங்கியது.

பகல் வேளையில் கீழே படுத்துக்கொள்ள அனுமதி கிடையாது. காலை ஐந்து மணிக்கு, கிறீச்சென்று காதைக் கிழிக்கும் 'விஸில்' ஒலி அனைவரையும் எழுப்பும். எழுந்து படுக்கையைத் தட்டி வைத்து, முகம் கழுவிக் கொண்டதும், நடந்து கொண்டிருக்கலாம்; அல்லது சுவரோடு பொருத்தியுள்ள முக்காலியில் உட்கார்ந்திருக்கலாம். பகல் பூரா படுத்துக் கொள்ளக் கூடாது.

ஒன், டு, த்ரீ, ஃபோர், ஃபைவ் - பதினாலு மணி நேரம் நடந்தாயிற்று. ஓய்வில்லாத, யந்திரத்தனமான இந்த நடை பழக்கமாக வேண்டுமென்றால், தலையைக் குனிந்தபடியே வைத்துக்கொள்ள வேண்டும். பின் கை கட்டிக்கொள்ள வேண்டும்.ரொம்ப வேகமும் கூடாது. ஒவ்வோர் எட்டும் ஒரே சீரான நீளமிருக்க வேண்டும். அறையின் கோடியை அடைந்ததும் ஆட்டொமாடிக்காகத் திரும்பவேண்டும். அந்தக் கோடிக்குப் போனதும் இடது காலைத் திருப்பு; இந்தக் கோடிக்கு வந்ததும் வலது காலைத் திருப்பு.


ஒன், டு, த்ரீ, ஃபோர், ஃபைவ - பழைய சிறையைக் காட்டிலும் இங்கே விளக்கு வெளிச்சம் நன்றாயிருந்தது. வெளியிலிருந்து ஓசைகள் கேட்கும். தண்டனைப் பிளாக்கிலிருந்து வரும் ஓசைகள் சில. வெளியே ஊர்ப் பக்கத்திலிருந்து வரும் ஓசைகள் சில. இரவு வேளைகளில் மது அருந்திவிட்டு, மகிழ்ச்சியுடன் வீடு திரும்புகிற விவசாயத் தொழிலாளிகளின் சீட்டியையோ, பாட்டையோ கேட்கலாம்.

எனக்கு ஒரு கிறிஸ்துமஸ் பரிசு! ஜன்னலை அடைத்திருந்த பலகைகளில் ஒரு விரிசல் இருந்தது. அதன் வழியே, பனி படர்ந்த வயல்களையும், கறுத்த உயரமான மரங்களின் மீது முழு நிலவு ஒளி பாய்ச்சுவதையும் காண முடிந்தது. கிறிஸ்துமஸுக்காக வாழ்த்து அட்டை அனுப்புவோமே, அதுபோல என்று சொல்லலாம். மரங்களைக் காற்று உலுக்குவதால் மூடியிருக்கும் பனி உதிர்ந்திருந்தது. மரங்களைத் தெளிவாகப் பார்த்தறிந்தேன்.

ஒன், டு, த்ரீ, ஃபோர், ஃபைவ் - சட்டத்தின் அடக்குமுறை என்னை ஒரு பெண்டுலமாக மாற்றிவிட்டது. சிறைக்குள் இங்குமங்குமாகச் செல்வதுதான் என் மொத்த உலகமும்.

என்னால் பொறுக்க முடியவில்லை. அந்தத் தனிமை என்னை மூச்சுத் திணறச் செய்து கொண்டிருந்தது.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*



# கடத்தப்படும் பாலியல் அடிமைகள்

**பாலியல்** நோக்கத்திற்காகவும் சதை வியாபாரத்திற்காகவும் இளம் பெண்கள் கடத்தப்படும் அறிக்கை ஒன்றினை கடந்தவாரம் சர்வதேச மன்னிப்புச் சபையின் லண்டன் கிளை வெளியிட்டபோது நாகரீகமடைந்ததாகக் கூறிக்கொள்ளும் மேற்குலகம் அதிர்ச்சியில் உறைந்து போனது. ஏனெனில் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள இளம் பெண்கள் குறித்ததான பாலியல் வர்த்தகமானது ஆசிய நாடொன்றிலோ அல்லது அபிவிருத்தி அடையாத மூன்றாம் உலக நாடொன்றிலோ மேற்கொள்ளப்படவில்லை.

தம்மைத் தாமே நாகரீக வளர்ச்சி அடைந்தவர்களாகவும் மனித உரிமைகளை மதிப்பவர்களாகவும் காட்டிக் கொள்ளும் லண்டன் மாநகரத்திலேயே இந்த அசிங்கம் அரங்கேறி வருகின்றமை ஆதாரத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பாலியல் அடிமை வர்த்தகத்திற்காகக் கடத்தப்படும் பெண்கள் அனைவரும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தே கடத்தப்பட்டுள்ளனர். சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பிறகு அதனைச் சார்ந்திருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கின. இதன் காரணமாக மக்களின் வாழ்க்கைச் செலவு தாறுமாறாக எகிறியதுடன் பண வீக்கமும் அதிகரித்தது. ஒரு வேளை உணவிற்கே மக்கள் கஷ்டப்பட ஆரம்பித்தனர்.

இதன் விளைவாக உருவாகிய மோசமான சீரழிவே விபசாரம் ஆகும். ஒரு வேளை உணவிற்கே கஷ்டப்பட்ட நிலையில் தமது உயர் கல்வியைத் தொடர முடியாத ஏராளமான இளம் பெண்கள் விபசாரத்தில் இறங்கினர். உள்நாட்டில் விபசார வியாபாரம் ஒரு கட்டத்தில் மிக மலிவீனமாகப் போய்விட்ட நிலையில் துணிச்சலாக பிற தேசங்களுக்குப் பாலியல் வர்த்தக நோக்கத்திற்காக அவ்விளம் பெண்கள் செல்லத் தயங்கவில்லை.




பெருமளவு மேற்கத்தேய உல்லாசப் பிரயாணிகள் செல்லும் இலங்கை, இந்தியா, மாலைதீவு போன்ற நாடுகளுக்கு உல்லாசப் பிரயாணிகள் விசாவில் செல்லும் அப்பெண்கள், அந்நாடுகளில் உள்ள பிரபல ஹோட்டல்களிலும், உல்லாச விடுதிகளிலும் தங்கி விபசாரத்தில் ஈடுபட்டமை தெரியவந்தது.

தமது பல்கலைக்கழகத் தவணை விடுமுறைக்கு மாலைதீவிற்குச் சென்று தங்கி விபசாரத்தில் ஈடுபட்டு, தமது பணத் தேவைகளுக்காகச் சம்பாதிக்கும் பல கிழக்கைரோப்பிய மாணவிகளைக் குறித்ததான தகவல்கள் ஏற்கனவே பரவலாக வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தைய நாடுகள் கிழக்கைரோப்பியர்களின் வருகையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தமது விசா அனுமதியினைக் கடுமையாக்கிக் கொண்டன. எவருமே நினைத்தபாட்டிற்கோ அல்லது இலகுவாகவோ மேற்கத்தைய நாடுகளுக்குள் நுழைந்து விட முடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தினை சாதகமாக்கிக் கொண்ட பாலியல் வர்த்தகம் நடத்தும் வியாபாரிகளும் தரகர்களும் தமது வேலையினைக் காட்டத் தொடங்கினர். அதாவது, லண்டன் உள்ளிட்ட மேற்கத்தைய நாடுகளில் நல்ல வேலைவாய்ப்பு வசதிகள் இருப்பதாகவே இவர்கள் இளம் பெண்களை அணுகுவார்கள். குறிப்பாக, தாதிகள், விற்பனைப் பெண்கள்(Sales Girls) மொடல்கள்(Models) போன்ற பல வேலைவாய்ப்புகள் நல்ல சம்பளத்துடன் இருப்பதாக ஆசைவார்த்தைகள் தரகர்களினால் கூறப்படும்.



ஏற்கனவே வறுமையினாலும் பொருளாதாரக் கஷ்டத்தினாலும் நலிந்து போயுள்ள அவ்விளம் பெண்கள், உடனடியாகவே இதற்குச் சம்மதித்து விடுவார்கள். எமது நாட்டில் இருந்து பல லட்ச ரூபாய்களை ஏஜென்ஸிகளுக்குக் கட்டணமாகச் செலுத்தி மேற்கு நாடுகளுக்குக் குடிபெயருவதற்கு ஒப்பான நடவடிக்கையே இதுவாகும். ஆனால் அவ்விளம் பெண்கள் கொண்டு செல்லப்படும் நோக்கமோ பயங்கரமானது.

தமது கையில் உள்ள சொத்துக்களை விற்றும் கடன் பெற்றும் தரகர்களுக்குக் கொடுத்து நல்ல வேலைவாய்ப்புக் கிடைக்கும் என நம்பிப் புறப்படும் பெண்கள் தாம் மீள முடியாத படுகுழியில் விழப்போவதை அறியாதவர்களாகவே இருப்பதாக டேவிட் ஹரிசன் எனும் ஆய்வாளர் கூறியுள்ளார். இவ்வாறு புறப்படும் இளம்பெண்கள் 15 வயதினை அண்மித்தவர்களாகவும் அனைவரும் 26 வயதிற்கு உட்பட்டவர்கள் என்றும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஒவ்வொருவரையும் 1500 ஸ்ரேலிங் பவுணுக்கு அந்தத் தரகர்கள் பாலியல் வர்த்தகர்களுக்கு விற்பதாகத் தெரியவருகின்றது.


(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



**அதன்படியே** தான் அந்தப் பள்ள **இசைக் கலைஞர்கள்** பின்னணி **இசையை** வாசிக்க வேண்டும். அந்த **முறையை** முதலில் கொண்டு வந்தவர் **திரையுலக** மேதை, திரைப்படத்தின் **முதல்** ஆசான், திரைக்கலையின் **தந்தை** என்றெல்லாம் அன்று போல் **என்றும்** புகழப்படும் டி.டபிள்யூ. க்ரி∴**பித்**. இவருடன் நெருங்கிப் பழகும் **வாய்ப்பும்**, உரிமையும் சாப்ளினுக்குக் **கிடைத்தன**. ஆகவே அந்தப் பின்னணி **இசைமுறையை** இவரும் கையாண்டார். **பின்னணி** இசையை அமைப்பவரும் **சாப்ளின்**; அதில் வயலின் வாசிப்பவரும் **இவரே**. அப்படி ஒரு திறமை இவருக்கு!

ஹாலிவுட்டில் சாப்ளின், க்ரி∴பிட்டைத் தவிர இருவருடன் நெருங்கி பழகினார். அதில் ஒருவர் ஊமைப் பட சூப்பர் ஸ்டார் என்று அழியாத புகழைப்



பெற்ற பிரபல அமெரிக்க நடிகர் டக்ளஸ் பேர்பேங்ஸ், மற்றும் அவருடைய மனைவி மேரி பிக்∴போர்டு. இருவரும் அந்நாளில் உலகப் புகழ் பெற்றவர். சாப்ளினுக்கு முன்பு ஹாலிவுட்டில் அதிக சம்பளம் வாங்கியவர்.

டக்ளஸ் ∴பேர் பேங்ஸ் தான், எம்.ஜி.ஆரின் மானசீக குரு. இது பலர் அறியாத உண்மை. உலகெங்கும் சண்டைக் காட்சிகள் போன்றவை எல்லாம் ∴பேர் பேங்ஸ் படங்களில் வரும் காட்சிகளின் மறுபிறப்புகள் தான்! மாடிப்படியில் நடந்து கொண்டே கத்திச் சண்டை போடுவது...தொங்கும் விளக்குகளைப் பிடித்துக் கொண்டு தாவுவது... கோட்டைச் சுவர்களைக் குதித்துத் தாவுவது... போன்றவைகளையெல்லாம் இவர்தான் திரைப்படங்களில் முதல் முறையாகச் செய்தார். வேறு ஒரு ஸ்டண்ட் நடிகரின் உதவியே இல்லாமல், எல்லாச் சண்டைக் காட்சிகளிலும் இவரே நடிப்பார். இதுதான் இவருடைய தனிச் சிறப்பு.

### யுனைட்டெட் ஆர்ட்டிஸ்ட்ஸ்

பின்னாளில் சாப்ளின் க்ரி∴பித், டக்ளஸ் ∴பேர் பேங்ஸ், மேரி பிக்∴போர்டு இந்த நால்வரும் சேர்ந்து தங்களுடைய படங்களைத் தாங்களே விநியோகம் செய்தால் எல்லா வகைகளிலும் நல்லது என்ற எண்ணத்தோடு, ஒரு திரைப்பட நிறுவனத்தைத் தொடங்கினார்கள். அதன் பெயர் யுனைட்டெட் ஆர்ட்டிஸ்ட்ஸ். இந்த நிறுவனம் உருவான பொழுது ஹாலிவுட் திரைப்பட முதலாளிகள் ஏளனமாகப் பேசினார்கள். பைத்தியங்கள் பைத்திக்கார ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டு விட்டார்களே! என்று சிரித்தார்கள். இந்த நிறுவனம் காலப் போக்கில் பலர் கைகள் மாறி இன்றைக்கும் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.


சாப்ளினுக்கு குத்துச் சண்டை விளையாட்டில் ஆர்வம் அதிகம். நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் அதைப் பழகிக் கொண்டு வந்தார். அமெரிக்காவில் பாக்ஸிங் மிகவும் பிரபலமான ஒரு போட்டி விளையாட்டு. அதில் கோடிக் கணக்கில் பணம் புரளும். அப்படிப்பட்ட போட்டிகளை எல்லாம் அடிக்கடி போய் பார்ப்பார் சாப்ளின். அந்நாளில் குத்துச் சண்டை உலகில் சக்கரவர்த்தியாக நிமிர்ந்து நின்றவர் அமெரிக்கரான ஜாக் டெம்ஸி. இவர் ரோட்டில் நடக்கிறார் என்றால் அவரைத் தொடர்ந்து ஆயிரம் பேர்கள் பின் செல்வார்கள்! இவரும் சாப்ளினுக்கு நெருங்கிய நண்பரானார். சாப்ளின் தன்னுடைய நண்பன் என்று சொல்லிக் கொள்வதில் அந்தக் குத்துச் சண்டை வீரரே பெருமைப்பட்டார்.

தன்னுடைய குத்துச் சண்டை உலக அனுபவங்களை அவர் பல படங்களில் புகுத்தினார். அதில் வீரத்தை விட நகைச்சுவை தான் மிக அதிகமாக இருக்கும். 'தி நாக் அவுட்' என்ற ஒரு படம். இதில் அன்றைய பிரபல நகைச்சுவை நடிகர் ∴பேட்டி ஆர்பக்கிள், எட்கர் கென்னடி இந்த இருவரும் குத்துச் சண்டைப் போட்டியில் கோதாவில் இறங்குகிறார்கள். அந்தப் போட்டியின் நடுவர் சாப்ளின். நடுவராகப் போட்டியை நடத்தும் சாப்ளினுக்குத் தான் அடி, குத்து அதிகம். அடிக்கடி தரையில் விழுபவரும் இவர்தான். போட்டியில் பங்கேற்பவர்கள் அல்ல. இப்படம் பெரும் வெற்றி அடைந்தது. சாதாரண மக்கள் மட்டுமல்லாமல் குத்துச் சண்டை வீரர்களும், இரசிகர்களும் மீண்டும் மீண்டும் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தார்கள்.

(இந்தப் படத்தின் பிரதிபலிப்பு இன்றைய அளவிலும் நம் நாட்டுப் படங்களில் உண்டு!)



சாப்ளினின் படங்கள் வெற்றியைக் குவிப்பதினால் மேக் ஸென்னட்



இவருடைய படங்களின் நீளத்தை அதிகரித்தார். பத்து நிமிடங்களிலிருந்து, இருபது நிமிடங்கள் என்ற நிலை வந்தது.

ஜெண்டில்மேன் ஆ∴ப் லெஷர் என்று ஒரு படம். இதில் சாப்ளின் தன்னுடைய காதலியுடன் மோட்டார் வண்டி பந்தயத்திற்குச் செல்கிறார். அவருக்குப் பக்கத்தில் ஒரு பெண். அவள் கையில் குளிர்பானம் நிறைந்த ஒரு பாட்டில். ஸ்டிராவின் வழியாக அவள் பானத்தைக் குடிக்கிறாள். அவள் போட்டியை ஆர்வத்தோடு திரும்பிப் பார்க்கும்பொழுது அவளுக்குத் தெரியாமல் சாப்ளின் உறிஞ்சுகிறார். இப்படி இரண்டு மூன்று முறை நடக்கிறது. பாட்டிலில் பானத்தின் அளவு குறைந்து கொண்டே வருவதைப் பார்த்து அவளுக்கு ஆச்சரியம்! அவள் சந்தேகத்தோடு சாப்ளினை முறைத்துப் பார்க்கும் பொழுதெல்லாம் போட்டியை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருப்பார்; அல்லது காதலியைக் கொஞ்சிக் கொண்டிருப்பார்! இதுவும் பெரும் அளவில் வெற்றி பெற்றது. இந்தப் பாட்டிலிலிருந்து உறிஞ்சும் யுக்தியை சாப்ளின் பின்னாளில் பல படங்களில் புகுத்தினார். அதை மற்றவர்களும் செய்தார்களென்றால் அதில் ஆச்சரியமும் உண்டோ!

மேக் ஸென்னட் நிறுவனத்திற்காக சாப்ளின் ஒரு மணிநேரம் ஓடும் ஒரு படத்தில் நடித்தார். அதை இயக்கியவர் மேக் ஸென்னட். சாப்ளினைத் தவிர அதில் பிரபல நாடக திரைப்பட நடிகையான மாரி டிரெஸ்லர் என்பவரும் நடித்தார். இந்தப் படத்தில் சாப்ளின் ஒரு பட்டினவாசி. நாட்டுப்புறத்துக்காரர்களை சுலபமாக ஏமாற்ற முடியும் என்ற நம்பிக்கை உள்ளவர். அப்படி ஒருவரைத் தேடி கிராமப் புறத்திற்குச் செல்கிறார். ஒரு கிராமத்தில் பெருமளவில் ஓரிடம். அங்கு தனியாக வசிக்கிறாள் மாரி, அவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.

*(தொடரும்)*

---

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

## 12

## ட்ராகன் ராணி

**15ஆம்** நூற்றாண்டு காலப்பகுதியில் சீன தேசமானது பல சாம்ராஜ்யங்களாகப் பிரிந்திருந்தது. இது ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றிய போது, இந்திய தேசத்தில் இருந்த சமஸ்தானங்களுக்கு ஒப்பானது.

அப்பேற்பட்ட ஒரு சாம்ராஜ்யம் தான் சிங்குவாய் ஆகும். சீனாவின் வட புறத்தே இருந்த இந்நிலப்பரப்பில் ஏறக்குறைய 2 கோடிப் பேர் வசித்ததாக வரலாறு கூறுகின்றது.

அக்காலகட்டத்தில் சீனாவின் உள்ளே சாம்ராஜ்யங்கள் இடையேயும் எல்லைப்பகுதி தேசங்கள் மீதும் போர் நடப்பதும், எல்லைகளைக் கைப்பற்றுவதும் சாதாரண விடயங்களாக இருந்தன.

இக்கால கட்டத்தில் சிங்குவாய் ராஜ்யத்தை மஞ்கூ மண்ட்ரான் மன்னன் ஆண்டு வந்தான். பட்டுநூல் உற்பத்தியிலும் விவசாயம் மற்றும் கைத்தொழிலிலும் சிங்குவாய் ராஜ்யம் பேர்பெற்று விளங்கியது. எனவே அண்டைய தேசங்களும் எல்லை நாடுகளும் தமது கவனத்தை எப்போதும் அதன் மீது செலுத்தியே வந்தன. சிங்குவாய் மக்களும் இலேசுப்பட்டவர்கள் அல்ல.

முந்துகிறவனுக்குத்தான் வெற்றி என்ற அடிப்படையினை நன்கு அறிந்து வைத்துக் கொண்டு ஏனையவர்கள் தம்மீது போர்தொடுப்பதற்கு முன்னராக தமது தேசப்படையினைப் பலப்படுத்திக்கொண்டு அடிக்கடி அண்டையில் எல்லைப் போரைத் தொடுப்பதன்மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொண்டிருந்தனர்.

இவ்விடயத்தில் மஞ்கூ மன்னரும் ஓர் சிறந்த ராஜதந்திரியாக விளங்கினார். நாட்டு மக்கள் பொருளாதார நிலையில் மேம்பட்டு இருந்தமையினாலும், அநாவசியமான கெடுபிடிகளை அவர்கள் மீது மன்னர் மேற்கொள்ளாத படியினாலும் மன்னர் மீது மக்கள் மிக விசுவாசமாகவே இருந்தனர். அதுமட்டுமல்ல, எல்லைகளில் போருக்குப் போகும்போது தமது படைகளை உற்சாகப்படுத்துவதற்காக மன்னரும் அவர்களுடன் கூடச் செல்வதுண்டு.

1508ஆம் ஆண்டு அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் எல்லைப் போரில் ஈடுபட்டிருந்த போது மன்னர் மஞ்கூ மரணமடைந்தார். அவ்வேளை அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். மூத்தவளே ஸூஷி என்ற பின்னாளில் ட்ராகன் ராணி என அழைக்கப்பட்ட மகள். இளையவனோ மூன்றே வயதான ஆண் குழந்தை. தந்தை மரணமடைந்த போது ஸூஷிக்கு 16 வயதே நிரம்பியிருந்தது. ஸூஷி பிறந்து பல வருடங்களாகியும் வேறு குழந்தைகள் குறிப்பாக ஆண் குழந்தைகள் பிறக்காத நிலையில் மன்னர் மஞ்கூ, அவளை ஒரு ஆண் பிள்ளை போலவே வளர்த்து வந்தார். சிறு வயதிலேயே தற்காப்பு மற்றும் போர்ப் பயிற்சியினைச் சிறப்பாக அவள் கற்றுத் தேர்ந்திருந்தாள். அவளின் 13 வயதில் மன்னருக்கு இரண்டாவதாக மகன் பிறந்த போதும் அவர் ஸூஷிக்குரிய எந்தப் பயிற்சியையோ அல்லது கல்வியையோ நிறுத்தவில்லை.

மன்னர் மஞ்கூ மரணமடைந்த போது உடனடியாகக் கூடிய அரச சபைப் பிரதிநிதிகள்,



அரச வாரிசான மூன்றே வயதான குவான்லூ பட்டத்திற்கு வரும்வரை ஆட்சிப்பொறுப்பினை ஓர் அரச நிர்வாகக் குழுவினரிடம் ஒப்படைத்திருந்தனர்.

சிங்குவாய் மன்னர் மரணமடைந்ததைத் தொடர்ந்து சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த அயல் ராஜ்ஜிய படைகள் அதன்மீது போர் தொடுத்தன. இந்த யுத்தத்தில் சிங்குவாய் படைகள் தோல்வியடைந்ததுடன், சில நிலப் பிரதேசங்களையும் இழந்தனர். அது மட்டுமல்ல, தேசத்தின் எதிர்காலப் பாதுகாப்பும் கேள்விக்குறியானது.

இதனை நேரிடையாகக் கண்ணுற்ற ஸூஷி பொங்கி எழுந்தாள். அப்போது 17 வயதே நிரம்பிய அவள், அதிரடியாக ஆட்சியைக் கைப்பற்றி மகாராணியாக முடிசூடிக் கொண்டாள். வயோதிபர், குழந்தைகள், நோயாளிகள் தவிர்ந்த அனைத்து ஆண்களும் இராணுவத்தில் இணைய வேண்டும் என அதிரடி உத்தரவிட்டாள். ஆனால் எவருமே எதிர்பாராதபடி ஸூஷியின் ஆட்சியில் கவரப்பட்ட ஆண்கள் அனைவரும் தேசத்தைக் காக்க படைகளில் இணைந்தனர். மூத்த தளபதிகளுடன் கலந்தாலோசித்து, போர் வியூகங்களை வகுத்த ஸூஷி தானே முன்னின்று போர் தொடுத்தாள். இதில் இழந்த நிலப் பகுதிகளை மீட்டது மட்டுமல்லாமல், எதிரிகளை ஓட ஓட விரட்டினாள்.

தேசத்தில் அவள் மீதான நன்மதிப்பு மக்கள் மத்தியில் மிகவும் பெருகியது. இவ்வேளை யாருமே எதிர்பாராத ஒரு பிரச்சினை நாட்டின் வடபகுதியில் இருந்து வந்தது. அப்பிரதேசத்தை மங்கோலியர்களே ஆண்டு வந்தனர். நாகரீகத்தில் குறைவடைந்த மங்கோலியர்கள் முரட்டுத்தனம் மிக்கவர்களாகவும் எதற்கும் தயங்காதவர்களாகவும் இருந்தனர். அவர்கள் சிங்குவாய் மீது போர் தொடுத்தது நாட்டைக் கைப்பற்ற அல்ல; வளங்களைக் கொள்ளையடிப்பதற்காகவே.

மங்கோலியர்களைச் சமாளிப்பதற்கு ஸூஷியும் சிங்குவாய் படையினரும் பெரும் பிரயத்தனப்பட்டனர். போரில் வெற்றி பெற்றாலும் பெருந்தொகையான படையினரை எல்லையிலேயே நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மங்கோலியர்களிடம் போரிட்டுக் கைப்பற்றுவதற்கு வளங்கள் ஏதும் இல்லாத நிலையிலும் வீரர்கள் உற்சாகமாகப் போருக்குச் சென்றனர். ஏனெனில் மங்கோலியப் பெண்கள் வாட்ட சாட்டமாக தள தளவென்றிருந்தனர். அந்தப் பெண்களை அனுபவிப்பதற்காகவே வீரர்கள் வருடக்கணக்கில் போர்முனையில் தங்கியிருக்கத் தயாராக இருந்தனர். ஆனால் உள்நாட்டிலோ வேறு பிரச்சினை ஒன்று எரிமலையாய் உருவானது.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## பேச்சுவார்த்தை முயற்சியைக் கைவிடுவோம் - இந்தியா எச்சரிக்கை

**இரண்டு** மணித்தியாலங்கள் நீடித்த இந்த அமைச்சரவைக் கூட்டத்தில், அமைச்சர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித் பதிலளித்தார். அப்போதிருந்த இந்திய இராஜதந்திரிகளில் மிடுக்காகவும் இலாவகமாகவும் பிரச்சினைகளைக் கையாளக் கூடியவரென்று பெயர் பெற்றவர் தீக்ஷித். அவர் எடுத்த எடுப்பிலேயே ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் அமைச்சர்களுக்கும் ஒரே போடாகப் போட்டார். "இந்திய அரசாங்கத்தையும் பிரதமர் ராஜீவ் காந்தியையும் எந்தளவுக்கு நம்ப முடியுமென்று இங்கே சிலர் கேள்வி எழுப்பினீர்கள். இந்திய அரசாங்கத்தினதும் பிரதமர் ராஜீவ் காந்தியினதும் நல்லெண்ணம், விசுவாசம் குறித்து இந்த அமைச்சரவையில் விவாதிக்க நான் தயாரில்லை. தமது சொந்தத் தமிழ் பிரஜைகள் தொடர்பாக இலங்கை அரசு பேணிவந்த நல்லெண்ணம், விசுவாசம் குறித்து இலங்கை அமைச்சரவை கலந்துரையாட விரும்புகிறதா? இந்திய அரசினதும் ராஜீவ் காந்தியினதும் நல்லெண்ணம் குறித்துப் பேசப் போகிறீர்களென்றால், நான் இக் கூட்டத்தை விட்டு வெளியேறத் தயாராக இருக்கிறேன்" என்று எடுத்த எடுப்பிலேயே ஒரு போடு போட்டார் தீக்ஷித். "இந்திய அரசுக்கெதிராகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதை நான் கேட்டுக் கொண்டிருக்கத் தயாரில்லை" என்றும் கூறினார் தீக்ஷித்.




ஜனாதிபதி ஜெயவர்த்தனா அதிர்ந்து போனார். இந்திய அரசின் மீதும் ராஜீவ் காந்தி மீதும் வைக்கக் கூடிய நம்பகத்தன்மை பற்றி எவ்விதக் கேள்விகளையும் கேட்க வேண்டாமென்று அமைச்சர்களுக்குக் கூறினார் ஜனாதிபதி. இவ் விடயத்தைப் பெரிதுபடுத்த வேண்டாமென்றும் கூட்டத்தைவிட்டு வெளியேறாமல் தொடர்ந்திருந்து நகல் ஒப்பந்தம் பற்றிக் கலந்துரையாடுமாறும் தீக்ஷித்தை வேண்டிக் கொண்டார் ஜெயவர்த்தனா.

தமிழக அரசின் அழுத்தம் காரணமாகவே, இந்திய மத்திய அரசு இலங்கை விவகாரத்தில் தலையிடுகிறதென்று இலங்கையில் நிலவும் கருத்துக்கள் தவறானவையென்றும் இந்திய அரசும், தமிழக மாநில அரசும் தமிழ்ப் போராளிகளுக்குப் பூரண ஆதரவு வழங்கி வந்திருந்தால், இந்தியா கடந்த நான்கு வருடங்களாக மிகப் பொறுமையுடனும் விசுவாசமாகவும் மத்தியஸ்த முயற்சியை மேற்கொண்டிருக்காதென்றும் கூறினார். இலங்கையின் இறைமை, பிரதேச ஒருமைப்பாட்டினைப் பாதுகாப்பது தொடர்பாக ராஜீவ் காந்தி கொண்டிருக்கும் பற்றுறுதியையும், தமிழ்ப் போராளிகள் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு, அரசியல் இணக்கமொன்றுக்கு வரவேண்டுமென்று அவர் வற்புறுத்தி வருவதையும் இலங்கையின் அமைச்சரவை கவனத்திலெடுக்கத் தவறியதன் மூலம், பாரதூரமான தவறை விடுகிறதென்றும் தீக்ஷித் விளக்கினார். மேலும் அவர் கூறியதாவது:-

"இருதரப்புகளுக்குமிடையில் இணக்கப்பாட்டு ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்துவதற்கு, இந்தியா மிகப் பொறுமையுடன் செயற்பட்டு வருகிறது. தமிழீழப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் உத்தரவாதமொன்றினை இந்தியா உத்தேச ஒப்பந்தத்தில் உள்ளடக்கியுள்ளது. எனவே எவரும் தேவையற்ற பீதி கொள்ளத் தேவையில்லை. இலங்கை ஒரு பல்லின, பல்மொழி, பல்சமயத் தேசமாகத் தொடர்ந்தும் இருக்க வேண்டுமா? இல்லையா? என்பது குறித்துப் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் தீர்மானிக்க வேண்டும். இலங்கை முக்கியமாக ஒரு சிங்கள பௌத்த நாடாக இருக்க வேண்டுமென்று இலங்கை அமைச்சரவை விரும்பினால், ஏனைய சமூகங்கள் பிரிவினை கோருவதன் மூலம் நிவாரணங்களைத் தேடிக்கொள்ள உரிமை கொண்டவை என்பது ஏற்றுக்கொள்ள வேண்டியதாகிவிடும். இதற்கு மாற்றீடாக ஓர் ஈழமல்ல, இரண்டு, மூன்று ஈழங்கள் கூட உருவாகலாம். ஏனெனில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் கூட தனித்தனிப் பிரதேசங்களைக் கோரலாம். சிங்களவர்களின் வன்செயல்களையோ அல்லது சதி முயற்சிகளையோ கட்டுப்படுத்துவது, இலங்கையின் உள்விவகாரம் சம்பந்தப்பட்டதாகும். ஆனால், அவ்வாறானதொரு நிலை ஏற்படுமானால், அவற்றைக் கையாள்வதற்கு இந்திய உதவியை எதிர்பார்க்க முடியும். இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த உயர் மட்டத்தினருடன் நான் கொண்டிருக்கும்

(அரசியல் தொடர்)

தொடர்புகள் மூலம், அவர்கள் இலங்கை அரசுக்கு விசுவாசகமாக இருப்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. எனினும் தமிழீழத் தீவிரவாதிகளின் வன்செயல்களுக்கு அவர்கள் உட்படுவார்களேயானால், அல்லது தமிழ் பயங்கரவாதிகள் தொடர்ந்தும் சிங்களக் குடிமக்களுக்குத் தொந்தரவு கொடுத்து வருவார்களேயானால், பாதிப்புகளைத் தவிர்க்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய பொறுப்பு இலங்கை ஆயுதப்படையினருக்கு உண்டு. எனவே இந்தக் கருத்து நிலைப்பாட்டிலிருந்து பார்த்தாலும், சமாதான வழியைப் பிற்பற்றுவதே நல்லதாகும்.

இலங்கையிலுள்ள சகல சமூகத்தவர்களும் பெரும்பாலான சகல தர மக்களும் சமாதானத்திலேயே விருப்பம் கொண்டுள்ளனரென்பது இந்தியாவின் மதிப்பீடாகும். ஒப்பந்தமொன்றின் மூலம் சமாதானமும் சகஜ நிலைமையும் ஏற்படுத்தப்படுமென்றால், சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி., பௌத்த மகா சங்கம் ஆகியவற்றின் சில எழுச்சிச் செயற்பாடுகள் இடம்பெற்றாலும், அதனை இலங்கை அரசினால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் இந்த வகையில் உதவி வழங்க இந்தியாவினால் முடியும்.

முன்னாள் தீவிரவாதிகள் இணக்கத்துக்கு வந்து, அரசியல் வரைமுறைக்குள் செயற்படுவது பற்றிய பல அனுபவங்கள் இந்தியாவுக்கு உண்டு. நம்பிக்கை, நல்லெண்ணம், விசுவாசம் ஆகியவை இருக்குமென்றால், இலங்கை அரசாங்கத்தினால் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஒரு காலத்தில் தீவிரவாதத் தலைவர்களாகவும் தீவிரவாத இயக்க உறுப்பினர்களாகவும் இருந்தவர்கள், ஆக்கபூர்வமான அரசியல் தலைவர்களாகவும் நிர்வாகிகளாகவும் மாறியதற்குப் பல உதாரணங்கள் உலகெங்கும் உள்ளன. இங்கே, இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமர்ந்திருக்கும் திரு.சௌமிய

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

மூர்த்தி தொண்டமான் என்னை விட இக் கேள்விகள் பற்றி மேலும் காத்திரமான முறையில் விளக்கக் கூடியவர். இலங்கையிலுள்ள சகல ஒன்பது மாகாணங்களுக்கும் ஒரே விதமான சுயாட்சியை உத்தேச ஒப்பந்தம் வழங்குமென்பதால், மத்திய மாகாணத் தமிழர்கள் புதிய கோரிக்கைகளை முன்வைப்பார்களென்ற பிரச்சினை எழமாட்டாது" என்றார் தீக்ஷித்.

தீக்ஷித்தின் உரையை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அமைச்சர்களுக்கு, அமைச்சர்கள் தொண்டமானும், தேவநாயகமும் நம்பிக்கையூட்டும் வகையில் தீக்ஷித்தின் உரையை ஆதரித்துப் பேசினர்.

**இந்திய அரசாங்கத்தையும் பிரதமர் ராஜீவ் காந்தியையும் எந்தளவுக்கு நம்ப முடியுமென்று இங்கே சிலர் கேள்வி எழுப்பினீர்கள். இந்திய அரசாங்கத்தினதும் பிரதமர் ராஜீவ் காந்தியினதும் நல்லெண்ணம், விசுவாசம் குறித்து இந்த அமைச்சரவையில் விவாதிக்க நான் தயாரில்லை. தமது சொந்தத் தமிழ் பிரஜைகள் தொடர்பாக இலங்கை அரசு பேணிவந்த நல்லெண்ணம், விசுவாசம் குறித்து இலங்கை அமைச்சரவை கலந்துரையாட விரும்புகிறதா? இந்திய அரசினதும் ராஜீவ் காந்தியினதும் நல்லெண்ணம் குறித்துப் பேசப் போகிறீர்களென்றால், நான் இக் கூட்டத்தை விட்டு வெளியேறத் தயாராக இருக்கிறேன்" என்று எடுத்த எடுப்பிலேயே ஒரு போடு போட்டார் தீக்ஷித். "இந்திய அரசுக்கெதிராகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதை நான் கேட்டுக் கொண்டிருக்கத் தயாரில்லை" என்றும் கூறினார் தீக்ஷித்.**

இதன் பின்னர், ஜூலை மாதம் 17ஆம் திகதி மாலை இறுதி ஒப்பந்த வடிவத்தை தான் கையளிப்பேனென்றும் அதனை எடுத்துக்கொண்டு புதுடில்லி சென்று இந்தியத் தலைவர்களிடம் கையளிக்கலாமென்றும் ஜெயவர்த்தனா, தீக்ஷித்திடம் கூறினார். ஆனால் ஜூலை மாதம் 17ஆம் திகதி மாலை இறுதி ஒப்பந்தத்தைப் பெற ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் வார்ட் பிளேஸ் இல்லத்துக்குச் சென்ற தீக்ஷித்துக்கு ஏமாற்றமே காத்திருந்தது. ஒப்பந்தத்தின் சில விதிகளுக்குத் தனது மகன் ரவி ஜெயவர்த்தனாவும் அமைச்சர் லலித் அதுலத் முதலியும் கடுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றனரென்றும் ஜெயவர்த்தனா தெரிவித்தார். எனவே, ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய வேண்டியுள்ளதென்றும் அதன் இறுதி வடிவத்தைக் கையளிக்கச் சில தினங்கள் செல்லுமென்றும் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

(தொடர்ந்து வடியும்....)




இரத்தத்துடன் சென்ற ஜயந்தனுக்கு அங்கு இருந்த தேவியின் சூலம் பாடம் கற்பித்து, அவனை வந்த வழியிலேயே திரும்பி செல்ல வைக்கிறது. இதையெல்லாம் மரத்தின் பின் மறைந்திருந்து ஸ்ரீதேவியும் குமாரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பின் தேவியின் கருவறைக்குள் சென்ற குமார் அங்கு ஒரு தங்கப் பாம்பை காண்கிறார்....

**குமாரைப்** பொறுத்தவரை இதெல்லாம் தான் கேள்விப்படாத புதிய செய்திகளாக இருந்தன. இப்படிப்பட்ட கதைகளை அவரது சிறுவயதில் நிறையவே கேட்டிருக்கிறார். பாட்டிக்குத் தெரிந்ததும் சொன்னதும் ஏறத்தாழ இப்படிப்பட்ட கதைகள்தான்.

"புறப்படலாமா? நாம இங்க பார்த்த செய்திகளை உடனேயே தேவதத்தன் நம்பூதிரிக்குத் தெரியப்படுத்தணும். அவருக்கு இந்தச் செய்தி பயன்படும்னு தோணுது" -ஸ்ரீதேவி கூறினாள்.

இருவரும் இல்லத்துக்குத் திரும்பினர்.

மறுநாளே குமார், தேவதத்தன் நம்பூதிரியைச் சந்திக்கப் புறப்பட்டார்.

நடந்ததை எல்லாம் அவரிடம் தெரிவித்தார்.

"ஓகோ இவ்வளவெல்லாம் நடந்துவிட்டதா?" -என்று கேட்ட தேவதத்தன் யோசனையில் ஆழ்ந்தார். சற்று நேரம் கழித்து பேசத் தொடங்கினார்: "குமார், எனக்கு ஒரு சந்தேகம். உண்மையிலேயே அந்த நாகமாணிக்கம் அவ்வளவு சக்தி வாய்ந்ததுதானா! அப்படியானால் ஜயந்தன் அதைக் கைப்பற்றிவிட்டால் நம்மளோட நிலைமை ரொம்பவும் மோசமாயிடுமே!"

'அதை எப்படிக் கைப்பற்ற முடியும்?'

"அதற்கெல்லாம் மந்திரத்தில் வழியிருக்கிறது. கருட மந்திரம் தெரிந்திருந்தால், நாகத்தை மிகச் சுலபமாகவே செயலிழக்கச் செய்துவிடலாம்."

"இருக்கலாம். ஆனால், பகவதியோட சக்தி கோயிலுக்குள்ள இருக்குமில்லையா?" -குமார் சட்டென்று கேட்டார்.

"பகவதி எப்பவும் கோயிலுக்குள்ளேயே இருப்பாங்கன்னு சொல்ல முடியாது. அவர் நீராடப் போகும் ஒரு சந்தர்ப்பம் உண்டு. குறிப்பாகச் சொல்வதானால் துர்க்காஷ்டமி நாளில் நீராட அவர் அதிக நேரம் எடுத்துக் கொள்வார். அந்த நாளும் நெருங்குகிறது. ஜயந்தன் இதெல்லாம் தெரியாத ஒரு மனிதராக இருக்கமாட்டார். அந்தத் தருணத்துக்காக அவர் காத்திருக்கிறதா எனக்குத் தோணுது!" -தேவதத்தன் கூறினார்.

**எழுதுவது**
**சிவன்**

"நாம அதை எப்படித் தடுக்க முடியும்?"


அதே நேரம் ஜயந்தனும் சந்துநாயரும் அதே விஷயத்தைப்பற்றி அங்கு பேசிக்கொண்டனர்.

"துர்க்காஷ்டமி வரட்டும். அன்றுடன் எல்லாவற்றையும் நான் பலமிழக்கச் செய்யுறேன். அந்த மாணிக்கம் என் கைக்கு வந்தால் கதையே முடிந்துவிடும்!" -ஜயந்தன் கூறுனார்.

"அன்றைக்கு மட்டும் நாம் அதைக் காப்பாற்ற வில்லையென்றால், வேறு எப்போதுமே அது சாத்தியமில்லை!" -ஜயந்தன் முணுமுணுத்தார்.

"நீங்கள் சொல்வது போல் அது அவ்வளவு சுலபமா என்ன?" -சந்துநாயர் கேட்டார்.

ஜயந்தன் யோசனையில் ஆழ்ந்தார். அவரது மனம் பல வழிகளில் அந்த விஷயத்தைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது.



இன்றுவரையிலான வாழ்க்கையில் இப்படிப்பட்ட சோதனை முயற்சியில் ஜயந்தன் ஈடுபட்டதில்லை. இதுவரை செய்திருக்கிற மந்திரங்களில் அதற்கான வாய்ப்பும் இருந்ததில்லை. எனவே அதற்காகப் பல ஓலைச் சுவடிகளைப் புரட்டிப் பார்க்க நேர்ந்தது. இதைப் பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்ளாவிட்டால் ஒருவேளை ஆபத்தில் சிக்கிக்கொள்ளலாம்.

அதற்கான முயற்சிகளைச் செய்தாலும் இறுதியாக நாகத்தின் வாயிலிருந்து மாணிக்கத்தை யார் எடுப்பது? எப்படிப்பட்டவர்கள் அதை எடுத்தால் நாகம் தொல்லைப் படுத்தாமல் இருக்கும்!

ஜயந்தன் அலுப்பு, சலிப்பு இல்லாமல் சுவடிகளை ஆராய்ந்தார். கடைசியாக ஒரு சுவடியில் 'நாக மாணிக்கம்' என்கிற தலைப்புத் தட்டுப்பட்டது. அதில் குறிப்பிட்டிருந்த விஷயம் சற்றுக் கடினமானதுதான். பகவதி நீராடப் போவது இரவின் மூன்றாவது ஜாமத்தில் தான்.

எனவே மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் மாணிக்கத்தைக் கைப்பற்றவேண்டும். நாகம் தொல்லை தராமல் இருக்க கருடனைத் துணைக்கு அழைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில்தான் நாகமாணிக்கத்தை வாயிலிருந்து வெளியே கக்கும். அது மிகவும் அபூர்வமான ஒரு சந்தர்ப்பத்தில் - அதுவும் கருடனுடன் போராடும் நேரத்தில்.

தன்னைத் தாக்க வரும் கருடனைக் கொத்துவதற்காக, நாகம் வாயைத் திறக்கும்போதுதான் அது விழும். அப்படி விழுவது தரையிலும் நேரடியாக விழுந்துவிடக் கூடாது. கல்போன்ற பரப்பில் விழும் மாணிக்கத்தைக் கையில் எடுப்பது மிகவும் கடினமான காரியம்.

அதே சுவடியில் மற்றொரு முறையும் குறிப்பிடப் பட்டிருந்தது. பன்னிரெண்டு வயதான பெண் குழந்தை நினைத்தாலும் நாகமாணிக்கத்தை எடுக்கலாம். அதற்கும் சில முறைகள் இருந்தன.

ஏழுநாள் விரதமிருந்து நாகதேவதையை மகிழ்ச்சிப் படுத்திய பிறகு நாகமாணிக்கத்தை எடுக்க முயன்றால் நாகம் சுலபமாக வாயைத் திறக்கும். அப்போது நாகமாணிக்கம் கீழே விழாமல் நேரடியாகக் கையிலேயே வாங்கிக் கொள்ளலாம்.

இந்த இரண்டில் எது தனக்கு சரிப்பட்டு வரும் என்று யோசித்தார் ஜயந்தன்.

இரண்டாவதாகக் குறிப்பிட்ட விஷயம் சுலபமாகத் தோன்றினாலும், இந்தப் பரிசோதனைக்கு எந்தப் பெண் தயாராக இருப்பாள்?

மாணிக்கம் எடுக்கப் போகும் பெண் பயந்து மிரண்டால் அது மிகவும் சிக்கலாகி விடும்.

உள்ள நிலைமையை ஜயந்தன், சந்து நாயரிடம் விவரித்தார்.

"முதலில் சொன்ன முறை எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஏனென்றால் அதைச் சுலபத்தில் பிரயோகிக்க முடியாது. நாகமாணிக்கம் விழும் சமயம் பகவதி வந்துவிட்டால் அத்துடன் எல்லாம் தொலைந்தது. அதன் பிறகு நாம் உயிருடன் திரும்புவதைப் பற்றி யோசிக்க வேண்டியதே இல்லை. அதனால்..." சந்து நாயர் பேச்சை அத்துடன் நிறுத்தினார்.

(வாசனை வீசும்....)

**மனதுக்கு நிம்மதி**

# பிரார்த்தனையின் செயல் வடிவம்

**பிரார்த்தனைக்குச்** செயல்வடிவம் கொடுக்க முடியுமா? என்பது குறித்துபலரும் ஆச்சரியப்படக்கூடும். பிரார்த்தனையே செயல்தானே என்று கூறக்கூடும். நமது யோக மார்க்கங்களில் பக்தி மார்க்கமும் கர்மயோகமும் இருப்பது போல, பிரார்த்தனையைப் பக்தி மார்க்கமாகவும், கர்மயோகத்தைச் செயல்வடிவம் கொண்ட பிரார்த்தனையாகவும் கருதலாம். ஓரிரு உதாரணங்கள் இதை விளக்கக்கூடும்.


நல்ல மத்தியான வெயில் தகித்துக் கொண்டிருக்கிறது. ஆற்றின் மணலைக் கடந்து தலையில் ஒரு குடத்துடன் ஒரு பெரியவர் நடந்து வருகிறார். கால்களில் செருப்பில்லை. மணல் சூடு அள்ளுகிறது. திடீரெனப் பெரியவரின் மடி அவிழ்ந்து அதிலிருந்து காசுகள் கொட்டுகின்றன. குடத்தைக் கீழே எடுத்து வைத்துவிட்டுப் பெரியவர் மணலில் புதைந்து விட்ட காசுகளைத் தேடுகிறார். சாப்பிட்டவுடன் மத்தியான வெயிலைப் பொருட்படுத்தாது விளையாட ஓடி வந்த ஒரு சிறுவன், அந்தப் பெரியவரின் செயலைப் பார்க்கிறான். 'ஐயோ, பாவம் பெரியவர்' என்று மணலில் நின்று காசுகளைத் தேடி எடுத்துக் கொடுக்கிறான். உடலிலிருந்து வியர்வை வழிவதற்கு ஈடாகப் பெரியவரின் கண்களில் நன்றியும், மகிழ்ச்சியும், ஆசியும் பொங்குகிறது. "தம்பி! நீ நல்லவன்டா" என்று ஆசீர்வதிக்கிறார். சிறுவனின் இளமனதில் இச்சம்பவம் ஆழமாகப் பதிந்து விடுகிறது.

இது ஒரு சிறு சம்பவம். பிரார்த்தனையில் நாம் நம் மனத்தால் ஈடுபடுத்திக் கொள்கிறோம். பிரார்த்தனையின் மறுபுறத்தில் அது அன்பாக, நன்றியாக, கருணை வெள்ளமாகப் பொங்கிப் பிரவகிக்கிறது. அந்தக் கருணையையே ஆசி என்றும் அருள் என்றும் கூறுகிறோம். பிரார்த்தனை செய்யத் தெரியாத ஒரு சிறுவன் பிரார்த்தனையின் செயல்வடிவம் கொடுத்து விட்டான். தன்னை மீறித் தன்னை அர்ப்பணிப்பது தான், பிரார்த்தனையின் செயல் வடிவம். செயலின் அளவை அல்லது தன்மையைப் பொறுத்ததல்ல பலன். செயலின் தூய்மையை, ஈடுபாட்டைப் பொறுத்தது அது.

நானும், எனது எழுத்தாள நண்பரும் மதுரை அழகர் கோயிலுக்கு ஒரு சமயம் சென்றோம். எங்கள் இருவரையும் அடையாளம் கண்டு கொண்ட கோயில் பெரியவர் அன்புடன் எங்களுடன் வந்து சுற்றிக் காண்பித்தார். கடைசியில் மூலவரைத் தரிசிக்கச் சென்றோம். "மாமா! பேப்பரில் எழுதுகிறார்களே, அவர்கள் இருவரும் வந்திருக்கிறார்கள்" என்று கூறி விட்டு இன்னும் சில விளக்கங்களை எங்களைப் பற்றிக் கூறினார் அவர். கோயிலின் கர்ப்பக்கிரகத்திற்குள்ளிருந்து பள்ளி கொண்ட பெருமாளே எழுந்து வருவது போன்று வயோதிகம் மிக்க பழுத்த பெரியவர் ஒருவர், அன்புடன் எங்களை நோக்கி வந்தார். "அப்படியா! நான் தவறாமல் படிக்கிறது, நல்ல விஷயங்கள். எங்காவது நல்லாயிருக்க வேணும்" என்று எங்களை ஆசீர்வதிக்கிறார். எங்களுக்குப் புல்லரிக்கிறது. ஆண்டவன் சந்நிதியில் ஆண்டவனும் கூட இத்தனை நெருக்கமாக மனங்கலந்து உறவாடி இருக்க முடியுமா என்பது சந்தேகம்தான். ஆண்டவன் பல சமயங்களிலும் மனித உருவத்தில் அங்கங்கு வருகிறார் என்று நான் எண்ணிக் கொள்வதுண்டு.

"நாம் என்ன செய்துவிட்டோம் பெரிதாக?" என்கிறார் எனது எழுத்தாள நண்பர் "அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் எழுதுவது பலவிதங்களில் பலருடைய வாழ்க்கையைத் தொடுகிறது. உதவுகிறது. அது உங்களுக்குத் தெரியாது" என்கிறார் எங்களுடன் கூட வந்த நண்பர். நல்ல காரியங்கள், பிறருக்கு உதவுகிற சம்பவங்கள், பல வழிகளிலும் நம்மை அறியாது, நாம் எதிர்பார்க்காதபோது, நமக்குத் தெரியாமல் நமக்கு உதவிக் கொண்டிருக்கின்றன.

ஓர் அழகான தாமரைக் குளம். அதற்கருகில் தென்னை ஓலையாலான ஒரு பந்தல். பந்தலுக்கு நடுவில் ஒரு கிணறு. கிணற்றுக்கப்பால் ஒரு பெரியவர். கிழவர் நின்று கொண்டிருக்கிறார். மறுபுறமோ ஒரு முப்பது நாற்பது பேர் நின்று கொண்டிருக்கிறார்கள்.



பெரியவர் பேசவில்லை. கண்கள் எங்கோ லயித்த வண்ணம் இருக்கின்றன. கூடியிருக்கிற மக்கள் அவரவர்களது குறைகளைக் கூறிவிட்டு நகருகின்றனர்.

அந்தப் பெரியவரை அந்தக் கூட்டத்தில் நீங்கள் பார்க்காமல் பொதுமக்களுடன் ஒருவராக ஒரு கடைத் தெருவில் பார்த்திருந்தீர்களானால், யாரோ விஷயம் தெரியாத கிராமத்துக் கிழவர் என்று எண்ணிக்கொண்டு போயிருப்பீர்கள். ஆனாலும் அவர் தலையசைக்குந் தோறும் ஏதோ நமது குறைகளை அவர் ஏற்றுக் கொண்டு விட்டதுபோல, உலவும் காற்றில் மிதந்து நிற்பது போல், ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. அந்த அனுபவத்தை நம்முடன் ஏற்றுக்கொண்டு நாம் நகருகிறோம். பிராத்தனை வேண்டுகோளாய் நம்மிடமிருந்து புலப்படுகிறது. மறுபுறம் பிரார்த்தனை நாம் விரும்பும் காரியங்களை விளைவிக்க வேண்டிய சக்தியாய் எங்கிருந்தோ கிளம்புகிறது. அதைத்தான் ஆண்டவனின் அருள் என்கிறோம், கருணை என்கிறோம், பெரியவர்களின் ஆசி என்கிறோம்.

பிரார்த்தனை செய்யாதபோது, நாம் பிரார்த்தனைக்குச் செயல் வடிவம் தரலாம். அருளையும், கருணையையும், ஆசியும் துவக்கிவிடும் ஒரு நல்ல காரியத்தைச் செய்யலாம். அந்த நல்ல காரியம்தான் பிரார்த்தனையின் செயல் வடிவம், மனிதன் 'தான்', 'எனக்கு' என்பதற்கு அப்பால் போய் பிறருக்கு உதவுகிறானே, அப்போது பிரார்த்தனை செயல் வடிவம் பெறுகிறது. பலனை எதிர்பாராது செய்யும் ஒரு செயல், ஒரு சிறு உதவி, ஒரு பாராட்டு பலவகைகளில் அன்பைத் தோற்றுவிக்கிறது. கருணையைத் தோற்றுவிக்கிறது. அந்தக் கருணையும் ஆசியும் நம்மைச் சூழ்ந்து நிற்கிறது. அப்போது எந்தக் கஷ்டமும் நம்மை ஏதும் செய்ய முடிவதில்லை. இல்லாதவர்களுக்கு உதவுங்கள். அது பணம் என்பதனால் மட்டுமே செய்யப்படும் உதவி அல்ல. பிறர் நலத்தில், பிறர் வாழ்வில், பிறர் மகிழ்ச்சியில் நாம் காட்டும் அக்கறை ஒரு சிறு உதவியாக, நல்லெண்ணமாக முகிழக்கூடும்.

'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் நல்கீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்!'

என்றார் பாரதி. காரணங்களின் மிக முக்கியமான லட்சியமே பிறருக்கு உதவுவதுதான். நமது இந்து மத மார்க்கங்களில் தியானமும், பிரார்த்தனையும் முக்கியம் பெறும் அளவுக்கு கிறிஸ்தவ மார்க்கத்தில் தொண்டு, உதவி, பிறருக்கு பணி செய்தல் மிக முக்கியம் பெறுகிறது. தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த அன்னை தெரேஸா, கிறிஸ்தவ மதத்தின் அற்புத உதாரணம். மகாத்மா காந்தியையும் அன்னை தெரேஸாவையும் 'கர்மயோகிகள்' என்று தத்துவ ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். அன்னை தெரேஸா பிரார்த்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்திருக்கிறார். இதை நாம் நினைவில் கொள்வோமாக. நினைவில் கொண்டு செயல்படுவோமாக.

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள்
சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள்
அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு
பரிசுகளையும், பாராட்டுக்களையும்
பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 169க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

செல்வி. பா. சுஜாதா, 13, பாரதி வீதி, கூமாங்குளம், வவுனியா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. ஏ.ஆர்.றிமாஸ், 14/1, தக்வா நகர், லவ்லேன், திருகோணமலை.
2. வ.இளநிதி, 5, பிள்ளையார் கோயில் வீதி, கல்லடி, உப்போடை, மட்டக்களப்பு.
3. ஆர். கார்த்திகேசு, 3 1/3, 42 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
4. திருமதி யோகா ஆனந்தகுமாரன், 270/11, வலியமுனவீதி, ஹேகித்த - வத்தளை.
5. க. நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.
6. கே. அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
7. க. கஜேந்திரன், சென்.செபஸ்தியார் வீதி, பெற்றா, மன்னார்.
8. ச.சொ.மகிழ்ராஜ், 70/3 A, அலன் அவனியூ, தெகிவளை.
9. எம். சாந்திகுமார், அரசகால் நடை மருத்துவ நிலையம், மஸ்கெலியா.
10. இஷாரா பேகம் ஜெமீல், 390A, செமனரிவத்த வீதி, தென்னங்கும்புர, கண்டி.

## குறுக்கெழத்துப் போட்டி 171

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| ■ | ■ | 21 | 22 | 23 | ■ |
| 25 | 26 | ■ | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | ■ | ■ | 36 |

**இடமிருந்து வலம்**

1. இரண்டு மலைகளுக்கிடைப்பட்ட பிரதேசம் அல்லது பாதை.
7. ஒரு மரத்தின் பெயர் (குழம்பியுள்ளது).
11. குளம் அல்லது கிணறு (திரும்பியுள்ளது).
13. வீடு என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
21. சுத்தம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது).
25. படை என்றும் கூறலாம்.
28. வட இந்திய மொழிகளில் ஒன்று (குழம்பியுள்ளது).
31. வெற்றிச் சின்னம் என்று கூறலாம் (குழம்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. கிருஷ்ணரின் அவதாரங்களில் ஒன்று.
2. வெட்கம் என்று பொருள்படும் (குழம்பியுள்ளது).
3. வருமானம் என்று கூறலாம் (குழம்பியுள்ளது).
6. நட்சத்திரங்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
16. கறுப்பு (குழம்பியுள்ளது).
23. செய்தி அல்லது செய்தி கூறுவோர்.
25. விக்ரம் நடித்து வெளியான படம்.
26. செயல் அல்லது ஏவல் (தலைகீழ்).
30. பவனி வருதல் என்று கூறலாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 169 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வெ | 2 ன் | 3 னி | ■ | 5 லா | 6 கை |
| 7 கு | 8 கை | ■ | 10 ட் | 11 க | 12 சி |
| 13 னி | 14 தொ | 15 ன் | ■ | 17 ட | ■ |
| ■ | ■ | 21 ம | 22 வ | 23 ம் | 24 ண |
| 25 ம | ■ | 27 னி | 28 மா | ■ | 30 ம் |
| 31 டி | 32 இ | ■ | 34 ம் | 35 ர | 36 தா |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 06.06.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-171
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்

**- வழங்குவது றாஹில்**

## பாதை காத்திருக்கிறது

கத்தரிச் செடியில்
பலாக்காய் முளைத்தால்
செடியே செத்துவிடுகிறது.
சின்னக் குருவியின்
தலையில் தேங்காய் வைத்தால்
குருவி புதைந்து விடுமே!
உடல் பாரத்தை விட உன்
மனதின் பாரம் பன்மடங்கா?
நான் என்ற ஆணி வேரில்
நீ நிற்கிறாயா?
எல்லாம் நானே என்ற
சொற்களை
மந்திரமாக்குகின்றாயா?
நீ கடவுளை விட்டு
வெகுதூரத்தில் நிற்கிறாய்.
உன் மனதில் முட்கள்
முளைத்திருக்கின்றன.
அந்த முட்களே உன்னைத்
தைத்து விடுவதற்கு முன்னாடி
நீ உனக்குள்ளிருக்கும்
நானைப் பிடுங்கி வீசு!
நீ மிக உயரத்தில்
இருப்பதாக உனக்குள்
முளைத்திருக்கும் நானிடம்
சொல்லி வைத்திருக்கிறாய்.
உன் வானத்தை நீ
நிர்வாணமாக்கினால் உனக்குள்
ஒளி வளரும்.
உன்னிலிருந்து அழுக்குப்
பரவுகிறதா?
உன் சொற்களால் புண்கள்
உண்டாகின்றனவா?
நீ முரட்டுப் பாதையில்
நுழைந்திருக்கிறாய்.
குருட்டு விழிகளால்
பார்ப்பதற்கு முயற்சிக்கிறாய்.
உன் உயிரிலிருந்து தீ
விழுகிறது.
உனது சூழல் உன்னால்
சேதமடைகிறது.
உன் பார்வை பட்டுப் பூக்களே
பயந்த உதிர்கின்றன.
உன் தலைக்கனம்
உயரும்போது மிகப் பள்ளத்தை
நோக்கி நீ விழுந்து
கொண்டிருக்கிறாய்.
வெல்லம் வழங்குவதற்காக
வந்த நீ விசம் கொடுக்கிறாய்;
குடிப்பது நீயே என்று
தெரியாமல்!
நீ உயரம் ஏறுவதாக
நினைக்கிறாய்; கீழே விழுந்து
மிதிபடுவது நீயே என்று புரியாமல்!
உனக்கு வழங்கப்பட்ட
புன்னகைகள் எங்கே?
உனக்குக் கொடுக்கப்பட்ட
இனிப்புச் சொற்கள் எங்கே?
தொலைத்தாயா?
உன்னைப் புதைத்துவிட்டு நீயே
உன்னைத் தேடுகிறாயா?
உனது இரக்கம்
இறந்துகிடக்கிறது.
உனது அன்பு சிதைந்து
விட்டது.
பாசவலையைப் பிய்த்துக்
கொண்டு தப்பிப் போனதாக நீ
நினைத்தாய் - தீக்கிடங்கினுள்
விழுந்திருப்பது நீயென்று
புரியாமல்!
நீ உன்னைப் புதுப்பிக்கும்
போது உனக்குள் இருக்கும்
ஒளியைச் சந்திப்பாய்!
நான் என்ற அழுக்கை
கழுவிவிட்டு வா!
பாதை காத்திருக்கிறது - நீ
பயணப்படுவதற்காக!

# அறியாத உறவு

**அருணன்** தனது திருமண ஆயத்தங்களில் முற்றாகவே மூழ்கியிருந்தான். இன்னும் பத்து நாட்கள் மீதமிருக்கின்றது. இறுதி நேர அலுவல்களைத் தனது நண்பன் ஜெயக்குமாரிடம் தொலைபேசியில் ஒப்படைத்துக்கொண்டிருந்தான். அந்த நேரம் பார்த்து சமையலறையிலிருந்து வந்த அவனது தாயார், அவனிடம் விடிஞ்சா, பொழுதுபட்ட உந்த போனில என்ன கதைக்கிறியோ தெரியாது. மத்தியானம் இன்னும் சாப்பிடவு மில்லை.பின்நேரம் மணி அன்ரி வீட்டபோய் மிகுதி பலகாரங் களைச் செய்ய சாமான்களை வாங்கி கொடுத்துப்போட்டு மிச்ச வேலையை பார் தம்பி என்ற தாயின் குரலுக்கு சம்மதம் தெரிவித்தான்.

அம்மா, கடிதம் வந்ததென்று சொன்னீங்கள், எங்கயது? உதில எங்கேயோ வச்சனான். கொஞ்சம் தேடிப்பார் தம்பி. சரி சரி கண்டுட்டன் என்று கடித உறையை பிரித்தான்.

**அன்பின் மச்சானுக்கு,**

என் மனமார்ந்த திருமண வாழ்த்துக்கள். உன் கொள்கையும் இலட்சியமும் இந் நன்னாளை அடையச்செய்துள்ளது.

வாழ்க வளமுடன்.
சந்தியா

என்று மாத்திரம் இருந்த கடிதத்தைக் கசக்கி ஓர் மூலையில் போட்டுவிட்டு தன் வேலைகளை ஆரம்பித்தான். சந்தியா மணி அன்ரியின் மூத்த மகள். சாதிப்பெருமை காரணமாக கன்னிகழியாமல் இருப்பவள். ஆனாள் மணி அன்ரி தனது மகளின் மனநிலையை மாற்ற முனைந்து தோற்றுப்போய் எப்படியாவது வாழ்ந்துகொள் என்று கூறிவிட்டு தனது பின்னைய இரண்டு புதல்விகளுக்கும் திருமணம் செய்து கொடுத்துவிட்டாள்.

மணி அன்ரி தேவையான யாவும் வாங்கி வந்திட்டன். வேறு ஏதாவது தேவையென்றால் சொல்லியனுப்புங்கோ மறவாமல் நாளைக்கு வாங்கிவருகின்றேன். தம்பி ஒரு நிமிசம் நில்லடா. தண்ணி ஏதாகிலும் தாரண் வாயை நனைச்சுப்போட்டுப் போ என்றது மணி அன்ரியின் குரல். சந்தியா உன்ர கல்யாணத்துக்கு வரமுடியாதென்று போன் பண்ணினவள், ஏதோ அவசரமான நிகழ்ச்சிக்காக கண்டிக்கு போகச் சொல்லிப்போட்டினமாம். பிறகு வந்து சந்திப்பதாக சொல்லியிருந்தாள். ஒரு புன்முறுவலால் பதில்சொல்லிவிட்டு பந்தல் அலங்கார விடயம் ஞாபகத்திற்கு வர அதனை உறுதிசெய்யப் புறப்பட்டான்.

சந்தியாவை மறந்திருந்த அவனுக்கு காலை வந்த கடிதமும், அன்ரியின்பேச்சும் மீளவும் அவளை ஞாபகப் படுத்திவிட்டிருந்தன. உறவு நிலையில் ஒன்றுபட்டிருந்தாலும் சிந்தனை ரீதியில் வேறுபட்டவர்கள். சிறந்த நண்பர்களும் கூட. ஆனால் மாறுபட்ட எண்ணங்களையுடையவர்களாக இருந்தனர். அருணன் தனக்கு விரும்பிய சிலருடன் மட்டுமே பழகுவான். தனது தகைமைக்கேற்ற சிலருடன் பழகுவதால் அவனுக்கு நண்பர்கள் மிக குறைவு. அவனது சுபாவம்படி, மிகவும் சுறுசுறுப்பான அவனது வாழ்வில் இது ஓர் குறையாக தென்படவில்லை. யாவருக்கும்வரும் சுடலை ஞானம்போல காலப்போக்கில் அவன் தனது தவறை உணர்ந்து கொண்டாலும் அது காலம் பிந்தியதாகவே காணப்பட்டது.

சந்தியா இதற்கு நேர் எதிரானவள். சாதி, சமய, குல, இன வேறுபாடுகளை களைமுற்பட்ட ஓர் தியாகி. கல்லூரி மற்றும் பல்கலைக் கழக காலங்களில் இதற்காக தனது கல்வி வளர்ச்சியைக்கூட உதாசீனம் செய்திருந்தாள். கீழ் மட்டம் தொடங்கி உயர்மட்டம் வரை அவளது தொடர்பு களும் வலைப்பின்னலும் அவளை மிகவும் உணர்ச்சி பொங்கும் உயர்ந்த இடத்தில்வைத்திருந்தது. அவள் சாதித்ததும் அநேகம் இழந்ததும் அநேகம். யாவரும் சமம். உலகில் இரண்டு ஜாதிகள் மாத்திரமே உண்டு.....என்று அவளது கருத்துக்களுக்கு முன் எதிர்த்து பேச ஒருவரு மில்லை. ஓர் அரசியல்வாதிபோல் அனல் கக்கும் அவளது எழுத்துக்களும், உரைகளும் யாவரையும் கவர்ந்திழுக்கும். கவரப்பட்டோர் அநேகம். அருணனுக்கு ஆலோசனை வழங் காத நாளேயில்லை. அவனும் மௌனமாக யாவற்றையும் கேட்பான். புன்முறுவலே அவனது பதிலாகக் காட்சி தரும்.

ஆனால் தனது தனிப்பட்ட குடும்ப வாழ்வில் இவையொன்றுமே அவளை கவரவில்லை. தனது தங்கைகள் இருவருக்கும் மிகவும் உயர்குடிகளாகவே தாயின் உறவுகள் மத்தியில் தேர்ந்தெடுக்க முன்னின்றாள். தனது குடும்பம் ஓர் கலப்பு கலாசாரத்தில் நுழைய அவள் இடமளிக்கவில்லை. தூய, கலப்பில்லாத குடும்ப வாழ்வையே நோக்கி நகர்ந்தது அவளது எண்ணம். இருபத்தோராம் நூற்றாண்டின் கனவுகளை துவசம் செய்தாள். அவள் கட்டிய கோட்டைகளை அவளே தகர்க்க ஆரம்பித்தாள். அன்றோடு கிழியத் தொடங்கியது அவளது வேடம். செயலில் காட்ட முடியாத அவளது வாய்ஜாலம் வெளுத்துப் போனது. தனது கருத்துக் களால் கவரப்பட்டு, தன்னை நெருங்கி வந்து தனது காதலை வெளிப்படுத்திய முகமட்டிடம் மதவேறுபாடு காரணமாக இக்காதலுக்கு இணங்க மறுத்ததன் மூலம் அவன் தனிமைப்படுத்தப்பட்டான். நண்பர்கூட்டம் இவளை விட்டு விலகிப்போனது. மௌனியானாள் நிரந்தரமாக. தனது சொந்த ஊரிலிருந்து வெகுதூரம் தானாகவே அருணனது உதவியுடன் தொழிலொன்றைத் தெரிவுசெய்து அதற்குள் தனது எதிர் காலத்தை செலவிட முற்பட்டாள். இடையிடையே தொலை பேசியில் அருணனுடன் கதைப்பாள். வீட்டாருடனும் பேசுவாள். ஆனால் அவள் தனது நோக்கம், கொள்கை போன்றவற்றி லிருந்து வெகு தூரம் பயணித்திருந்தாள். அவளால் மீளமுடிய வில்லை. யாருடைய பேச்சையும் கேட்கும் நிலையில் அவ ளில்லையென்பதை யாவரும் அறிந்தே வைத்திருந்தனர்.



-ஆ.ல.லக்சேந்திரகுமார்,
யாழ்ப்பாணம்.

அருணன் மாறியிருந்தான். வாழ்க்கையின் யதார்த்தங் களை நன்கு உணர்ந்து வாழ தொடங்கினான். சந்தியாவின் வாழ்கையும் அவனுக்கு பாடமாக அமைந்தது. வாய் பசப்பு களுக்கு முன்னுரிமை கொடுக்காமல் மனித தேடல்களுக்கு மதிப்பளித்தான். தனது பெற்றோரது விருப்பத்தினை உணர்ந் தாலும் காலத்தின் தேவைகளுக்கு முக்கியம் கொடுத்தான். தனது குடும்ப உறவுகள், குல வேறுபாடுகளைத் துறந்து தன்னை முழுமையாக நேசிக்கும் அஞ்சலியைத் தனது மனைவியாக ஏற்க முடிவு செய்திருந்தான். ஆரம்பத்தில் வீட்டில் எதிர்ப்புகள் தோன்றினாலும் அஞ்சலியின் குணத்திற்கும் - ஆளுமைக்கும், அன்புக்கும் அவர்கள் விட்டுக்கொடுக்க வேண்டிய சூழல் உருவானது. நிச்சயதார்த்தம் ஒழுங்கு படுத்தப்பட்டது. திருமண திகதியும் நிச்சயிக்கப்பட்டது. திருமண வேலைகளும் முடுக்கிவிடப்பட்டிருந்தன. ஒவ்வொன்றாக கவனித்து யாவற்றையும் தனது நண்பர்களின் உதவியோடு சிறப்பாகவே செய்து கொண்டுவந்தான்.

இதனை கேள்வியுற்றதும் சந்தியா உண்மையில் கலக்க மடைந்துபோனாள். தனது தங்கைகளின் திருமணத்தின்போது அருணன் மிகவும் உதவியாகயிருந்தான். அவனுக்கு உதவ முடியாததே இக்கலக்கத்தின் ஆரம்பமாகவிருந்தது. ஆனால் நண்பர்களற்ற அவன் எவ்வாறு இவ்வளவு நண்பர்களை சம்பாதித்து, இதனை இவ்வளவு சிறப்பாக செய்யமுடிகின்றது. அமைதியாக, மௌனியாக காணப்பட்ட இவனை யார் இவ்வளவு ஆளுமையுள்ளவனாக மாற்றினார்கள் என்பதை அவளாள் உணர்ந்துகொள்ளமுடியவில்லை. அவனாகவே வாழ்வின் அனுபவப்பாதையில் மாற்றமடைந்தான். இதுவே உண்மையாகவிருந்தபோதிலும் இதனை அவள் உணர வாய்ப்பிருக்கவில்லை. இதனை ஓர் நாள் உணர்த்தியே தீரும்.

தனது குடும்பம் கலப்பற்றது என்பதில் அவளுக்கொரு மமதையிருந்தது. அவளது முதல் சகோதரி திருமணம் முடித்து ஒரு வருடம் கழித்து வெளிநாட்டிற்கு சென்றுவிட்டாள். பிள்ளைகளில்லாதிருந்த அவளது குடும்பம், மூன்று வருடம் கழித்து ஓர் மழலைச் செல்வத்தையும் பெற்றுக்கொண்டது. இரட்டிப்பு மகிழ்ச்சி காணப்பட்டாலும் சந்தியாவின் வாழ்க்கை சரிவர அமையாததால் யாவருக்கும் ஒரு சிறு வருத்தம் காணப்பட்டது. இருப்பினும் ஏற்படுத்தப்பட்ட எந்த சம்பந்தங் களும் அவளுக்கு சரிவர அமையவில்லை. கல்யாண யோகமில்லாதவள் என்ற சிறப்புப் பெயரையும் தங்கைகள் வழங்கிவிட்டு, தமது வாழ்வில் கவனம் செலுத்தத் தொடங்கி னார்கள். இதனைச் சந்தியா ஓர் பொருட்டாக எடுக்கவில்லை. ஆனால் பெற்றோரின் கவலை யாருக்குத் தெரியும்.

அவள் எழுதிய இலட்சியம், கொள்கையென்ற எழுத்துக்களை பார்க்க அவனுக்கு கோபம் வந்தது. இருந்தாலும் அதனை ஒருபோதும் அவன் வெளிக்காட்டி யதில்லை. மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் வாழவேண்டு மென்பதே அவனது அவா. காலங்கள் நேரங்கள் மீது பழிகளைப்போட்டு தப்பிவிடுவோர் மத்தியில் இவன் சற்று வித்தியாசமாகவே இருந்தான்.

திருமணம் தடபுடலாக நடந்தேறியது. பலமுறை அருண னுடன் தொடர்பினை ஏற்படுத்த முனைந்தும் முடியவில்லை. தனது சுயம் வெளிவந்ததால் தன்னை ஒதுக்குகின்றானென்று அவளது உள்மனது சொல்லிற்று. நேரடியாக காணும்போது கதைக்கலாமென்று தன் உள்மனதை தேற்றிக்கொண்டாள். ஆனால் அவன் ஒருபோதும் இவளை காணப்போவதில்லை என்ற அவனது முடிவு இவளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

சுமார் மூன்று வருடங்கள் கழிந்தோடியபின்னர், சந்தியா வின் தங்கை கனடாவிலிருந்து நாடு திரும்பியிருந்தாள். இரண்டு பிள்ளைகளுடன் மாத்திரம் வந்திருந்தாள். ஏனென்றால் சிறு குடும்பப் பிரச்சினை காரணமாக விவாகரத்து பெற்றிருந்தாள். வீடே களைகட்டியிருந்தது. அத்தோடு மணி அன்ரி தனது மூன்றாவது மகளையும் இவளது வருகைக்காக அழைத்திருந்தாள். அவளும் இரண்டு பிள்ளைகளுக்கு உயிர்கொடுத்திருந்தாள். வீட்டில் நாலு பேரப்பிள்ளைகள். மணியன்ரி வானத்தில் மிதந்தாள். சந்தியாவும் ஒருவாறு மூன்று நாள் விடுப்பில் வந்திருந்தாள். சமையல், சாப்பாடு, யாவரும் சுற்றுலா, குழந்தைகளுடன் கொஞ்சல். வீடே ஆனந்தகளேபரத்தில் மிதந்தது.

அருணனும் தனது மனைவி அஞ்சலி, மகள் திவ்யா வுடன் ஒருவார விடுப்பில் வந்திருந்தான். அன்று மாலை பொழுதுபோக்காக மாலையில் சற்று ஆசுவாசமாக நடந்து செல்கையில் ஏதேச்சையாக மணியன்ரியைச் சந்தித்தான். சகல புதினங்களையும் அவனிடம் கூறிவிட்டு நாளை மதிய சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வரும்படி அழைத்தாள். தனது வரவை உறுதிப்படுத்திவிட்டு சில யார் தூரம் நடந்துவிட்டு வீடு வந்து சேர்ந்தான்.

காலை விடிந்ததும் தனது தாயாரிடம் விடயத்தைக் கூறிவிட்டு குடும்பமாக புறப்பட்டான். மழலைகளுக்கான சிறு பரிசுப்பொருட்களையும் வாங்கிக்கொண்டு நேரடி யாகவே தனது காரை மணியன்ரியின் வீட்டு வாசலருகே நிறுத்தினான். யாவரும் ஒருமித்து காணப்பட்டதில் யாவருக் கும் சந்தோசம். சந்தியா பிள்ளைகளுடன் உடனிருந்தாள். பிள்ளைகளுக்கான சகல வேலைகளையும் அவளே செய் தாள். சந்தியாவை அவன் காணவிரும்பவில்லை. அவளும் அதனை உணர்ந்துகொண்டதைப் போல் அவனை கண்டும் காணாததுபோலிருந்துவிட்டாள். யாவரும் பிள்ளைகளுடன் குலாவிமகிழ்ந்துவிட்டு மதிய உணவினையும் யாவரும் ஒருமித்து சமைத்து உண்டுவிட்டு புறப்பட்டான்.

வரும் வழிநெடுக சந்தியாவின், பிள்ளைகளுடனான கெஞ்சல், கொஞ்சல்களை ஒருகணம் சிந்தித்து சிரித் தும்கொண்டான். பிள்ளைகளைப் பார்த்து வம்சமென்றதும், குலமழியா விளக்கென்பதும் அவனுக்கு எரிச்சலை மூட்டியது. ஆனால் பொறுமையை கடைப்பிடித்தான். சில வருடங்கள் பின்நோக்கி நகர்ந்தது அவனது நினைவுகள். சந்தியாவின் முதலாவது தங்கையின் குடும்பம் இவ்வுலகிற்கு வாரிசுகளைகொண்டுவரும் பாக்கியமற்று போனமையினால் ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு குழந்தைகளைத் தத்தெடுக்க உதவினான். அதுவும் அவளது வீட்டுக்கு சமையலுதவி செய்யவரும் சியாமளா விற்கு தவறான உறவின் மூலம் பிறந்தது முதலாவது பிள்ளை. இரண்டாவது பிள்ளை அருணனது மிக நெருங்கிய சகோதரமொழி பேசும் பெரேராவுக்கும் - சிரோமிக்கும் பிறந்தது. இவர்கள் வாகன விபத்தொன்றில் இறந்துபோக அக்குழந்தையைத் தத்தெடுத்துக் கொடுத்திருந்தான்.

சந்தியாவிற்கு இச்சம்பவங்கள் ஒன்றுமே தெரியாது. காலம் அவள் விரும்பிய வாழ்க்கையை மாற்றி விட்டிருந்தது. அவளை அறியாமலே ஓர் அர்ப்பணிப்புள்ள வாழ்க்கையின் தொடக்கம் ஆரம்பமாகிவிட்டது அவளது தூய வம்சத்தில். இவ்வுண்மையை அறிந்தால் இக்குடும்ப உறவை, புதிய வாழ்வின் இணைப்பை ஏற்றுக்கொள் வாளா? கனவுக்குள் வாழும் அவள் இத்தகைய அன்பை, முத்த மழையை அச்சிறு உள்ளங்களுக்குக் கொடுப்பாளா? இல்லை காயப்படுத்துவாளா? அவள் இன்னுமிருண்ட கனவுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கின்றாள் என்பதை உணருவாளா? காலம் பதில் தரும். பொறுத்திருந்து பார்ப்போம்.

(யாவும் கற்பனை)

# சுமை தாங்கி

**வானத்தில்** ஜொலித்துக் கொண்டிருக்கும் வண்ண



-என்.எம்.அல்ஹா,
தில்லையடி.

நட்சத்திரத்தை இரசிப்பதற்குக் கூட அவள் மனம் விரும்பவில்லை. மாறாக அவற்றின் மீது அவளுக்குக் கோபமே உண்டானது. ஏன் என்றால் சகியின் முன்னைய வாழ்க்கை வரலாறாகும். மீரா வானத்தைப் பார்த்து அந்த நட்சத்திரக் கூட்டங்கள் இந்த இரவில் எவ்வளவு சந்தோசமாக இருக்கின்றன. ஆனால் என் நண்பிக்கு மட்டும் ஏன் இப்படிச் சோதனைக்கு மேல் சோதனை குடுக்குறார் என்று கடவுளைத் திட்டித் தீர்த்துக் கொண்டாள் மீரா. திடீரென்று ஒரு அலறல் குரல், "ஐயோ அவளை தனியே விட்டுட்டு வந்திட்டோமே; அவள் என்ன ஆனாளோ என்று பதறி அடித்துக் கொண்டு ஓடினாள் சகியின் அறையை நோக்கி. அங்கே சகி இருந்த கோலத்தைப் பார்க்கமுடியவில்லை மீராவால். கட்டிலின் கீழ் தலையில் அடிபட்டு இரத்த வெள்ளத்தால் மூழ்கிக் கிடந்தாள் சகி. "சகி.....சகி... சகி என்னாச்சு என்னாச்சு சொல்லு சகி" என்று பதற்றத்துடன் சகியைத் தூக்கி கட்டிலில் கிடத்தினாள் மீரா. இரத்தத்தால் மூழ்கிக் கிடந்தவளை ஒரு தாய் போல் அரவணைத்து, ஒரு துணி கொண்டு துடைத்து மருந்து போட்டுவிட்டாள் மீரா. என்ன நடக்குதென்றே அறியாத சகி, ஒரு கைக்குழந்தை போல் காணப்பட்டாள் சகி. ஆம் சகி ஒரு மனநோயாளி. கூறப்போனாள் மீரா யார் என்பதே தெரியாது அவளுக்கு. சகியின் பணிவிடைகளை முடித்துக் கொண்ட மீரா, சகியின் கன்னத்தில் முத்தம் கொடுத்தாள். அவள் அழகைப் பார்த்து ரசித்தாள். நீயும் நானும் எப்படியெல்லாம் பழகியிருப்போம் என மனதுக்குள் நினைத்துக் கொண்ட மீரா, கடந்த கால வாழ்க்கையை எண்ணலானாள். மீராவும் சகியும் வேறு வேறாகப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். ஒரே பாடசாலையில் ஒன்னா படித்தவர்கள் என்று கூறுவதை விட சிறுவயதில் இருந்தே அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், புரிந்து கொண்டவர்கள். இருவரும் உயர்தரம் படித்துக் கொண்டிருந்த போது மீராவின் அண்ணனான வாசு ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்தான். ஒவ்வொரு நாளும் மீராவைப் பாடசாலையில் கொண்டு வந்து விடுவதும் வாசுதான். வாசுவும் அடிக்கடி மீராவைத் தேடி சகியின் வீட்டுக்குச் செல்லும் போது வாசுவின் மீது சகிக்கு காதல் உண்டானது. மீரா தான் இருவர் காதலுக்கும் தூதுவர் என்றே கூறவேண்டும். இப்படி இருக்கையில் மீராவின் அம்மாவுக்கு சகி மீதுகோபம் ஏனெனில் வாய்க்கு வாய் சகி, சகி, சகி புராணமே. இதனால் கோபம் கொண்ட அம்மா, தன்னிடம் இருந்து வாசுவையும் பிரித்துச் சென்று விடுவாளோ என்ற எண்ணமே. வாசு அம்மா பேச்சு கேட்பவன். மீரா சகி சொல்வதே வேதவாக்கு என்று நம்புபவள். வாசுவின் காதலால் சகி தினம் தினம் வருந்தினாள். மீராவின் அம்மா வாசுவுக்குத் தனக்குப் பிடித்தமான ஒருத்தியை மணம் முடித்துவைக்கத் திட்டம் போட்டாள். இதை அறிந்த மீரா, வாசுவுக்குப் புத்திமதிகள் சொன்னதால் திருமணத்திற்கு வாசு ஒப்புக் கொள்ள இல்லை. அம்மா நிச்சயிக்கப்பட்ட திருமணத்திற்கு சம்மதிக்கச் சொன்னாள். அதனால் வாசு இரகசியத் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டான். சகிக்கு இதைக் கேட்டு இவ்வுலகமே இருண்டு போன மாதிரி தோன்றியது. வாசுவிடம் சகி கத்தினாள், கதறினாள் வாசுவின் மனம் இரங்கவே இல்லை. கடைசியாக வாசுவின் திருமண நாளும் வந்தது. வாசுவின் வீட்டார் சந்தோஷமாக ஆடிப்பாடினார்கள். மீராவைத் தவிர. வாசுவை மணக்கோலமாகக் கூட்டிக் கொண்டு போகும் போது அவர்கள் சென்ற கார் லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மாப்பிள்ளையோடு வந்தோர் சிலரும் வாசுவும் மரணமடைந்தனர். அதை அறிந்த சகிக்கு இதயமே வெடித்துச் சிதறியது. ஏனென்றால் அவள் காதல் உண்மையானது. வாசுவையும் அவன் மரணத்தையும் தாங்கமுடியாத சகி, மனநோயாளியானாள். மீராவின் பெற்றோர் சகியை அடியோடு வெறுத்தனர். மீராவை சகியை விட்டு விலகி வரும்படி எவ்வளவோ கூறியும் சகியை விட்டு பிரியமுடியாத மீரா தனிமையாக்கப்பட்டாள். சகியின் பெற்றோர் உதவியோடு சகியைக் கூட்டிக் கொண்டு புறப்பட்டாள் மீரா! எங்கே? மனநோயாளி மருத்துவமனைக்கு. "இனிமேல் சகியைத் தவிர வேறு யாருக்கும் என் மனதில் இடம் இல்லை என உறுதி கொண்டாள்" மீரா...மீரா... ஹா...சுயநினைவுக்கு வந்த மீரா திரும்பினாள். சகியின் வைத்தியர் முன் நின்றிருந்தார்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**ஆசைக்கும்** அளவு வேண்டும் என்று கூறுபவர்கள் அநேகர். ஆனால், அந்த ஆசையின் அளவை அவர்கள் ஒரு போதும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

அப்படியாயின், ஆசையின் அளவு யாரிடமிருக்கிறது?

குறிக்கப்பட்ட ஒன்றின் மேல் அளவான ஆசை இருக்குமாயின் அது அவரவர்க்குத் தேவைப்பட்ட அளவேயாகும். ஆனால், மற்றொன்றில் ஆசையானது அளவு கடந்து காணப்படும். அந்த அளவு கடந்த ஆசையை நிறைவேற்ற முடியாத சூழல் காரணமாக ஏற்படுகின்ற தடைகளால், ஆசைகள் நிறைவேற்றப்படுவதில்லை என்பதற்குக் கீழ்க்காணும் காரணமும் ஒன்று எனலாம்.

*"அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்*
*அவா உண்டேல் உண்டாம் சிறிது"* குறள் 1075

மேன்மை தங்கியவர்களாக வாழ முயலாதவர்களின் ஆசாரமானது அச்சத்தால் ஏற்படுவதேயல்லாமல் அருளால் அன்று. அச்சமே முதற்காரணம் மற்றொரு காரணம் ஆசையினால் ஏற்படுவதே. (ஆசை காரணமாக ஏற்படும் நல்லொழுக்கம்) கீழோரின் நல்லொழுக்கம் ஆசை உட்பட்டதே.


## இலக்கிய நயம்

# இன்பத்துள் துன்பம்

தருவது **கற்பகன்**

**அருள்வர்மனின்** முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் செண்பகவல்லி. அவள் நினைத்தது போல் அவன் உடலுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. அவன் முகத்தில் தோன்றி மறைகின்ற பாவங்களில் காணும் மாயா ஜாலங்களில் இருந்து அவன் உறக்கத்திலும் இல்லை என்பது தெளிவாகி விட்டது. உறங்கு வதுபோல் பாசாங்கு செய்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாள் செண்பகவல்லி.

"ஐயோ! பாவம், யாரோ வழிப்போக்கன் போல் இருக்கிறது. இரவைக் கழிப்பதற்கு சத்திரம் சாவடி கூடக் கிடைக்கவில்லைப் போலிருக்கிறது. ஆழ்ந்த உறக்கம் போல் இருக்கிறதே! பரதேசிகளுக்குக் கூடப் பஞ்சணை தேவைப்படுகிறது. பாதகம் இல்லைத்தான் என்றாலும், பாவையருக்கான மலர்



வனத்துக்கு வந்திருக்க வேண்டாம். உறங்கட்டும். அவர் வந்ததும் இவனுக்குச் சரியான தண்டனை வாங்கித் தருகிறேன்" என்று கூறிவிட்டு, மெல்ல எழுந்து செல்வதற்குத் தயாரானாள்.

செண்பகவல்லி சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அருள்வர்மன், வெடுக் கெனத் தாவி செண்பகவல்லியின் தாவணியைப் பிடித்து தன்பக்கம் இழுத்தான். இதைச் சற்றும் எதிர்பாராத செண்பகவல்லி செய்வதறியாது தடுமாறி, அருள் வர்மனின் மடியில் விழ, அருள்வர்மனின் கைகள் அவளைப் பின்னிக் கொண்டன. செண்பகவல்லி அவனிடமிருந்து விடுபடுவதற்காகத் திமிறிக் கொண்டு எழ முற்படுபவள் போல நடித்தாள். ஆனால், அருள் வர்மனின் இரும்புக் கரங்கள் மேலும் இறுகியது. செண்பகவல்லி அவன் மார்போடு சங்கமமானாள். ஆயினும் "வலிக்கிறது விடுங்கள்" என்று கெஞ்சினாள். அதற்கு அவன் "பரதேசியின் பற்றல் அல்லவா? கொஞ்சம் அதிகமாகவே வலிக்கும்" என்றான். பற்றற்றவர்கள் "பாவையரைப் பற்றுவதா? ஆச்சரியமாக இல்லை?" "ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆசையின் கொடுமை" "விட்டுவிடுங்கள் என்னை. என்பெல்லாம் உதிர்கிறது. தென்பில்லை என்னிடம் உங்கள் கைகளைத் தடுக்க" என்றாள் செண் பகவல்லி. "விட்டு விடுகிறேன். ஆனால் தொட்டுவிட மாட்டேன் மறுபடியும் உன்னை" "அப்படியா கெட்டு விடும் உங்கள் சபதம்" "அப்படியானால் பார்த்து விடுவோம் அதை" என்றவன் மறுபக்கம் திரும்பி படுத்துக் கொண்டான்.

அவனைத் தன்பக்கம் புரட்டினாள் செண்பக வல்லி; முடியவில்லை. அவன் அடம் பிடித்தான். அவளால் அதைப் பொறுக்க முடியவில்லை. அவனை விட்டு அகன்று சற்று விலகிச் சென்று விட்டாள். சற்று நேரத்தின் பின் அருள்வர்மன் மறுபக்கமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டு இலேசாகக் கண்களைத் திறந்தான். செண்பகவல்லி அருகில் இல்லை என்பது புரிந்தது. எங்கே போய்விட்டாள் என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தபோது கலக்கம் அவன் மனதில் அரும்பத் தொடங்கியது. மண்டபத்தை அவன் கண்கள் அலசின. வெண்ணிலவின் பேரொளி மண்டபத்தின் சாளரங்கள் வழியாக ஊடுருவி மண்டபத்தையே இருளகலச் செய்திருந்த போதிலும் செண்பக வல்லியின் நிழலாட்டம்கூடத் தெரியவில்லையே! என்றதொரு ஏக்கம் மேலிட மண்டபத்தின் பின் புறத்தை அடைந்தான். சாளரத்தின் அருகில் நின்றிருந்த செண்பகவல்லி, வெண்ணிலவில் தோன்றி மறையும் வர்ண ஜாலங்களை வெறித்துப் பார்த்வண்ணம் நின்றிருந்தாள்.

செண்பகவல்லியின் அருகில் சென்ற அருள்வர்மன், மெதுவாக அவள் கையைப் பற்றி னான். அவள் அதற்குத் தடையோ இணக்கமோ இல்லாததோர் உணர்வற்ற நிலையில் தொடர்ந்தும் வான் வெளியைப் பார்த்தவண்ணம் நின்றாள். அவளை மெதுவாக அருள்வர்மன் முன்பு படுத் திருந்த இடத்துக்கே அழைத்து வந்தான். தொடர்ந் தும் அவள் மௌனம் சாதிப்பது அருள்வர்மனுக்கு மேலும் சங்கடத்தை உண்டு பண்ணியது. ஆனாலும் ஏற்கனவே இருவருக்கும் இடையில் ஏற்பட்ட ஊடல் காரணமாக யார் விட்டுக் கொடுப் பது என்ற சுய கௌரவ உணர்வு தலைதூக்கி நின்றதன் காரணமாகவோ என்னவோ அருள் வர்மன் வாயைத் திறக்கவில்லை.

நாளிகை கடந்தது கூடத் தெரியவில்லை அவர்களுக்கு. நிலத்தையே பார்த்துக் கொண் டிருந்த செண்பகவல்லி, அருள்வர்மனை ஏறிட்டாள். அந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருந்தவன் போல் அருள்வர்மனும் அவள் முகத்தை உற்று நோக்கினான். அதில் தோன்றிய தாபத்தை அளவிட முடியவில்லை அவனால். அந்த நிலையில், வரும்பொழுது ஏதோ கையில் தட்டோடு வந்தாளே என்ற ஞாபகம் அவனுக்கு வந்த போதுதான் என்னவாயிருக்கும் என்று அருகில் இருந்த தட்டைக் கவனித்தான்.

"என்ன இது? பூஜைக்கான நெய்வேத்தியப் பொருட்கள் போலிருக்கிறதே! பால், பழம், பாகுப் பண்டங்கள், பஞ்சாமிர்தம் போன்ற பலவிதப் பண் டங்கள் இவைகளெல்லாம் கொண்டு எங்கே புறப்பட்டு விட்டாய்? மலர் வனத்தில் சன்னதியும் இருக்கிறதா?" என்றான் குறும்பாக.

இதைக் கேட்டதும் செண்பகவல்லியின் கன்னங்கள் அந்த நிலவொளியிலும் செம்மை பட ரத் தொடங்கியதை அருள்வர்மன் கவனிக்கத் தவறவில்லை.

"ஆமாம், சன்னதி தான் இருக்கிறது" என்றாள் செண்பகவல்லி. நிலவை நோக்கியவாறே. "சன்னதி மட்டும் இருந்து பயன்பட்டு விடாதே" - இது அருள்வர்மனின் கேள்வி. "சன்னதி மட்டுமல்ல, என் இறைவன்கூட அந்த சன்னதியில்தான் இருக்கிறான்" "ஓகோ அப்படியா! முன்பு 'அவர்' வரட்டும் என்று கூறியது அந்தத் தெய்வத்தைத் தானோ? அப்படியானால் அவர் வந்தால் என்பாடு என்ன வாகும்? நான் பரதேசி ஆயிற்றே!" என்று அருள்வர்மன் அவள் கையை விடுத்த போது, "போதும். இத்தனை நேரமும் என்னைத் துடிக்கவிட்டு வேடிக்கை பார்த்தது போதாதென்று மீண்டும்... ?" என்றவாறு அவன் கையைப் பற்றினாள் செண்பகவல்லி.

"நான் என்ன செய்தேன்? அவர் வந்ததும் எனக்குத் தண்டனை கிடைக்கும் என்று கூறியது நீதானே? நான் அல்லவே! என்று கூறியதும், "அத்தான் இந்த மலர் வனத்தில் இருக்குமிந்த சன்ன தியில் என் காதல் தெய்வம் நீங்கள் அமர்ந்திருக்க இது வெறும் சன்னதி ஆகிவிட முடியுமா? பால், பழம், பண்டங்கள் அனைத்தும் உங்கள் பாத பூஜைக்காக இந்த அடியவள் எடுத்து வந்த அன்புக் காணிக்கை தான். அர்ச்சனைக்கு மலர் எங்கே என்று கேட்டு விடாதீர்கள். அதற்காகத்தானே அன்பு மலராக என்னையே சமர்ப்பித்திருக்கிறேன். அன்பு மலராய் நானிருக்க ஆசைமலர் நெஞ்சில் தழும்புகின்ற பொழுதில் துன்பமாகப் பொழுது கழிகிறது புரியவில்லையே உங்களுக்கு!"

"புரியாமலில்லை செண்பகவல்லி, புரிகிறது. போதையூட்டும் உன் கிள்ளைமொழி போர்க்களங் காணாத வேல் விழிகள் சிந்துகின்ற கண்ணீர் என் கல்போன்ற நெஞ்சத்தை கரையவைத்து மஞ்சத்துக்கிழுத்துவிடும் மாயா ஜாலமல்லவா? மறுக்கமுடியாது அவைகளை நான் மறக்கவும் முடியாது அன்பே" என்றவன் செண்பகவல்லியை அணைத்தவாறு மண்டகப் படிக்கட்டில் அமர்ந்தான்.

படிக்கட்டிலமர்ந்த அருள்வர்மனின் மார்பில் சாய்ந்து கொண்டாள் செண்பகவல்லி. மார்பில் சாய்ந்தவளின் முகத்தைத் தன்பக்கம் திருப்பினான் அருள்வர்மன். மறுத்தாள் செண்பகவல்லி. "பவளத்தில் தோய்த்த உன் இதழ்களைப் பார்க்க வேண்டும்." "வேண்டாம் உங்கள் பல்வரிசை பொல்லாதது" "பறித்து விடுவேனா என்ன?" "வெளுத்துவிடுமே பாவம்."

"என் செவிகள் மட்டும் என்ன பாவம் செய்தவையா?" என்றவன், அவள் கன்னத்தைக் கடித்துவிட்டுச் சிரித்தான். "சிரிக்காதீர்கள். செண் பகம் ஒரு மலரல்லவா?" அதற்கு வலிமை உள்ள தால் தானே வல்லி என்று அழைக்கிறார்கள். கள்வர் நீங்கள். "எதைக் களவாடினேன்?" "என் கற்பை. அது களவில்லையா? களவியல் என்றாலே கற்பைக் களவாடுவது தானே!" "நீமட்டும் என்னவாம்" "நான் எதைக் களவா டினேன்?" "என்னிடமுள்ள உயிரையே களவாடி விட்டாயே!" "வரவர உங்களுக்கு நாக்கு நீள் கிறது" "வாய்ப்புகளும் அதிகம் தானே" "வம்பை வளர்க்கிறீர்கள்" "வயிற்றில் வளர்ப்பது நானல்லவே" "நீங்கள் என்ன குழந்தையாகி விட்டீர்களோ" "பசி யெடுத்தால் வேறெதை அருந் துவது?" "பாற்கலசம் பக்கத்தில் இருக்கிறதே" "பற்றாமற் போய்விட்டதே" "அத்தனை தாகமோ?" "ஆழ்கடலை விட ஆழமானதுன் மனது" "அப்பப்பா போதும் நிறுத்துங்கள்."

***"துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு***
***நட்பினுள் ஆற்று பவர்"***
(அதிகாரம் : 117 - குறள் : 1165)

## சிந்தியா பதில்கள்

**சிந்தியா, 'தலைநகரம்' எப்படி இருக்கிறது?**

-கா.பிரதாபன், வட்டக்கச்சி

கொழும்பைக் கேட்டிருந்தால் - அது இன்னொரு யுத்தம் வெடிக்கின்றபோது தொடர் குண்டு வெடிப்புகள் இடம் பெறக் கூடிய இலக்காகவுள்ளது. அதில்லாமல் சுந்தர் சி நடித்த படத்தைக் கேட்டிருந்தால் - வழமையான நகரத்து நரகத்தைப் பற்றிய படம். சுந்தர் சியின் நடிப்பு ரசிக்கும் படியாக இருக்கிறது.

**சிந்தியா! நீர் ஆணா? பெண்ணா? ஏன் என்றால் பெயரைப் பார்த்தால் பெண் மாதிரியும் பதில்களில் தெறிக்கும் வீரத்தைப் பார்த்தால் ஆண் மாதிரியும் தெரிகிறது. என் குழப்பத்தைத் தீர்க்கவும்?**

-எஸ்.எம்.ஏ.காதர், மீராவோடை.

ஒவ்வொரு ஆணுக்குள்ளும் ஒரு



சுந்தர் சி – ஜோதிர்மயி
தலைநகரம்

பெண்ணும், ஒவ்வொரு பெண்ணுக் குள்ளும் ஒரு ஆணும் ஒளிந்து கொண்டு தான் இருக்கிறார்கள். உமக்குக் குழப்பம் வேண்டாமே..

**சிந்திக்காமல் முடிவெடுப்பதும், முடிவெடுத்தபின் சிந்திப்பதும் - இரண்டும் தரக்கூடிய விளைவு என்ன?**

-எம்.கரன், வெள்ளவத்தை.

பின்னடைவு அல்லது தவறு.

**முஸ்லிம் தலைவர்கள் சிலர் புலிகளின் அராஜகங்களைக் கண்டிக்கத் துணிந்து விட்டது போல் அவர்களது கருத்துக்கள் வெளிப்படுகிறதே?**

-ஏ.எம்.றிஷ்வான், மூதூர்.

கருத்துக்களிலும் அறிக்கைகளிலும் வெளிப்படுவது செயற்பாட்டில் இல் லையே!

**இந்தோனேசியாவில் பூகம்பம் ஏற் பட்டதே, அதைப்பற்றி என்ன நினைக் கிறீர்கள்?**

-எஸ்.தேவகி, பட்டிருப்பு.

இதுவரையான தகவல்களின்படி 5,100 பேர் வரை இறந்திருப்பதாகவும், 20,000 பேர் வரை காயப்பட்டதாகவும் அறிகிறேன். வெளிநாடுகள் உதவிகளை வழங்கி வருகின்றன. பேரழிவு பற்றிய அனுபவம் சுனாமிக்குப் பின் எமக்கும் தெரியும் என்றபடியால் அவர்களுக்கு ஓடிப்போய் உதவ முடியவில்லையே என்ற ஆதங்கத்துடன் இருக்கிறேன்.

**இனவாதிகளான ஜே.வி.பி.யினர் தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டு மென்று வலியுறுத்தியுள்ளது பற்றி...?**

-எஸ்.தயாநிதி, நெளுக்குளம்.

தன் சார் இனம்பற்றி அக்கறையுள்ள அனைவரும் இனவாதிகள்தான். அதை வெளிக்காட்டுவதில் அவரவருக்கு ஏற்ப அளவு வித்தியாசப்படும். புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு என்பதை ஜே.வி.பி. யினர் இப்படிச் சொல்கிறார்களாக்கும்.

**புலிகளின் அடுத்த நகர்வும் அதன் விளைவும் எப்படி இருக்கும்?**

-ஜே.பரதன், சுதுமலை.

கௌரவமான சமாதானத்தை விரும் பியவர்களுக்கு ஏமாற்றத்தையும் நாளை மீதான நிச்சயமற்ற சூழலையும் உரு வாக்கும்.

**அண்மையில் ஒரு கட்டுரையில் "அருகி வரும் தொழில் நுட்பம்" எனப் படித்தேன். தொழில்நுட்பம் எப்படி அருகி வர முடியும்?**

-ந.அசோக், கோயில்குளம்.

தொழில் நுட்பம் அருகாது. ஆனால் பழைய தொழில் நுட்பக் சாதனங்கள் அருகிவிடும். உதாரணத்திற்கு செல்போன் வருகையினால் பேஜரும், பக்ஸ், ஈ-மெயில் வருகையினால் ரெலக்சும் அருகிப் போய் விட்டனவே.

**ஹீரோ - வில்லன் என்றுதானே சொல்லுகின்றார்கள். ஏன் இந்த மொழிக் கலப்பு? கதாநாயகன் - வில்லன் என இரண்டையும் தமிழிலேயே சொல்லலாம் தானே?**

-பரீனா தமீம், அட்டாளைச்சேனை.

சரிதான் போங்கள். வில்லன் (Vil- lain) என்பது தனி ஆங்கிலச் சொல். நாம்தான் அதனை தமிழாகவே மாற்றி விட்டோம்.

**பத்திரிகைத் துறையில் அதன் உரிமையாளர் முதல் கடைநிலை ஊழியர் வரை யாருடைய பங்கு முக்கியமானது?**

-எம்.ஜெசிக்கா, சுண்டிக்குளி.

நிச்சயமாக ஆசிரியரின் பங்குதான். ஆயிரம் பேர் பணிபுரிந்தாலும் பிரசுரமாகும் ஒவ்வொரு எழுத்திற்கும் முற்றுப்புள்ளிக் கும் பதில் சொல்லவேண்டியவர் ஆசிரியர் தான். தவறான, அவதூறான செய்தி களுக்கு நீதிமன்றத்தில் நிற்கவேண்டியவர் உரிமையாளர் அல்ல. ஆசிரியர்தான்.

**நீண்ட நாட்களாக நான் கொழும்பு வரவில்லை. கோல் பேஸ் எப்படி உள்ளது?**

-கி.ராதாரமணன், நல்லூர்.

தொடர் மழையால் நனைந்துபோய் உள்ளது.(ரொம்ப அவசியமான கேள்வி)

**நீர் சைவமா? அசைவமா?**

-ம.தேன்மொழி, நாவலப்பிட்டி.

இதென்ன கேள்வி? சுத்தமான நீர் சைவம்தான்.

**சமாதான நடவடிக்கையில் பௌர் வித்தியாசமாக செயற்படுவாரா?**

-ரம்ஸி காதர், ஏறாவூர்.

ஆம். சமாதான ஏற்பாட்டாளர்களில் மீசை வைத்து தன்னை வித்தியாசமாகக் காட்டும் ஒரே நபர் அவர்தான்.

**கீரிமலைக் கேணி, கன்னியா வெந்நீரூற்று, மாணிக்கக் கங்கை - எதில் குளிப்பதில் ஆனந்தம்?**

-ஆனந்தி சுரேஸ், கல்லடி உப்போடை.

சுதந்திரமாக வீட்டு குளியலறையில்.

**வெசாக் வாரத்தின்போது சட்ட விரோதமாக மதுபான விற்பனை செய்தோரிடம் கலால் திணைக்களம் அறவிட்ட அபராதம் பல கோடியைத் தாண்டிய செய்தியை படித்தீரா?**

-சதீஸ், உடப்பு.

பறிகொடுத்த அபராதத்தை இரு வாரங்களிலேயே சம்பாதித்து விட்டார் களாம்... கேள்விப்படவில்லையா?

## கடத்தப்படும் பாலியல்....
16ஆம் பக்கத் தொடர்ச்சி.....

மேற்குறிப்பிட்ட 1500 ஸ்ரேலிங் பவுணையும் ஓரிரு மாதங்களிலேயே அந்தப் பாலியல் வியாபாரம் நடத்துவோர் பெற்று விடுவார்கள் என்பதுதான் அதிர்ச்சியான விடயம்.

மேலும் மேற்குறிப்பிட்ட பாலியல் வியாபாரம் நடத்துவோருக்கு மாபியா குழுக்களின் பூரண ஆதரவும் உண்டு. இதன் காரணமாக அந்த அபலைப் பெண்கள் தப்பிச் செல்வது என்பது கனவில்கூட கைகூடாத விடயம்.

ஏனைய விபசார நிலையங்களுக்கும், மேற்குறிப்பிட்ட இளம் பெண்கள் கொண்டு செல்லப்படும் விபசார இடங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்த மனித உரிமை ஆர்வலர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். காரணம் - இங்கு ஒருத்திக்கு ஒருவன் இல்லை. குழுவினருக்கு ஒருத்தி என்றே இயங்கவேண்டியுள்ளது. உதாரணமாக, ஒரு கால்பந்தாட்டப் போட்டி முடிந்து அதனைக் கொண்டாட வரும் ஒரு அணியினருக்கு ஒரு இளம் பெண் வழங்கப்படுவாள். அந்த அனைவரையும் அவள் திருப்திப்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல் குழுவாக மதுபானமருந்த வருபவர்கள், போதைப்பொருள் கூட்டாளிகள் எனப் பலரிடமும் ஒரே நேரம் அப்பெண் சின்னாபின்னப்பட வேண்டி வரும். லண்டன் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி கேற் அலன் வெளியிட்ட தகவல்களின்படி ஒவ்வொரு இளம் பெண்ணும் ஒரு நாளைக்கு 20 பேருக்குக் குறையாத - சராசரியாக 30 பேர்கொண்ட - ஆண்களுடன் உடலுறவு (அதுவும் மோசமான) கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆதாரபூர்வமான அறிக்கையினைப் படித்து அதிர்ந்துபோன பிரிட்டிஷ் அரசு கிரஹம் மகஸ்வெல் மக்கள்வெல் எனும் பிரதி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் 55பேர் கொண்ட விசேட பொலிஸ் அணியினை நியமித்தது.

கிடைத்த தகவல்களின்படி லண்டன் சரே கென்ற் டெவன் கோர்ன்வோல், லங்கேஷியர், யோர்க்ஷெயர், கோர்ட் போர்ட் ஷெயார், பிரமிங்ஹாம். ஆகிய பகுதிகளில் இயங்கிய சட்டவிரோத சதை வியாபார மையங்கள் சுற்றிவளைக்கப்பட்டன. மொத்தமாக 429 அபலைப்பெண்கள் மீட்கப்பட்டனர். 150 சதை வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் திரட்டிய தகவல்களின்படி 2005ஆம் ஆண்டு மட்டும் 1500 இளம் பெண்கள் மேற்படி மையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு சீரழிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தான சகல தொடர்புகளையும் தற்போது லண்டன் பொலிசார் கண்கொத்திப் பாம்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றனர் ஆனால் விபசார வியாபாரிகள் ஓயப்போவதில்லை. எனவே இனிவரும் நாட்களில் இலங்கையில் இருந்து திருமணம் முடிக்க அல்லது குடிபெயருமுன் நம்நாட்டுப் பெண்கள் சற்று நிதானித்து தீர விசாரித்துச் செல்வது நலம்.


## தமிழர் அரசியலில்
05ஆம் பக்கத் தொடர்ச்சி.....

இதன் காரணமாக சம்பந்தரை ஓரம் கட்டிவிட்டு, இன்னொருவரை திருமலையில் முதன்மைப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் புலிகள் எடுத்த முயற்சியில் பலனாகவே திருமலையில் வசித்து வந்த வங்கி ஊழியரும், புலிகளின் தீவிர விசுவாசியுமான நயினா தீவைச் சேர்ந்தவருமான விக்னேஸ்வரன் திருமலை மக்கள் பேரவை எனும் பினாமி அமைப்பின் தலைவராக புலிகளால் நியமிக்கப்பட்டு அவர் தலைமையில் ஹர்த்தால்களும் கடையடைப்புகளும் நடத்தப்பட்டு திருமலையின் சுமூக நிலை புலிகளால் ஸ்தம்பிதம் அடையச் செய்யப்பட்டது. பின்னாளில் சும்மா இருந்த விக்னேஸ்வரன் ஹர்த்தால் விக்னேஸ்வரனாக பிரபலமானார். இது சம்பந்தருக்கு வெட்டப்பட்ட படுகுழி என்பதை சம்பந்தன் புரிந்துகொண்டார். இந்தக் காலப்பகுதியில் மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார். யார் சுட்டது என்பது தொடர்பில் இன்றுவரை தொடரும் சந்தேகங்கள் சம்பந்தருக்கு தனது பாதுகாப்புக் குறித்த கவலையை உண்டு பண்ணியது. அதேவேளையில் ஹர்த்தால்களோடு நின்று வீடுவார் என்று எதிர்பார்த்த விக்னேஸ்வரனை ஜோசப் எம்.பீ.யின் வெற்றிடத்துக்கு நியமிப்பது என்ற திட்டம் புலிகளால் முன் கொண்டுவரப்பட்டது. புலிகளின் இந்த முடிவு சம்பந்தரின் தலைமைக்கும் இருப்புக்கும் கேள்விக்குறியை தோற்றுவித்தது. அதற்கு பின்னராக சம்பந்தர் அநேகமான சந்தர்ப்பங்களின் மௌனம் காத்தார். இந்த இடைவெளியில் எம்.பீ. பதவியைப் பொறுப்பேற்கத் தயாராக இருந்த விக்னேஸ்வரனும் திருமலையில் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜோசப் பரராஜசிங்கத்தின் வெற்றிடம் இன்னும் வெற்றிடமாகவே நீடிக்கிறது. இதுபற்றிய கவலைகளை விடவும் பாதுகாப்புக் குறித்த அச்சம் காரணமாக சம்பந்தர் நாட்டை விட்டு வெளியேறினார். பின்னர் திருகோணமலையில் நடந்த கலவரங்கள், தாக்குதல்களின் போதெல்லாம், சம்பந்தர் ஏன் வரவில்லை. மண்ணின் மைந்தன் எங்கே ஓடி ஒளிந்து விட்டார் என்றெல்லாம் வினாக்கள் மேலெழுந்தன. கூட்டமைப்பு எம்.பீ.க்கள் கூட இதற்கு சரியான பதிலைச் சொல்ல முடியாமல் முன்னுக்குப் பின் முரணான பதில்களைத் தந்தனர். ஆனாலும் மூன்று மாதத்துக்குள் பாராளுமன்றத்துக்கு வருகை தராவிட்டால் பதவி பறிபோகும் என்பதால் நிச்சயம் வருவார் என்று சிலரும், அவர் வரமாட்டார் 1983ஆம் ஆண்டு நாட்டை விட்டுப் போனது போல் போய்விட்டார் என்று சிலரும் தத்தமது விருப்பப்படி கதைகளைக் கட்டி விட்டனர். திருமலை மக்களுக்காக, அவர்களின் படுகொலைகளுக்காக தமிழ் மக்களின் நலனுக்காக மூச்சுக் கூட விடாதிருந்த சம்பந்தன் பதவி பறிபோய்விடக்கூடாது என்பதற்காக சுமார் இரண்டரை மாதங்கள் கழிந்த நிலையில் 26.05.06 திகதியன்று பாராளுமன்றத்துக்கு வந்து தனது பதவியை உறுதிப்படுத்திக் கொண்டதன் ஊடாக சம்பந்தன் எம்.பீ. தமிழர் அரசியலில் மீண்டும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## சாதனை படைத்த ஆர்ஜென்ரீனா



**1978இல்** ஆர்ஜென்ரீனாவில் நடந்த பதினொராவது உலகக் கிண்ணப் போட்டி சர்ச்சைகள் மிகுந்ததாகவும் இருந்தது.

இங்கு இராணுவ ஆட்சி புரிந்த ஜெனரல் விடோலாவின் சர்வதிகாரப் போக்கு மற்றும் மனித உரிமை மீறலை கண்டித்து பல நாடுகள் போட்டியை புறக்கணிக்கப் போவதாக எச்சரித்தன.

பின்னர் இப்பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு காணப்படவே பெரும்பாலான நா:கள் போட்டியில் பங்கேற்க சம்மதம் தெரிவித்தன.

இத் தொடரின் இறுதிச் சுற்றுக்கு முன்னேற இங்கிலாந்து, சோவியத் யூனியன் போன்ற முன்னணி அணிகள் தவறின. பிரான்ஸ் அணி, இத்தாலி, ஆர்ஜென்ரீனாவிடம் தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறியது.

இவ்வாறு நட்சத்திர அணிகள் எல்லாம் மண்ணைக் கவ்விய நேரத்தில், நெதர்லாந்து அணி தனது சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்தது. அவுஸ்திரேலியா (5-1), இத்தாலி (2-1) போன்ற அணிகளை எளிதில் வீழ்த்திய ஆர்ஜென்ரீனா மேற்கு ஜேர்மனிக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தை 2-2 என்ற கோல் கணக்கில் டிரா செய்து இறுதியாட்டத்திற்கு முன்னேறியது.

இதற்கிடையே இறுதியாட்டத்துக்கு தகுதி பெற இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொண்டது ஆர்ஜென்ரீனா இந்த அணி பெருவுக்கு எதிரான ஆட்டத்தில் குறைந்தது 4 கோல்கள் அடித்தால் மட்டுமே, கோல் அடிப்படையில் பிரேஸிலை பின்னுக்கு தள்ளி இறுதியாட்டத்துக்குள் நுழையலாம்.

இந்நிலையில் சற்றும் எதிர்பாராத வகையில் ஆர்ஜென்ரீனா அணி பெருவை 6-0 என்று கோல் கணக்கில் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. இறுதியாட்டத்தில் மரியோ கெம்பரின் அடித்த 2 கோல்களின் உதவியுடன் ஆர்ஜென்ரீனா அணி, நெதர்லாந்தை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி கிண்ணத்தை முதன் முறையாகக் கைப்பற்றியது.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 5, கூட்டெண் - 4

5, 14, 23 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வருமேயானால் இவர்கள் புதன், ராகு ஆதிக்கத்தில் பிறந்தவராவர். பார்ப்பதற்குக் ஓரளவு உயரமாகவும், கவர்ச்சியான தோற்றமுடைய வராகவும் தோற்றமளிப்பர். இவர்களுடைய தலைமுடி அலை போன்று இருக்கும். உடம்பில் நரம்புச் சக்தி கூடியவர்களாதலால் ஆரோக்கிய மானவர்களாகவும், திடகாத்திரமானவர்களாகவும் இருப்பர்.

சுறுசுறுப்பான இவர்கள் எப்பொழுதும் எதையாவது செய்துகொண் டேயிருப்பர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாது. மனதில் தோன்றுகிற கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிடுவர். இதனால் பலருடைய பகைமை ஏற்படலாம். சிலர் வயது ஏற ஏற அனுபவத்தால் தன்னைத் திருத்திக் கொள்வர். இவர்கள் பிறர் கஷ்டங் களைக் கண்டு மனமிரங்கி உதவ முன்வருவர். மற்றவர்களின் துன்பங் களைத் துடைக்க என்ன வழிகள் என்பதையும் ஆராய்ந்து செயற்படுவர். இவர்களுடைய பெயர், பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமையுமேயானால் நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் பெற்று பலர் போற்றும் மனிதராக வாழ்வர். ஆனால் பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமையாவிட்டால் தேவையற்ற விஷயங்களில் இறங்கி, மன அமைதியின்றி அலைந்து திரிவர். அத்துடன் கெட்டவன் என்ற பெயரும் வரும். எங்கு சென்றாலும் போட்டியும் பொறாமையும் எதிர்கொண்டு நிற்கும். வாழ்க்கையில் முன்னேற்றப் பாதையின் கதவுகள் அடைக்கப்படும். இதனால் பெயரை உடனே தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொள்வது அவசியம்.

இவர்களது மனம் எப்போதும் எதைப் பற்றியாவது திட்டம் தீட்டிக் கொண்டே இருக்கும். தொழில் செய்யும் ஆர்வம் மிகுதியுள்ள வர்களாகையால் இந்த எண்ணிக்கையில் பலர் தொழிலும், சிலர் அரசாங்க வேலையும் செய்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஒரு சுதந்திரப் பிரியராதலால் யாருக்கும் அடங்கிப் போவதில்லை. தன் மனத்தில் தோன்றுகின்றபடியே நடப்பர். எப்போதும் சுத்தமாகவும், கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர். வாசனைத் திரவியங்கள்மேல் அதிக நாட்டமுடைய வராகவும் இருப்பர். அத்துடன் இவர்கள் பக்கத்தில் எப்போதும் நண்பர்கள் இருந்து கொண்டே இருப்பர். நண்பர்கள் புடைசூழ வாழும் இவர்களினால் நண்பர்கள் பயன்பெறுவர்.

பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் இவர்களுக்குத் தொழிற்கூடங்கள், வாகனம், வீடு பல்வேறு வழிகளில் பொருள் சேர்க்கை உண்டாகி மிகச் சிறப்பாக வாழ்க்கை நடத்துவர். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் எப்போதும் மனக்கோட்டை கட்டியவண்ணமே இருப்பர். எக்காரியமும் நடக்காது. தடை ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இதனால் இந்த எண்ணிக்கைக்காரர்கள் பெயரை மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம். இவர்கள் பல்வேறு ஊர்களைக் கண்டுகளிப்பதில் ஆர்வம் உள்ளவர்கள். தான் கண்ட காட்சிகளை வருணித்துக் கூறுவதில் கைதேர்ந்தவர்கள். இயற்கைக் காட்சிகளையும், அழகான வீடுகளையும் கண்டுகளிப்பதில் ஆர்வம் கொண்டவர்களாக விளங்குவர். வாகனப் பிரியர்களான இவர்கள் வாகனங்களை அழகாக வைத்துக் கொள்வதிலும் ஓட்டுவதிலும் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக இருப்பர்.

சட்டம், சமயம், சோதிடம் போன்ற பல்வேறு கலைகளில் ஆராய்ச்சி உள்ளவர்களாக விளங்குவர். வழக்கு தீர்ப்பதிலும், பிரச்சினைகளை விவாதம் செய்வதிலும் கைதேர்ந்தவர்கள். தனக்குப் பெயர் நன்கு அமைந்து விடுமேயானால் சிறப்பான வாழ்க்கை அமையும். கல்வி ஞானத்தைக் கொண்டவர்கள் என்பதைவிட இயற்கையிலேயே இவர்கள் ஞானம் உள்ள மனிதராகவும், முன்கூட்டியே தனக்கு வரப்போகும் நல்லவைகளையும், கெடுதல்களையும் அறியும் ஆற்றல் உடையவர்களாகவும் இருப்பர் என்பதே உண்மை. இவர்களை ஏமாற்றுவது சுலபமல்ல. ஆனால் பிறருக்குத் தீங்கு நினைக்காத இவர்களை யாரும் எதிர்க்க நினைத்தால் எதிரியை எப்படியும் சின்னா பின்னமாக்கிவிடுவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பல நண்பர்கள், முதல் இல்லாமலே தொழில் ஆரம்பித்து இன்று இன்கம் டாக்ஸ் கட்டு வதை நானறிவேன். பெயர் பொருத்தமானதாக அமையுமேயானால் இவர்களுக்கு என்றும் ஆண்டவன் அருள்புரிந்து கொண்டேயிருப்பார்.

***தொழில்:***

இவர்களுக்கு வாய் சாமர்த்தியத்தால் பணம் ஈட்டக்கூடிய தொழில் அனைத்தும் சிறந்தவையே. காண்ட்ராக்ட், கமிஷன், ஏஜன்சீஸ், நான்கு கால் பொருள்கள், வாகனங்கள், இரும்பு சம்பந்தப்பட்ட தொழில் போன்றவைகள் மூலம் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவர்.

***நோய்:***

இவர்களுக்கு முன்கோபம் அதிகம் வருவதால் நரம்புத் தளர்ச்சி, இருதய வியாதி, இரத்தக் கொதிப்பு போன்றவைகள் வர வாய்ப்புள்ளது. கோபத்தைக் குறைத்துக்கொள்ள பழகிக் கொள்ளுதல் வேண்டும். உஷ்ண சம்பந்தப்பட்ட வியாதிகளும், மூத்திரப்பை கோளாறுகளும் வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை:***

புதன், ராகு ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்குப் புதன், சூரியன், சுக்கிரன் ஆதிக்கமான 14, 23, 32, 41, 50, 59, 77; 19, 37, 46, 64; 15, 24, 33, 42, 60, 69 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

| | |
|---|---|
| யோகமான எண் | - 5, 1. |
| யோகமான திகதிகள் | - 5, 14, 23; 1, 10, 19, 28; 6, 15, 24. |
| யோகமான மோதிரக்கல் | - வைரம், ஜிர்கான், கோமேதகம். |
| யோகமான நிறம் | - வெளிர் மஞ்சள், வெளிர் நீலம், சாம்பல் நிறம். |
| ஆகாத நிறம் | - கறுப்பு. |
| ஆகாத திகதிகள் | - இல்லை. |

*அடுத்த வாரம் பிறப்பெண் 5, கூட்டெண் 5 பற்றிப் பார்ப்போம்.*

## செருப்பு : போவோம்.......
6ஆம் பக்கத் தொடர்ச்சி....

அப்படிப்போல் செருப்புகளுக்கும் இப்படியான சந்திப்புக்களில்தான் கொண்டாட்டமாக இருக்கும் என்று நினைத்துக் கொள்வேன். ஆனால் மனிதன் தன் கேவலமான முகத்தை அடிக்கடி செருப்புகளிடம் காட்டி விடுகிறான். தான் அணிந்து வந்த செருப்பை விட்டுவிட்டு, இன்னொரு புதுச் செருப்பை அணிந்து கொண்டு போய்விடுவான் அல்லது உரியவனுக்குக் கிடைக்காதபடி எடுத்து மறைத்து வைத்துவிட்டுப் போய்விடுவான். இப்படியான சம்பவங்களின்போது பாவம் செருப்புகளுக்குத்தான் உரியவனின் திட்டு இருக்கும்.

செருப்பை பராமரிப்பவர்களிடத்திலும், செருப்பை தைப்பவர்களிடத்திலும் செருப்புக்கு தனி மரியாதை எப்போதும் உண்டு. செருப்புக்கும் தண்டவாளத்துக்கும் ஒரு ஒற்றுமையுண்டு. அவை எப்போதுமே ஜோடி பிரிவதுமில்லை; ஜோடி சேர்வதுமில்லை. அருகருகே இருந்து கொள்வதுதான் உபயோகமானது. ஆனால் பட்டி அறுந்து போனாலோ தொலைக்கப்பட்டு விட்டாலோ ஒற்றைச் செருப்பை வீதியில் வீசிவிட்டுப் போகும் நன்றி கெட்ட மனிதத்தை நினைத்து செருப்பு சிரித்துக் கொண்டே கிடக்கும்.

செருப்புப் பற்றி எழுதுகின்றபோது மூன்று சம்பவங்கள் என் ஞாபகத்துக்கு வருகின்றன.

ஒரு தடவை சுவாமி விவேகானந்தர் வீதியால் வந்து கொண்டிருக்கும் போது, செருப்பு இல்லாமல் பாடசாலைக்குப் போகமாட்டேன் என்று அடம்பிடித்த மாணவனிடம் கால் இல்லாத ஒரு மாணவனைக் காட்டி, கால் இல்லாததை விடவும் செருப்பு இல்லையென்பது பெரிய விடயமில்லை என்று கூறினாராம்.

இதைப்போல் உலகப் புகழ்பெற்ற நகைச்சுவை மன்னன் சார்ளி சாப்ளினை உலகம் பேசும்படியாகச் செய்த அவர் நடித்த பேசாத படத்தில் மக்களின் மனதைத் தொடும் நோக்கத்தோடு சாப்ளின் வலது இடமாக மாறிமாறி செருப்புகளைப் போட்டுக் கொண்டு நடித்தார். ஒருகட்டத்தில் ஒருகாலில் செருப்பும் மற்றக் காலில் சாக்குகளைக் கொண்டு சுற்றிக் கட்டிக் கொண்டும் நடித்தார். சாப்ளினின் அந்த மாற்றம் அவருக்கு ஒரு அடையாளமாகவே மாறிவிட்டது.

அதுபோல் 1994ஆம் ஆண்டு தமிழகத்தில் கலைஞரின் தலைமையில் - தற்போதைய முதல்வர் - ஆட்சி அமைந்தபோது தி.மு.க.வின் அரசியல் எதிரியான அ.தி.மு.க.வின் தலைவி செல்வி ஜெயலலிதாவை சிறையில் அடைத்து அவரது வீட்டை சோதனை போட்ட பிறகு தெரிவிக்கப்பட்ட தகவலில் அவரின் ஆயிரம் ஜோடி செருப்புகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக ஒரு செய்தி வெளியாகியது. அந்தச் செய்தி அவரின் கைதை விடவும் பரபரப்பாக இருந்தது.

இந்த மூன்று சம்பவங்களும் செருப்பு பற்றிய முக்கியமானவையாக எனக்கு அடிக்கடி ஞாபகத்துக்கு வந்துபோவன. பூனைக்கு எலி; நாய்களுக்கு செருப்பு. செருப்புகளைப் பற்றி நாய்களுக்கு என்ன தெரியும்? வாயில் கௌவிக் கொண்டுபோய் அடுத்த வீட்டிலோ, பக்கத்துத் தோட்டத்திலோ போட்டு விடுகின்றன. பாவம் செருப்புகள்! கால்களின் உதவியில்லாமல் வீடு வந்து சேராமல் தவித்துக் கிடக்கும்.

செருப்பு அணிந்திருக்கும் பெண்களிடம் ஆண்கள் சில்மிசம் பண்ணுவதில்லை என்று ஒரு ஆய்வு கூறுகிறது. பெண்களின் அவசரத்தில் செருப்பு காலில் இருந்து கைக்கும் தாவி விடுகிறது. யார் சொல்லிக் கொடுத்ததோ செருப்பை ஒரு தற்காப்பு ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்று. இதற்காக சில இளசுகள் கோயில்களுக்கு உள்ளேயே தங்கள் விருப்பங்களைச் சொல்வது ஆரோக்கியம் என்று நினைக்கிறார்கள். செருப்புக்கு முன்னால் சொல்ல முடியாததை, சாமிக்கு முன்னால் சொல்லிவிட முடிகிறது. சில காதல்களைச் சேர்த்து வைத்த செருப்புகளும் உண்டு.

முதல் விபத்தில் செருப்புத் தூக்கிய பெண்கள், அதற்காக வருந்தி வருந்தி, காதல் வயப்பட்டுப்போன கதைகளுக்கும் செருப்புகளே சாட்சி.

செருப்பு வாசலில் கிடப்பதை வைத்து அந்தச் சூழலை கணக்கிட்டுக் கொள்ள முடியும் என்பார்கள். வாசல் அருகில் நேர்த்தியாக கழற்றப்பட்டிருந்தால் வந்தவர் பிரச்சினையில்லாமல் இருக்கிறார் என்றும், முன்னும் பின்னுமாக வந்திருந்தால் பதற்றத்தோடு வந்திருக்கிறார் என்றும், வாசலுக்கு நேராகவோ - பக்கமாகவோ சற்றுத்தூரமாகக் கழற்றப்பட்டு இருந்தால் கடனுக்கோ உதவிக்கோ வந்திருக்கிறார் என்றும், வாசலிலோ அல்லது வாசலுக்கும் வீட்டுக்கும் இடையிலோ கழற்றப்பட்டால் உரிமையுடன் அல்லது நெருக்கத்துடன் வந்திருக்கிறார் என்றும் புரிந்து கொள்ளலாம்.

அதேபோல் ஒருவர் இருக்கிறாரா, இல்லையா என்பதையும் செருப்பு கிடப்பதைக் கொண்டு புரிந்துகொள்ளலாம். இறுதியாக நான் குறிப்பிட்டது கடன் கொடுத்தவர்களுக்கும் கடன் வாங்குபவர்களுக்கும் விதிவிலக்கு. அந்தக் கொடுமையை கடன் வாங்கியவர் தான் ஒரு நாள் சொல்லவேண்டும். தன்னை அணிந்து கொள்பவரோடு செருப்பு எவ்வளவு தூரம் ஒன்றிப் போய் விடுகிறது என்பதை உரியவரின் கால்களை நுழைக்கும்போது பழக்கப்பட்டதான ஒரு உணர்வு வரும். அதைக் கொண்டு உணர்ந்து கொள்ளலாம். செருப்பைப் பற்றிக் கூறும் போது முக்கியமான மற்றுமொரு விடயமும் உண்டு. அதாவது செருப்புகளைக் கொண்டே இன்னார் இன்ன இடத்தில் இருக்கிறார் என்று கண்டுபிடித்து விடலாம், செருப்பு மனிதனிடம் கேட்பதெல்லாம் ஒன்றுதான்; மனிதர்களே இன்னொருவரை தாக்குவதற்கு எங்களைத் தூக்கி அடிக்காதீர்கள். இன்னொருவரை அவமானப்படுத்துவதற்கு எங்களை மாலையாக்கி அணிவிக்காதீர்கள் உங்களையும், உங்கள் பாவங்களையும் சுமந்து சுமந்து தேய்ந்து போகும் எங்களை பூஜிக்க வேண்டாம். புண்படுத்தாதீர்கள்" என்பதாத்தான் இருக்கமுடியும்,

இனியாவது செருப்புகளைப் பற்றி சிந்திப்போம் அனுபவிப்போம்.

# வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற எட்வர்ட் - டி - வேர் (கி.பி. 1550 - 1604 நூற்றாண்டு)

சென்றவாரத் தொடர்ச்சி

**எனினும்,** இந்த நேர்விலுங்கூட, பெரும்பாலான நேர்வுகளில் போலவே, ஒரு முழுமை, அதன் எந்தவொரு பகுதியையும்விட, பெரிது என்பதே எண்பிக்கப்பட்டுள்ளது. அதிகாரப்பூர்வமான வரலாற்றை ஏற்றுக் கொள்வதில் ஓரிரு இடர்பாடுகள் மட்டுமே இருந்தால்கூட, அவற்றுக்காக வலிந்து கூறப்படும் விளக்கங்களை நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், இந்த விளக்கங்களில் ஒன்றுகூட அதிகார பூர்வ வரலாற்றுக்கு இயல்பாக பொருந்தவில்லை என்னும்போது, நாம் எதுவும் செய்வதற்கில்லை. இந்தக் கதையில் கண்டுள்ள ஒவ்வொரு செய்திக்கும் வலிந்து கூறும் வரிவான விளக்கங்கள் தேவைப்படுகின்றன. இதற்கு காரணம் இதுதான். ஸ்டிராட் ஃபோர்ட் - ஆன் - ஆவோனைச் சேர்ந்த வில்லியம் சேக்ஸ்பியர், ஒரு சிறிய நகரைச் சேர்ந்த ஒரு வணிகர்; மிகக் குறைந்த அளவே கல்வியறிவுடையவர். அவருடைய கல்வி, அவரைப் பற்றி அவர்



குடும்பத்தினரும் அண்டை அயலாரும் கூறியவை, இவற்றில் எதுவும், அவர் புகழ் பெற்ற எழுத்தாளர் வில்லியம் சேக்ஸ்பியர் என்பதற்குப் பொருத்தமுடையனவாக இல்லை.

சரி, நாடகங்களை இயற்றிய எழுத்தாளர், சேக்ஸ்பியர் இல்லையென்றால், அவர் யார்? வேறு பலரின் பெயர்கள் கூறப்படுகின்றன. இவர்களில் குறிப்பிடத் தக்கவர் புகழ்பெற்ற தத்துவ அறிஞர் ஃபிரான்சிஸ் பேக்கன் (Francis Bacon ) ஆவார். ஆனால், அண்மை ஆண்டுகளில், அவர் எட்வேர்ட் - டி - வேர் தான் என்பதற்கு ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன.

எட்வர்ட் - டி - வேர் பற்றி நிறையச் செய்திகள் உள்ளன. அவர் தம் வாழ்வில் பல வீர

## உலகை வியக்க வைத்தவர்கள்

சாகசங்களைப் புரிந்துள்ளார். அவருடைய வாழ்வில் நடத்த பல நிகழ்ச்சிகள், நாடகங்களில் இடம்பெற்றுள்ளன. அவர் 1550 இல் பிறந்தவர். 16 ஆவது ஆக்ஸ்போர்ட் கோமகனின் (16th Earl of Oxford ) மைந்தன்; செல்வம் கொழிக்கும். உயர் குடியைச் சேர்ந்தவர். நார்மானியர் வெற்றி பெற்ற (Norman Conquest ) காலத்திலிருந்து இவருடைய குடும்பத்திற்குக் கோமகன் பட்டம் வழங்கப்பட்டு வந்தது. அந்தப் பட்டத்திற்குரிய வாரிசாக விளங்கிய இளம் எட்வர்ட், ஓர் இளம் கோமகனுக்குரிய தேர்ச்சித் திறன்கள் அனைத்திலும் பயிற்சி பெற்றார். குதிரையேற்றம், வேட்டையாடுதல், இராணுவக் கலை, இசை,நடனம் எல்லாம் முறையாக கற்றுத் தேர்ந்தார். உயர்கல்வியும் கற்றார். தனி ஆசிரியர்களிடம் ஃபிரெஞ்சு, லத்தீன் மொழிகளும் மற்றப் பாடங்களும் பயின்றார். இறுதியில், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டமும் (Bachelor's Degree) ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் முதுகலை பட்டமும் (Master's Degree ) பெற்றார். லண்டனிலுள்ள புகழ்பெற்ற வழக்குரைஞர் கழகத்தைச் (Inn of Court ) சேர்ந்த கிரே சட்டக் கல்லூரியில் (Grays's Inn ) ஓராண்டு சட்டம் பயின்றவர்.

எட்வர்டின் 12 ஆம் வயதிலேயே அவர் தந்தை காலமானார். அவர் தாய் பின்னர்மறுமணம் செய்து கொண்டார். எனினும், எட்வர்ட் தம் தாயுடன் அதிக நாட்கள் தங்கியிருக்கவில்லை. மாறாக அவர் அரசவைக் காப்பாண்மையின் கீழ் (Royal Ward ) வந்தார்; அவருக்கு ஓர் காப்பாளர் (Gardian ) நியமிக்கப்பட்டார். அவருக்குக் காப்பாளராக அமர்த்தப்பட்டவர் இங்கிலாந்து நிதி அமைச்சர் (Lord Treasurer on England ) வில்லியம் செசில் (William Cecil ) ஆவார். இவர் எலிசபெத் அரசியாரின் அரசப் பேரவையின் (Privy Council ) ஓர் உறுப்பினராக பல ஆண்டுகள் பணியாற்றியவர். அரசியாரின் மிகுந்த நம்பிக்கைக்குரிய மூதறிஞராகவும், ஆலோசகராகவும் விளங்கிய செசில், இங்கிலாந்தில் மிகவும் வல்லமை வாய்ந்த பிரமுகராகத் திகழ்ந்தார்.

வியப்புக்கள் தொடரும்....

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

**சம்பந்தன்** ஐயா வரமாட்டார் எண்டு தான் பலபேர் சொல்லிக் கொண்டிருந்திச்சினம். ஆனால் என்ர மனசு மட்டும் அவர் வருவார் வருவார் எண்டு நூறு வீதம் கென்போர்மா இருந்துச்சுது. ஏன் தெரியுமோ? மூன்று மாசத்துக்கு மேல அவர் பார்ளிமெண்டுக்கு வரயில்லையெண்டால் பதவியை இழக்க வேண்டியிருக்கும் எண்டதாலை அவர் எப்புடியும் கிளைமாக்சில சினிமாவில ஹீரோ வார மாதிரி வந்துடுவார் எண்டு நினைச்சனான். நான் நினைச்சது சரியாயிட்டுது. கதாநாயகன் வந்துட்டார்.

பார்ளிமெண்டில அவரைக் கண்டுபோட்டு என்ன, எப்புடி இருக்கிறியள் எண்டு ஒருக்காக் கேட்டுப்போட வேணும் எண்டிட்டு முன்னுக்கும் பின்னுக்கும் ரை பண்ணிப் பார்த்தேன். ம்....ஹூ...ஆள் பிடிபடமாட்டன் எண்டிட்டார். சரி, சாப்பாட்டுக்கு வரத்தானே வேணுமெண்டிட்டு கெண்டினில வெயிட் பண்ணினன். வசமா வந்து மாட்டிக் கொண்டார். நானும் சாப்பாட்டைப் போட்டுக் கொண்டு அவருக்குப் பக்கத்தில போய் இருந்து கொண்டு மெதுவா ஆரம்பிச்சன். பிறகு என்ன நடந்ததெண்டு தொடர்ந்து படியுங்கோவன்.

***கா.பூ :-*** *ஐயா வணக்கம்...*

***சம் :-*** இவ்விதமான வணக்கம் சொல்லுற உங்களை உடன ஞாபகத்துக்குக் கொண்டு வர முடியாமல் இருக்குது. ஆனால் சந்திச்சிருக்கிறன்.

***கா.பூ :-*** *என்ன உப்பிடி சொல்லிப் போட்டியள்? நாட்டை விட்டு ஓடி ரெண்டு மாசம் இருந்தாப் போலை பழகினவை எல்லாத்தையும் மறந்திட்டியளோ?*

***சம் :-*** நீர்...நீர்...கா.பூ.தானே!

***கா.பூ :-*** *சரியாச் சொன்னியள்...அது சரி, என்ன திருகோணமலையில மக்கள் படுகொலை செய்யப்படேக்கையும், இடம் பெயரேக்கையும் என்ன ஏது எண்டு கண்டுகொள்ளாம விட்டுட்டியள். உங்கட வொயிசைக் கூட கேக்க முடியலையே?*

***சம் :-*** அவ்விதமான பிரச்சினைகள் நடக்குதெண்டு எனக்கு யாரும் அறிவிக்கவுமில்லை. எனக்குத் தெரியவும் இல்லை. எண்டாலும் அதுக்கெல்லாம் சேர்த்துத்தானே இண்டைக்கு பார்ளிமெண்டில வொயிஸ் குடுத்தனான்.

***கா.பூ :-*** *ஓம்...ஓம்... கேட்டனான்... கேட்டனான். எண்டாலும் அந்த மண்ணின்ர மைந்தன் எண்டு சொல்லிக்கொள்ளுற நீங்கள் ஒருக்கா நேரடியாப் போய் அந்த மக்களுக்கு ஆறுதலா ரெண்டு வார்த்தை சொல்லியிருந்தால் நல்லா இருந்திருக்கும் எண்டு நினைக்கிறன்.*

***சம் :-*** இங்க பாரும் கா.பூ... ஜோசப்பர் சாகும் வரைக்கும் உந்த மாதிரி நானும் துடினமா திரிய வேணும் எண்டு நினைச்சனான். ஆனால் அந்த இழப்புக்குப் பிறகு எனக்கு உண்மை யிலேயே பயம் வந்திட்டுது. யாரைப் பாத்தாலும் கொலைகாரர் போலவே தெரியினம். இல்ல நான் தெரியாமல் கேக்கிறன், நான் உயிரோட இருக்கிற படியாத்தானே உப்பிடி கேள்வி கேக்கிறியள் இல்லாட்டில் யாரிட்டக் கேப்பியள்?

***கா.பூ :-*** *அப்புடியெண்டால் மக்களையும் சந்தேகிக்கிறியளோ, இல்லாட்டில் புலிகள் மீதே உங்களுக்கு சந்தேகமோ...?*

***சம் :-*** சா...சா... அவையை இதுக்குள்ள இழுக்காதையும், மக்களைப் பற்றி கதைப்பமே. முன்னம் ஒருக்கால் உங்கட பத்திரிகையிலதான் படிச்ச ஞாபகம். சும்மா கிடந்த கம்பியை வளைச்சு சூலாயுதமெண்டு குத்தினாப் பிறகு அது இப்ப ஆடு கொண்டு வா எண்டு கேக்குதாம் எண்டு. அது போலை நாங்கள் பொலிரிக்ஸில பழம் திண்டு கொட்டை போட்டு அனுபவ முதிர்ச்சி யோடை இருக்கேக்க,அவை அரசியல் பணி யெண்டு வரேக்க, உந்த சனம் என்ன செய்திச்சினம்? ஏதோ காவடி தூக்கிக் கொண்டு வருமாப் போலை தோளில தூக்கிக் கொண்டு வந்திச்சினம். இப்ப சனியன் காலைப் புடிச்சுக் கொண்டு கிடக்கு எண்டினம். உதுக்கு நான் என்ன சொல்ல முடியும்.

***கா.பூ :-*** *அப்புடியெண்டால் சனத்தை உப்பிடியே கைவிட்டுப் போட்டு என்ன செய்யப் போறியள்?*

***சம் :-*** கைவிட மாட்டம். எங்கட தமிழ் மக்களின் மீதான படுகொலைகளையும், வன்முறைகளையும் நீடிக்கச் செய்து, பிறகு அதை சர்வதேச சமூகத்துக்குக் காட்டி பிரசாரம் செய்வம்.

***கா.பூ :-*** *சரி, இதுவரைக்கும் என்னவிதமாக இந்தப் பிரச்சினைகளைப் பற்றி சர்வதேச சமூகத்துக்கு தெளிவுபடுத்தியிருக்கிறியள்?*

***சம் :-*** அவ்விடயமாக எங்களது சிந்தனையில் இருக்கிறது. அதுபற்றி சிந்திக்கின்றோம்.

***கா.பூ :-*** *இவ்விதமாகப் பொறுப்பில்லாம நீங்கள் பதில் சொல்லலாமோ?*

***சம் :-*** பொறுப்பில்லாமல் எண்டில்லை. இதை திட்டவட்டமாக நாங்கள் மறுக்குறம். எங்கட நிலைப்பாட்டை நாங்கள் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கிறம்.

***கா.பூ :-*** *ஊடகங்களுக்குச் சொன்னியள் அது சரி, சொன்ன விஷயங்களை நடைமுறைப் படுத்தினீர்களா? அப்புடியெண்டால் இதுவரைக்கும் நீங்கள் செய்த பணி என்ன?*

***சம் :-*** உந்தக் கேள்வி எங்கள் மேல சேறு பூசும் கேள்வி. நீங்கள் கேக்குறதைப் பார்த்தால் நாங்கள் ஏதோ ஊடகங்களைக் கூப்பிட்டு தொண்டைத் தண்ணி வத்தக் கத்திப் போட்டு போறதாகவும், உருப்படியா ஒண்டையும் செய்யிற தில்லை எண்டும், யாரையும் நாங்கள் சந்திப்ப தில்லை எண்டும், இதுக்குக் காரணம் எங்கள் கூட்டமைப்பு எம்.பி.மார்களுக்குள்ளே ஒற்றுமை யில்லாதபடி அடிபட்டுக் கொள்வதால் தான் ஒற்றுமையாக நாங்கள் எதையும் செய்வதில்லை. எண்டும் உதாரணங்களை முன் வைக்கிறீர்கள்.

***கா.பூ :-*** *இவ்விதமாக உங்கட வாயாலையே கொட்டிப் போட்டியளே. சே...வர வர ரொம்பவும் தான் நேவசாகிப் போறியள். கூல் டவுன்... கூல் டவுன்...இந்தாங்கோ கூல் குடிங்கோ. நான் பிறகு ஒரு தடவை சந்திக்கிறன். பாய்...பாய்...*

யாவும் கலப்படமற்ற கற்பனை

# இந்த வாரம் உங்கள் பலன்

(01.06.2006 தொடங்கி 07.06.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

இடபம் - சூரியன். மிதுனம் - புதன். கர்க்கடகம் - சனி, செவ்வாய். கன்னி - கேது. துலாம் - வியாழன். மீனம் - இராகு. மேடம் - வெள்ளி.
சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு, பிரயாண மிகுதி, பணவரவு கஷ்டம், உறவினர் உபத்திரம், குடும்ப மேன்மை, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் கஷ்டம், மனப்பயம், வீண் பிரயாசம், வெளியிட வாழ்க்கை, கடன் சுமை, கௌரவக் குறைவு, குடும்பப் பகை, உத்தியோக நன்மை, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, குடும்ப கலக்கம், செலவு மிகுதி, உத்தியோக சிரமம், வீண்துயர், மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் அலைச்சல், பணியாளர் தொல்லை, மனக்கலக்கம், தேகசுகக் கஷ்டம், வெளியிடப் பிரயாணம், உறவினர் உபத்திரம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் கவலை, செலவு மிகுதி, கடன்படல், பிரயாண மிகுதி, உறவினர் உபத்திரம், வெளியார் உதவி, மனப்பயம் நீங்கும், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், மன மகிழ்ச்சி, அந்நியர் சகாயம், பெரியோர் உதவி, குடும்பப் பாரம், உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் பலிதம், செலவதிகம், கடன் தொல்லை, உறவினர் உதவி, எதிர்பாரா பிரயாணம், குடும்பச் சுகம், உத்தியோக மாற்றம், மக்கலக்கம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.)
தொழில் கெடுதி, பணியாளர் தொல்லை, மறைமுக எதிர்ப்பு, வீண்குறை கேட்டல், பெரியோர் உதவி, இனசன மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 01.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.)
தொழில் சிறப்பு, காரியானுகூலம், கடின உழைப்பு, பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி, அந்நியர் உதவி, குடும்பச் சுமை, உத்தியோகப் பகை, பதவி மாற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் பலிதம், பணவிரயம், எதிர்பாரா செலவு, உறவினர் தொல்லை, தூர இடப்பயணம், இனசன மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் சிக்கல், காரியக் கெடுதி, வீண்துயர், புதிய முயற்சி, கடிக உழைப்பு, குடும்பப் பொறுப்பு, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், வெளியார் தொல்லை, தேகசுகக் கஷ்டம், வைத்தியச் செலவு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை
கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |




## ஒன்றுகூடல்

**ஒவ்வொரு** நகைச்சுவைக் கலைஞர்களின் மறுபக்கமும் ஏதோ ஒரு சோகத்தையே கொண்டிக்கும் என்பது ஒரு கதை. இங்கோ உலகில் இருக்கும் எல்லா நகைச்சுவைக் கலைஞர்களையும் ஒன்று திரட்டி ஒன்று கூடல் ஒன்றை நடத்தியிருக்கிறார்கள். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள். கிட்டத்தட்ட உலகில் உள்ள 850 நகைச்சுவையாளர்கள் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றினார்களாம். இவர்களுக்காக இருக்கும் பழமைவாய்ந்த சங்கமான உலக நகைச்சுவையாளர் இதனை ஒழுங்கு படுத்தியிருந்ததாம்.



## சின்னஞ்சிறிசு



**பறவைகளில்** காணப்படும் அபூர்வங்கள் சொல்லி முடியாதவை. இங்குள்ள பறவையும் அப்படியே இப்பறவை இனம் உலகிலேயே மிகச் சிறிய பறவை இனம் என்ற பெருமையை பெற்றது. கூவும் பறவை என அழைக்கப்படும் இப்பறவைகள் கியூபா நாட்டில் அதிகமாக காணப்படுகின்றதாம். இதன் நீளம் 57மி.மீ. இதன் நிறை 1.6 கிராம் ஆகும். ஆனால் இதன் குரல் மிகப் பெரிய பறவைகளின் குரலையொத்ததாகும்.

## பலவான்

**சிலந்திகளில்** சில வகை நன்மையானவை. சில வகை விஷம் உள்ளவை. ஆனால் இங்குள்ள சிலந்தியாரோ. விஷத்துடன் பலமும் கூடியவராம். இதன் பலம் இதன் உடல் எடையை விட 38 மடங்கு சக்தியை எதிர்க்கக் கூடியதாம். கலிபோர்னியா காடுகளில் காணப்படும் இவ்வகை சிலந்திகளின் பலம், கதவு ஒன்றின் மறுபுறம் இலகு ரக விமானமொன்று மோதுகையில் அதனை ஒரு காதாரண மனிதன் தாங்குவதற்கு சமனானதான இருக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

## மூளைசாலி

**மூளை** அதிகமாக இருந்தால் அதிக மூளைசாலிகளாக இருப்பார்கள் என்பதெல்லாம் படு பொய்யான விடயம் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இங்கிருப்பது ஒரு கடல் சுறா மீன் இனத்தைச் சேர்ந்த ஸ்பார்ம் எனப்படும் சுனா இனமாகும். இதன் மூளை மட்டும் 9 கி.கி. நிறையுடையதாம். (19 இறாத்தல்) இதன் உடல் பரப்புகளில் இயக்கங்கள் அதிகமாக இருப்பதால் தான் இதற்கு இவ்வளவு பெரிய மூளையாம். மற்றும் படி யோசிக்கவோ செயல்திறனுடன் செயல்படவோ இம் மூளை பயன்படாதாம். இதற்கடுத்ததாக ஆபிரிக்க கடல் நாய்களின் மூளையின் நிறை 5.4கி.கி. ஆகும். ஆனால் மனிதனின் மூளை ஆக 1.5 கி.கி. தான் நம்புவீர்களா.



## தாய்மை

**பண்டா** எனப்படும் அரிய வகை கரடி இனங்கள் தற்போது அருகி வருகின்ற இனமாக மாறி வருகின்றன. இவற்றைப் பாதுகாக்க உலக நாடுகள் பெரும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இங்குள்ள பண்டா கரடி கர்ப்பம் தரித்து சாதனை படைத்துள்ளது. அதாவது இந்த பண்டா கரடி குட்டி ஈனுவதற்கு 200 நாட்கள் எடுத்ததாம். சராசரியாக பண்டாக் கரடிகள் கர்ப்பம் தரித்து குட்டி ஈனுவதற்கு 95 - 160 நாட்கள் தான் எடுக்குமாம். அதிக நாட்கள் கர்ப்பத்தில் இருப்பதும் ஒரு சாதனை தான் பார்த்தீர்களா?



## கிரெடிட் கார்ட்

**நவீன** உலக மாற்றங்களினால் கிரெடிட் கார்ட் பாவனை இப்பொழுது அதிகரித்துள்ளது. இதனால் நன்மைகளும் தீமைகளும் சரிக்கு சமனாகவே இருக்கிறது. அருகிலிருப்பவர் கிரெடிட் கார்ட் மோகம் உடையவராம். இவர் கிட்டத்தட்ட 1,497 கிரெடிட் கார்ட்டுகள் வைத்திருக்கிறாராம். இவற்றின் மதிப்பு 1.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.



## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து / 27.05.2006

### செல்வி ர.நிவேதா

வல்லியாவத்தை, கரணவாய், மேற்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட ரவிகரன் - புஸ்பமதி தம்பதியரின் செல்வப் புதல்வி நிவேதா, தனது முதலாவது பிறந்த நாளை 27.05.2006 அன்று சுவிஸில் உள்ள 'ஜீது' இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அப்பா - அம்மா, அண்ணா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அப்பப்பாமார், பாட்டிமார், அன்ரா, பூட்டன் - பூட்டி மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் நிவேதாவைப் பல்லாண்டு காலம் வாழ்கவென அன்புடன் வாழ்த்தினார்கள்.

*தகவல்: K.Ravikaran, Hasalweg - 058500, Frauenfel, Swiss.*

